(இ-ள்) துணைவர்ப்பிரிந்து-கணவரைப்பிரிதலினாலே—தொய்யில்-சந்தனக்கோலத்தையெழுதப்பெற்ற—முலைகள்-தனங்களானவை—பசப்பூர-வேறுபட்டநிறத்தையுடைய—துயிறுறந்த-நித்திரையையொழிந்த—மையல்-மயக்கத்தையுடைய—மடவார்-வனிதையரது—உயிர்-ஆவியை—கவர்வான்-கொள்ளையிடும்பொருட்டு—கூற்றும் போல-கூற்றுவனைப்போல—வருமதியே-வருகின்றசந்திரனே—ஐயமிலை-அதற்குச்சந்தேகமில்லை—உன்-உன்னுடைய—உடற்களங்கம்-உடலினுள்ளகறையானது—அழலும்-சுடாநின்ற—கொடிய-கொடுமைபொருந்திய—விடமன்றே-நஞ்சமன்றே—வெய்ய-வெவ்விய—பகுவாய்-பிளப்பாகிய வாயையுடைய—கரும்பாந்தள்-ராகுவெனும்பாம்பானது—விழுங்கி-உண்டு ஆற்றாது-தாங்கமாட்டாமல்—உமிழ்ந்தது-கக்கியது—எ-று. (கருத்து) மாதருயிரைக் கவரும்பொருட்டியமன்போல்வந்தசந்திரனே உன்னுடற்களங்கம் கொடியவிடமென்றல்லவா கரும்பாம்பு விழுங்கியுமிழ்ந்தது என்றாள்-என்பதாம். (௯)

சுடர்கான்றெழுந்தவெண்டிங்காளென்னைசுடுதியாரமுகத்
துடனீபிறந்தபாற்கடலின்றன்மையுணராயானாலு
மடலார்கமலப்பொகுட்டுறையும்புத்தேள்காணாமறைக்கொழுந்தின்
படர்வார்சடையில்வீற்றிருக்கும்பாண்மையேனுமறிந்திலையே

(இ-ள்) சுடர்-கதிர்களை—கான்று-வீசிக்கொண்டு—எழுந்த-உதித்த வெண்டிங்கள்-வெள்ளியசந்திரனே—சுடுதி-சுடுகின்றாய்—என்னை இது யாதாகவிருந்தது—ஆர்-நிறைந்த—அமுதத்துடன்-அமிர்தத்துடனே—நீபிறந்த-நீபிறக்கப்பெற்ற பாற்கடலின்-பாற்கடலினுடைய—தன்மை குணத்தை உணராயானாலும் அறியாயென்னிலும்—மடலார-இதழ்கணிறைந்த—கமலப்பொகுட்டு-தாமரை மலர்க் கொட்டையில்—உறையும்-தங்குகின்ற—புத்தேள்-பிரமன்—காணா-காணக்கூடாத—மறைக்கொழுந்தின்-வேதத்துச்சுடரிலிருக்கும்பரமசிவனுடைய—படர்-பகுர்ந்த—வார்-நெடிய—சடையில்-சடாபாரத்தில்—வீற்றிருக்கும்-வீறுடனேயிருக்கின்றபான்மையேனும்-தன்மையையாகிலும்—அறிந்திலை-அறிந்தாயில்லை—எ-று. (கருத்து) சந்திரனே என்சுடுகிறாய் தேவாமிர்தத்தோடு திருப்பாற்கடலிற்பிறந்த தன்மையை யறிந்திலை ஆனாலுஞ்சிவனது திருமுடியில்வீற்றிருக்குந்தன்மையுமறிந்திலையோஎன்றாள் என்பதாம். (௰)

கருவுமணியுமிருநிதியுந்தண்ணங்கமலமலர்த்தவிசிற்
றிருவுமுயிர்த்தபாற்கடலிற்றெள்ளாரமுதத்துடன்பிறந்தாய்
பெருவெண்மதியேநீயுமைதலபெம்மான்மௌலிகதிரமிழ்தி
னுருவமாங்கனுறவொன்றும்விடுத்தியேன்மற்றுனோங்காரர்

(இ-ள்) பெரு-பெரிய—வெண்மதியே-வெள்ளியசந்திரனே—கருவும்-ஐந்தருவையும்—மணியும்,சிந்தாமணியையும்—இருநிதியம்-சங்கநிதியென்னுமிரண்டனையும்—தண்-குளிர்ந்த—அம்-அழகிய-கமல மலர்-தாமரைமலராகிய—தவிசில் ஆசனத்திலிருக்கின்ற—திருவும் திருமகளையும்—உயிர்த்த-பெற்ற—பாற்கடலில் - பாற்கடலினிடத்தே—தெள்

தெள்ளியவார்-நிறைந்தன அமுதத்துடன்-அமிர்தத்துடனே—பிறந்தாய் தோன்றினாய்—நீயுறைத்தல்-நீவாசம்பண்ணுமிடம்—பெரமான் பரமசிவனுடைய—மௌலி சடைமுடி—கதிர்-உன்னுடையகிரணங்கள்—அமிழ்தினுருவம்-அமிர்தத்தினுடையவடிவம்-ஆகையால்-அநங்கன்-மன்மதனுடைய—உறவென்னும் சம்பந்தமொன்றினையும்—விடுத்தியேல் விட்டுப்பெறறியானால்—உனைநிகர்-உன்னைநிகராவாவர்—ஆர்-யாவர்-எ-று. கருத்து சந்திரனேஐகருசௌத்துவமணி அருந்திஇமிர்து திருமாது இவற்றோடுபாற்கடலிற்பிறந்தாய்நீவாசம் பண்ணுதலசிவனது திருமுடிஉனதுகிரணங்களமிர்தத்தினுருவம் மன்மதனுற்வொன்றும்விடுத்தாலுன்னைநிகர்ப்பவர்யாரென்றுள்ளென்பதாம். (௰௧)

திங்கட்புலியைவீழ்த்தியுயிர்செகும்ப*மடவீராமயத்திற்
றங்கப்படியக்கலன்சேர்மினசனுட்புகுந்துதாழாமே
துங்கக்கருந்தாதுகப்புடைக்குந்தொழிலோர்கூடமெடுத்
தங்கைத்தலத்தாலறைகிரெனப்பசணிப்பீராவியளிப்பீரே

(இ-ள்) மடவீர் *தோழியரே—திங்கட்புலியைசந்திரனாகிய வியாக்கிரத்தை—வீழ்த்தி-வீழச்செய்து—உயிர்செகுப்ப-உயிரைநீக்க—அரமியத்தில்-நிலாமுற்றத்தில்—தங்கப்படிமக்கலன்-தங்கத்தினால் வரம்புசெய்யப்பட்டகண்ணாடியை—சோமின்-வையுங்கள்—அதனுள் - அக்கண்ணாடியினுள்ள—புகுதும் திங்கட்புலிநுழையும்—தாழாமே தாமதியாமல்—துங்கம்-உயிர்ச்சிபொருந்திய—கருந்தாதுஇரும்பை—உகவதிர்—புடைக்கும் அடியாநின்ற—தொழிலோர் தொழில்செய்வோராகிய கொல்லரை—கூவி அழைத்து—கூடமெடுத்து - சம்மட்டியெடுத்து—அங்கைத்தலத்தால் அழகியகையினாலே—அறைகிரென - அடியுங்களென்றுபணிப்பீர்சொல்லுவீர்களானால்—ஆவி-எனதுயிரை—அளிப்பீர்-காப்பவராவீர்-எ-று.0 தொல்காப்பியம் களவியல்-௩௧-௬-தோழிதானேசெவிலிமகளே (கருத்து) தோழிமார்களேசந்திரனென்னும்புலியை நிலாமுற்றத்திற் றன்னிக்கண்ணாடியைச்சேருங்கள் அதற்குள்ளப்புலிவந்து புகும் கொல்லரைக்கூப்பிட்டுச் சம்மட்டியெடுத்தடிக்கச் சொல்லுங்களென்னுயிரைக்காப்பீர்களென்பதாம், (௰௨)

சுடருஞ்வவையுலகழலத்தோன்றுதழைத்திரயாழி
யடருமழன்மாமதியதனையாற்றுதாற்றிவிடுத்தெனிற்
படருமிதழிப்புரிசடையெம்பரமன்பரமன் மாருயிர்புரப்பான்
கொடியவிடமுண்டதுபோலவுண்டலதனாற்குறையுண்டோ

(இ-ள்) சுடரும்-பிரகாசியாநின்ற,வடவை-வடவைத் தீயானது—உலகு-உலகத்தை—அழல்-சுடதோன்றாது-வெளிப்படாமல்—அமைத்த அதைத்தன்னுளடைக்கிய—திரை அலைகளையுடைய—அழி கடலானது அடரும் நெருங்கிய—அழல்-பொருக்காமல்—அராற்றிய- அமுது—விடுத்ததெனில் விட்டதனால்—படரும்படராநின்ற—இதழி கொன்றைமாலையயணிந்தபரி கட்டப்பட்ட,சடை சடாபாரத்தை யுடைய—எம்பாமன்எம்முடையகடவுள்—அமரர்தேவர்களினது—உயிர் ஆவியை—பு

ரப்பான் காக்கும்பொருட்டு—கொடிய கொடுமை பொருந்திய—விடம் விடத்தை—உண்டதுபோல - புசித்ததுபோல—உண்டால்-இதனையும் புசித்தால்—அதனால் அச்செய்கையால்—குறையுண்டோ குறைபாடுளதோ—எ-று, (கருத்து) வடவாக்கினியுள்ளகடலும் கனலாகிய சந்திரனைக்கக்கிவிட்டது பரமசிவன்தேவர்களைக்காக்கும்பொருட்டுவிடத்தையுண்டது போலச்சந்திரனையுண்டாற்குறைவுண்டோவென்றாள்-எ-ம், ()

விரிந்ததிரைப்பாற்கடற்பிறந்தவிடமோரிரண்டிலோர்கடவுண்
மருந்தினுகர்ந்தகரியவிடமீட்டுமுலகில்வந்ததோ
பரந்துகனலுமதிக்கலையாம்வெள்ளைவிடத்தைதேவர்பல
ரருந்தவருந்தநாளுநாளும்வளர்வதெவன்கொலறியேமால்,

(இ-ள்) விரிந்த-விரியப்பெற்ற—திரை-அலைகளையுடைய—பாற்கடல் பாற்கடலிலே—பிறந்த-தோன்றிய—விடமோ-இரண்டில விடமிரண்டில்—ஓர்கடவுள்-ஒப்பற்றபரமசிவனானவன்—மருந்தின் அமிர்தத்தைப் போல்—நுகர்ந்த புசித்த—கரியவிடம்கறுத்தவிடமானது—மீட்டும்-மீளவும்—உலகில்-உலகத்திலே—வந்ததோ-தோன்றியதோ—பரந்து- பரவி—கனலும்-சுடாநின்ற—மதிக்கலையாம்-சந்திரனதுகலையாகிய—வெள்ளைவிடத்தை-வெண்ணிறத்தையுடையவிடத்தை—தேவர்பலர்-தேவர்களனேகர்—அருந்த-வருந்த புசிக்கப்புசிக்க—நாளுநாளும்- நாடோறும் வளர்வது-வளருகின்றது—எவன்கொல்,என்னகாரணமோ—யாம்அறியேம்-அறிகிலேம்—எ-று.(கருத்து)சிவனுண்டவிடமீண்டு முலகில்வந்ததோவெள்ளைவிடத்தைத் தேவர்களருந்தவருந்த வளர்வதேவன்கொலோவென்றாள் என்பதாம், (௧௪)

நிரைத்தண்டாளக்கோவை யெனநிலவுகாலும் வெண்ணகையீர்விரைத்தண்கலவைச்செழுஞ்சேறென்ற மூலையிறைத்துமெய்வெதுப்பித்திருத்துமலர்ப்பூஞ்சேக்கையெனவில்வேள்பிரிந்தாருயிர்,செருக்குமரத்தநதோய்ந்தவாளியனைகிடத்தலெனமேலன்பேயோ

(இ-ள்) நிரை-வரிசையான—தண்-தணிய—தாளக்கோவையென-முத்துக்கோவையைப்போல—நிலவு ஒளியை—காலும்-தருகின்ற—வெள்ளிய—கையீர்-பற்களையுடையமங்கையரே—விரை-வாசனைபொருந்திய—தண-தணணிய—செழும்-செழிய—கலவைச் சேறென்று-கூட்டுவருக்கஞ்சேர்ந்தசேர்ந்தனக்குழம்பென்று-அழலையிறைத்து-தீயைவீசி,மெய்-தேகத்தை,வெதுப்பி-சுட்டு,திருத்துமகம்பகளையைப்பெற்ற மலர்மலரினாற்செய்யப்பட்ட-பூஅழகிய,சேக்கையென்-மெத்தையென்று,வில்வேள்-மன்மதனானவன்,பிரிந்தார்-பிரிந்தவர்களுடைய.உயிர் ஆவியை.செருக்கும்-போக்கின்ற,அரத்தந்தோய்ந்த கூதிரந்தோய்ந்த வாளியனை பாணமெத்தையின்மேல்,கிடத்தல் படுக்கவைத்தல் என்மேல் என்னிடத்து,அன்பேயோ அன்புதானோ—எ-று. (கருத்து) முத்துவரிசையொத்தபறகளையுடையபெண்களே கலவைச்சாந்தென்று கனலையிறைத்துடலைச்சுடலமலர்ச்சயனமென்றுமன்மதபாணத்தையென்னை வளர்த்தல்அன்புதானோவென்றாள என்பதாம், (௧௫)

பணந்தாழ்குற்றைப்பைந்தொடியீர்பதுமத்திரைக்கும்வானவர்க்குங்
கணஞ்சேறுலகின்மன்பதைக்குங்காலங்கணித்தகலைவல்லோர்
மணந்தார்தமக்கோரிமைப்பொழுதுமாறாக்காதன்மகிழ்நர்புயந்
தணந்தார்க்கூழியாகுமெனச்சாற்றாதிருந்ததகையென்னே,

(இ-ள்) படம்பாம்பின்படம்,தாழ்வணக்குகின்ற,அல்குல்-அல்குலையுடைய,பைந்தொடியீர்-பசியபொன்னாற் செய்தவளையல்களையணிந்தமங்கையரே-பதுமத்திரைக்கும்-தாமரை மலரிலிருக்கின்ற பிரமனுக்கும், வானவர்க்கும்-தேவர்களுக்கும்,உலகின்-மண்ணுலகில்,கணம்-கூட்டமாக,சேர்-சேரப்பெற்ற,மன்பதைக்கும்-மனிதர்க்கும்,காலம்-வாழ்நாளை, கணித்த-நிச்சயித்த,கலைவல்லோர்-சோதிடநூல்வல்லோர்,மாறாக் காதல் நீங்காதவிருப்புள்ள,மகிழ்நர்ப்புயம்-தலைவர்புயங்களை,மணந்தார்க்கு கூடினவர்களுக்கு,ஓரிமைப்பொழுதும்-ஒருமாத்திரையாயிருந்தகாலம்,தணந்தார்க்கு அப்புயங்களைபிரிவுந்தவர்க்கு, ஊழியாகுமென ஊழிக்காலமாகுமென்று,சாற்றாதிருந்த தகையென்ன-சொல்லாமலிருந்தமுறையென்னகாரணம்,எ-று(கருத்து)பெண்களேபிரமனுக்கும் தேவர்களுக்கும்மக்களுக்குங் காலத்தைக்குறித்த கலைவல்லோர்,மணந்தார்க்கிமைப் பொழுதான தணந்தார்க்கூழிக்காலமாகுமென்று சொல்லாதிருந்ததென்ன என்றாள் எ-ம் (௰௬)

குதலைமொழியீர்மெய்வெதுப்புங்கொடுந்தீயாற்றவேண்டுதிரேற்
பொதியவரையின்னுஞ்சாந்தம்பூசிமுலைமேற்புகைந்தழல
கதலியிளம்பூங்குருத்ததனால்வீசிவீசிக்கனற்றுவதென்
மதியின்றழலையவிப்பதற்கோர்மருந்துண்டாகிற்செய்வீரே

(இ-ள்) குதலைமொழியீர்-மழலைஞ்சொற்களையுடைய,மங்கையரே,மெய்-உடலத்தைவெதுப்பும்-சுடுகின்ற,கொடுந்தீ-கொடியவெப்பத்தை, ஆற்ற தணிக்க வேண்டுதிரேல் விரும்புவீர்களானால்,பொதிவரையின் பொதியமலையிற்பிறந்த,நறு-பரிமளம்,பொருந்தியசாந்தம் சந்தனத்தை, பூசி பூசுதல்செய்து முலைமேல் தனத்தின்மேல் புகைந்தழல் புகை விட்டெரிய கதலி வாழையினுடைய,இளம்பூங்குருத்தசுகனை அழகியவிளங்குருத்தால் வீசிவீசி இடைவிடாமல் வீசுதல்செய்து கனற்றுவது பட்டபடிமூளவிப்பது,என் என்னகாரணம்மதியின்றழலை-சந்திர கிரணமாகிய நெருப்பை,அவிப்பதற்கு-தணிப்பதற்கு,ஓர்மருந்து-ஓர்மருந்து உண்டு-உளது, அதில்-இம்மாற்செய்யக்கூட்டுமானால் செய்வீர்-அதனைச்செய்வீர்களாக எ-று.தொல்காப்பியம்௩௰-சூ-தோழியின் மிடுமிடனுமாருண்டே இவ்விதியால்,உங்களாற்செய்யக்கூடுமானால் செய்யுங்களென்றாள் (கருத்து)பெண்களே காமாக்கினியைநீக்கவிரும்புவீர்களானால்முலைமேல் சந்தனத்தைப்பூசி வாழைக்குருத்தால் வீசிச்சுடுவதென்ன சந்திரகிரணமாகிய நெருப்பையவிப்பதற் கோர்மருந்துண்டு உங்களாற்கூடுமாகிற் செய்யுங்களென்றாள எஃபதாம். (௰௭)

அந்தாமரையின்மடல்லீர்மலைமுழுயிர்ப்பவலர்பொதுளுஞ்
சந்தாடவியிற்றமழ்ந்துநருஞ்சண்ணெனவுருவிதோய்ந்துமலாப்

பைந்தாதாடிநறுங்குயிர்த்துப்பசும்பொற்சிறுசாளரநுழைய
மைந்தாநிலமின்றழல்வதெல்லாந்தமியேனிழைத்தவல்வினையே.

(இ-ள்) அம்-அழகிய—தாமரையின்-தாமரையிலிருக்கின்ற—மடநல்லீர்-திருமகளையொத்தமங்கையரே—மலயம்-பொதியமலையானது—உயிர்ப்ப-பெற—அலர்-மலர்கள்—பொருநும்-நிறைந்திருக்கின்ற—சந்தாடையில்-சந்தனக்காட்டிலே—தவழ்ந்து-ஊர்ந்து—தரு-நல்ல,..தண்ணென்னருவி-குளிர்ச்சியாயிருக்கின்றஅருவிநீரில்—தோய்ந்து-படிந்து—மலர்-மலர்களினுடைய—பைந்தாதாடு-பசியமகரந்தங்களை அளைந்துகொண்டு—நறுங்கு-வாசனையை—உயிர்த்து-வீசி—பசும்பொன்-பசியபொன்னாற்செய்த—சிறு-சிறிய—சாளரம்-பலகணிவழியால்—நுழையும்-நுழைகின்ற—மந்தாநிலம்-தென்றற்காற்றானது—இன்று-இன்று—அழல்வதெல்லாம்-சுடுவதெல்லாம்—தமியேன்-தனிமையுடையேனாகியயான். இழைத்த-செய்த—வல்வினையே-தீவினையே—எ-று, (கருத்து) இலக்குமிக்கொப்பான பெண்களே தென்றற்காற்றானது பலகணிவாயில் நுழைந்து என்னைச்சுடுதுவது யான்செய்த கொடுவினையாகுமென்றுளென்பதாம். (௰௫)

கொங்குவிரியுமலர்க்குழலீர் கொழுநர்ப்பிரிந்தார்வருந்துறவா ர்
னெங்குங்குருதியிறைத்ததுபோற்குடபாற்றிசையினெழுஞ்செக்க
பொங்குவடவைக்கொழுந்தீயேயதனலன்றே பூசுரர்க
ளங்கைநிறையப்புனல்வாரியிறைத்துநாளுமவிப்பதுவே.

(இ-ள்) கொங்கு-வாசனையானது—விரியும்-விரியப்பெற்ற—மலர்-மலரையணிந்த—குழலீர்-கூந்தலையுடையமங்கையரே—கொழுநர்-கணவரை—பிரிந்தார்-நீங்கினவர்கள்—வருந்துற-வருத்தத்தையுடைய—வானெங்கும்-ஆகாயமுழுவதும்—குருதி-உதிரத்தை—இறைத்ததுபோல்-வீசப்பெற்றதுபோல்—குடபாற்றிசையின்-மேற்குத்திசையிலே—எழு-எழுகின்ற—செக்கர்-செவ்வானமானது—பொங்கு-மிகுந்த—வடவை-வடவையென்னும்—பெயரையுடைய-கொழு-செழிய—தீயே-அக்கினியை—அதனலன்றே-அதனலன்றோ—பூசுரர்கள்-பிராமணர்கள்—அங்கைநிறைய-அழகியகைநிறைய—புனல்-சலத்தை—வாரி-அள்ளி—இறைத்து-சொரிந்து—நாளும்-நாடோறும்—அவிப்பது-அத்தீயையணைப்பது—எ-று (கருத்து) கூந்தலையுடையபெண்களே கணவரைப்பிரிந்தமாதரை வருத்தும்பொருட்டெழுந்த செவ்வானமானது வடவாமுகாக்கினியே அதனலல்லவாபிராமணர்கள் நாள்தோறும் நீரைவாரிஇறைத்தவிக்கிறார்கள் யென்றுள் என்பதாம், (௰௬)

புனைமென்கொடியீர்நிலவருந்தென்புள்ளின் *பார்ப்பையருட்கலச
முனிவன்றன்பாலலைபுரட்டுமுந்நீர்குடிக்கும்விஞ்சையினை
யினிதினுணரவத்திடுமின்வைத்தாற்குணபாலெழுந்துவெய்தாய்க்
கனலுங்கொடியவெண்டிங்கட்கதிர்வெங்கடலையருந்தாதோ.

(இ-ள்) புனை-அலங்கரிக்கப்பட்ட—மெல்-மெல்லிய—கொடியீர்-மலர்க்கொடிபோன்ற—மங்கையரே-நிலவு, சந்திரிகை-அருந்து—புசிக்கின்ற-என்-என்னுடைய—புள்ளின்பார்ப்பை-சகோரக்குஞ்சினை—அருள்-கிருபையுடைய—கலசமுனிவன்பால்-கும்பத்திற்பிறந்த—அகத்தியமுனிவனிடத்து—அலைபுரட்டும்-அலைகளைப்புரட்டுகின்ற—முந்நீர்-கடற்

சலத்தை—குடிக்கும்-பானம்பண்ணுகின்ற—வித்தையினை- கல்வியை, இனிநின்-இனிதாக—உணர-அறிய—வைத்திடுமின்-வையுங்கள், வைத்தான்-வைக்கப்பெற்றால்—குணபால்-கீழ்த்திசையில்—எழுந்து-உதயமாகி—வெய்தாய்-வெவ்வியதாய்கனலும-சுடுகின்ற—கொடிய - கொடுமைபொருந்திய—வெண்டிங்கள்-வெள்ளியசந்திரனுடைய—கதிர் - கிரணமாகிய—வெம்-வெய்ய—கடலை - சமுத்திரத்தை—அருந்தாதோ அ குடியாதோ—எ-று. * தொல்காப்பியமரபியல்-ச-சூ-அவற்றுள் பார்ப்புமபிள்ளையும் பறப்பவற்றிளமை இவ்விதியால் பாவைக்குஞ்சென்றிக (கருத்து பெண்களேயெனது சகோராக்குஞ்சினை அகத்தியரிடத்து கடலைக்குடிக்கும் வித்தையைக்கற்பியங்கள் கற்பித்தாலசந்திரகிரணக்கடலைக் குடியாதாவென்றாள் என்பதாம். (உ௰)

பதுமமலர்மெல்லணைகிடத்திப்பனிநீர்தெளித்துச்சாந்தணிந்து
முதிர்வெங்காமக்கனலவிப்பான்முயலாநின்றமொய்குழலீ
ரதிருங்கடல்வான்முகட்டிலெழுந்தழற்றுங்கொடியகதிர்ப்பரப்பு
மதியங்குளிரமருந்தருவீர்வடவைத்தழலுமவிப்பீரோ.

(இ-ள்) பதுமமலர்-தாமரைமலரிதம்பரப்பிய—மெல்லணை-மெல்லியமெத்தையில்—கிடத்தி-படுத்தி—படுக்கவைத்து—பனிநீர்-பனிநீரை—தெளித்து-இறைத்து—சாந்து- சந்தனத்தை—அணிந்து - பூசி—முதிர்-முதிர்ந்திருக்கின்ற—வெம்-வெவ்விய—காமக்கனல்-காமத்தீயை—அவிப்பான்-தணிக்கும்பொருட்டு—முயலாநின்ற - முயலுகின்ற—மொய்குழலீர்-மங்கையீர்—அதிரும்-ஒலிக்கின்ற—கடல் - கடலினது—வான்-மேலாகிய—முகட்டில-உச்சியிலே—எழுந்து- உதித்து—அழற்றும-சுடுகின்ற, கொடிய கொடுமைபொருந்தியகதிர்கிரணங்களை, பரப்பும-விரிக்கின்றமதியம சந்திரன்—குளிர-குளிர்ச்சிபெற, மருந்து-மருந்தை, அறிவீர்-அறிவீர்கள, வடவைத்தழலும்-வடவாமுகாக்கினியையும் அவிப்பீர்-தணியச்செயவீர்-எ-று (கருத்து) தாமரையணையிற் கிடத்திப்பனிநீர்தெளித்துச் சந்தனத்தைபூசிக்காமாக்கினியையவிக்கும்பொருட்டு முயற்சிசெய்யும் பெண்களே சந்திரன் குளிரமருந்தறிவீர்களாகில் வடவாமுகாக்கினியையுமவிப்பீர்கள என்றாள்என்பதாம. (உக)

துணர்த்தாரளகமடநல்லீர்சுடுவெங்*காமக்கொடுந்தீயை
தணிப்பானெண்ணிக்கொடுவந்த தண்ணென்கதிர்கால்வெண்டாள
மணித்தாழ்வடமும்வியன்சினைத்தேமாவின்றளிருமெஞ்ஞான்று
மணித்தாயிருந்தவடவையும்வெங்கானிற்றீயுமமைந்தனவே.

(இ-ள்) துணர் - பூங்கொத்துகளை யுற்ற,தார் - மாலையையணிந்த,அளகம் கூந்தலை யுடைய,மடம - இளமை பொருந்திய, நல்லீர் - மங்கையரே - சுடு,சுடுகின்ற - வெம் - வெவ்விய,காமம் - ஆசை யாகிய—கொடுந் தீயை கொடிய தீயை—தணிப்பான் - தணிக்கும் பொருட்டு யெண்ணி கருதி—கொடுவந்த - கொண்டு வந்த—தண் ணென் - குளிர்ச்சிபொருந்திய—கதிர் கிரணங்களை—கால் வீசுகின்ற—வெள் வெளியய,தாளமணி-முத்துக்களாலாகிய தாழ்தொங்கிய வடமும் கோவையும்-வியன்-பருத்தசினைகிளைகளை யுடைய,தேம் வாசனை பொருந்திய

மாவின்றளிரும்மாங்கொழுந்தும்-என்ஞான்றும்-எக்காலும் அணித்தாயி ருக்கசமீபமாயிருக்கப்பெற்றவடவையுமவடவாமுகாக்கினியாகவும், வெரு-வெவ்விய கானிற்றீயும்-காட்டுத்தீயாகவும் அமைந்தன-ஆயின-எ-று. தொல்காப்பியம் புறத்திணையியல் உஅ- ருகாமப்பகுதிகடவுளும்வரையா ரேனோர்பாக்கினு மென்மனார் புலவர் இவ்விதியால்- காமம்நீங்களாயினுள் கருத்து கூந்தலையுடையமாதர்களே சுமாக்கினியைத்தணிக்குமபொரு ட்டுக்கொண்டுவந்தாமுகதாரங்களும் மாந்தளிர்களும் வடவாக்கினியைப் போலுங்காட்டுத்தீயைபோலுமிருந்தன என்றுள்ளது-ம். (உஉ)

மழலைத்தீஞ்சொன்மதர்நெடுங்கண்மடவீர்கொடுந்திக்கடவுளும்
வெஞ்சுழலைகட்பகுவாய்நிருதியுங்காரிருள்போனிறக்கசுடார்க்குஞ்சி
யழல்கட்கூற்றுமுலைந்துறையுந்தென்பாற்றிசைநின்றசைந்துவரும்
குழவிதென்றலாருயிரைக்குடியாதன்புகூராதே,

(இ-ள்) தீம்-மதுரம்பொருந்திய, மழலைசொல்-குதலைச்சொல்லையும், ம தர்-களிப்பப்பொருந்திய- நெடுங்கண் ,நெடியகண்களையுமுடைய, மட வீர்மங்கையர்காள், கொடுந்திக்கடவுளும்- கொடிய அக்கினிதேவனும்வெம் வெவ்விய, சுழலைகண்-சுழல்கின்றகண்களையும்- பகுவாய்-பிளப்பாகியவா யினையுமுடையநிருதியும்-நிருதியென்னுமரக்கனும், கார்-கரிய, இருள்போ ல்இருளைப்போன்ற, நிறந்த- நிறத்தினையும், சுடர்க்குஞ்சி- செவ்விறச்சி கையையும், அழல்-அழலச்செய்கின்ற, கண்களையுமுடைய, கூற்றும்-யம னும், உலைந்துமகிழ்ந்து, உறையும்-வசிக்கின்ற, தென்பாற்றிசைநின்று-தெ ன்றிசையிலிருந்து, அசைந்துவரும்-உலாவிவருகின்ற, குழவித்தென்றல் இளந்தென்றலானது, ஆர்நிறைந்த, உயிரை, வீரர்களுடையவுயிரை, குடி யாது-பானம்பண்ணாமல், அன்புகூராது அன்புசெய்யாது எ-று, (கருத் து) மங்கையரோதீக்கடவுளும்நிருதியும்யமனுமவாசம்பண்ணுமதென்றி சையிலிருந்துவரும் இளந்தென்றலானதுஎன்னுயிரைக்குடிய தன்புகொ ள்ளாதுஎன்றுள்ளது-ம. (உ௩)

விளரிச்சுரும்பர்பாண்முரல்விரிதண்படலைத்துழாய்மார்ப
னெளிருந்திகிரிச்சுடர்படையெனவோராதுள்ளமவெருவியதோ
குளிர்வெண்மதியைநஞ்சுயிர்க்குங்கூர்முளையெயிற்றுக்கரும்பாந்த
ளெளிதிற்கவர்ந்தும் விழுங்காமலென்னைவாளாவுமிழ்ந்ததுவே

(இ-ள்) விளரி- விளரிராகத்தைப்பாடுகின்ற, சுரும்பர்வண்டுகளானவை, பாண்முரல்-இசையப்பாட, விரி-விரிந்த, தண்-தண்ணியதுழாய்ப்பட லை- துளபமாலையணிந்த, மார்பன் மார்பினையுடையநாரணனது, ஒளிரு ம்பிரகாசிக்கின்ற, திகிரிசக்கரமாகிய சுடர்சான்றுபொருந்திய, படையெ ன்று, ஆயுதமென்றெண்ணி, ஓராது இன்னதென்றறியாமல் உள்ளம்-மன னவெருவியதோ-பயந்ததோ, குளிர்குளிர்ச்சிபொருந்திய, வெண்மதி யை-வெள்ளியசந்திரனை, நஞ்சுயிர்க்குமவிடத்தைக்கக்குகின்ற, கூர்முளை- கூரியமுட்கள்போன்ற, எயிற்றுபற்களையுடைய, கரும்பாந்தள்- இராகு வென்னும்பாம்பானது, எளிதில்இலேசாக, கவர்ந்துபற்றியும், விழுங்கா

மல்-உட்கொள்ளாமல்;எ-ஏன்னகாரணம்;வாளாவீனு, உமிழ்க்கது-உமிழ்ந்துவிட்டது;எ-று, (கருத்து) கருமபாம்பானது சந்திரனைத்திருமபவின்சக்கிரமென்று பயந்தோவிழுங்கியும் உமிழ்ந்துவிட்டதென்றுள்ளன்மைதாம், (௨௪)

மூழைவாய்திறந்துதெழித்தடருமூரியெருமைப்பெருமபகடூர்ந்
தொழியாதுவரிசூழ்கிடக்குமுலகில்வாழ்பல்லுயிர்க்கவர்ந்து
பழிகூர்வெய்யகருங்கூற்றைத்தருமனெனப்பேர்பகர்ந்திடுவோர்க்
கழலின்மாமதியைத்தண்மதியென்றுரைக்குமாற்றமரிதேயோ.

(இ-ள்) மூழை-நகையையொத்த, வாய்திறந்து-வாயைத்திறந்து,தெழித்து-பேரொலிசெய்து, அடரும்-போர்செய்கின்ற,மூரி-வலுமைபொருந்திய,பெரு-பெரிய,எருமைப் பகடு-எருமைக்கடாவை,ஊர்ந்து-செலுத்தி,ஒழியாது-நீங்காமல்,உவரி-கடலானது சூழ்கிடக்க-சூழப்பெற்றிருக்கின்ற,உலகில்-உலகத்திலே,வாழ்-வாழ்கின்றபல்லுயிர்-பலவாகியஉயிர்களை கவர்ந்து-வெளவி,பழிகூர்-நிந்தைமிகுந்த, வெய்ய-வெவ்விய,கருங்கூற்றை-கரியயமனை,தருமனென-தருமராஜனென்று,பேர்பகர்ந்திடுவோர்க்கு-பேர்சொல்லுவோர்க்கு,அழல்-வெம்மையைச்செய்கின்ற, மாமதியை பெரியசந்திரனை, தண்மதியென்று - குளிர்ந்தசந்திரனென்றுஉரைக்கும் சொல்லுகின்றமாற்றம்-சொல்லானது அரிதோ-அரிதோ,எ-று(கருத்து) உலகிற்பல்லுயிரைக்கொல்லும்யமனைத்தருமராசனென்றுபேர்சொல்லுவோர்-வெம்மதியைத்*தண்மதியென்றுசொல்வதரிதேவென்றுள்ள-ம,

அறுகான்முரலுநறுங்கூந்தற்சீதையொருத்தியாவியுய்யப்
பெறுவான்வரைகளனைத்துநெடுங்கடல்வாயப்பெய்தபெருங்கவிக
ள்,சிறுகாலுயிர்க்குந்தமிழ்வரையைநூக்கீரகத்திற்சேர்த்தியவே
லுறுகாதலனைத்தணந்துறையுமடவார்பலருமுய்வாரே.

(இ-ள்) அறுகால்-வண்டுகளானவை,முரலும்-ஒலிக்கப்பெற்ற-நறும்-நறுவியகூந்தல்அளகத்தையுடைய,சீதையொருத்தி-சீதையென்னுமொருமங்கையானவள், ஆவியுய்யப்பெறுவான், உயிர்பிழைக்கப்பெறும்பொருட்டு,வரைகளனைத்தும்-மலைகள்யாவையும்,நெடுங்கடல்வாய்-நெடியகடலினிடத்தே,பெய்த-இட்ட,பெருங்கவிகள்-பெரியவானரங்கள்,சிறுகால் தென்றற்காற்றை;உயிர்க்கும்- பெருகின்ற, தமிழ்வரையை-பொதியமலையை,நூக்கிரகத்தில்-அக்கடலினிடத்து,சேர்த்தியவேல்-சேர்த்தனவாகில் உறுபொருந்தப்பெற்றகாதலனை- துணைவனை,தணந்து-நீங்கி,உறையும்-வசிக்கின்ற-மடவார்பலரும்- பலராயுள்ளமாதர்களும்,உய்வார்பிழைப்பார்கள்,எ-று. இலக்கணக்கொத்து-ஒழிபியல்-௩௮-கு-எழுத்துச் சொற்றிரிபிரணயேயன்றிப்-பொருட்டிரிபெங்கும் பொருந்துமென்பஇவ்விதியால்,ஆறுகால்-அறுகால்என்றெழுத்துத்திரிந்தது(கருத்து) சீதையின்பொருட்டுமலைகளைக்கடலிற்போட்டகுரங்குகள் பொதியமலையுங்கடலிற்போட்டிருக்குமேல் காதலனைப்பிரிந்தமாதர்கள்பலருமுயிர்வாழ்ந்திருப்பார்களென-ம, (௨௫)

சீதையொருத்திகாதலனைத்தணந்துளாரிற்சிறப்புடைய
ளாதலுணர்ந்தேமருகிருந்தோரரக்கமாதராதலினாற்
காதலுளர்போற்றோழியர்சூழ்ந்திவ்வாறியற்றிகழிதுயரா
லேதமுழந்துள்ளுயிர்சோருமெனபோலயர்வுற்றிருப்பாளே,

[இ-ள்.] சீதையொருத்தி-சீதையென்னு மொருத்திமாத்திரம், காதலனை-கணவனை, தணந்துளாரில்-நீங்கினவர்களில், சிறப்புடையவளாதல் சிறப்புடையவளாதலை, உணர்ந்தேம்-அறிந்தேம், அருகிருந்தோர்-பக்கத்திலிருந்தவர்கள், அரக்கமாதராதலினால்-இராக்கதமங்கையராகையினாலே தோழியர்-தாதியர்கள், காதலுளர்போல்-ஆசையுடையவர்களைப்போல், சூழ்ந்து-சுற்றிக்கொண்டு, இவ்வாறு-இந்தப்பிரகாரம், இயற்றில்-செய்கால், கழி-மிகுந்த, துயரால்-துன்பத்தினாலே, ஏதமுழந்து- வருத்தமிகப்பொருந்தி, உள்-உள்ளேஇருக்கின்ற, உயிர்-ஆவி, சோரும்- சோர்வையடைந்திருக்கின்ற, என்போல்-என்னைப்போல், அயர்வுற்று-துன்பத்தைப்பொருந்தி, இருப்பாள்-இருப்பாள்-எ-று, கருத்து கணவனைப் பிரிந்தவரிற்சீதையொருத்தி காமச்சார்பினால் வருத்தமடையாதவள் தோழியர் எனக்குச் செய்தல்போலவளுக்குஞ்செய்யில் வருத்தமடைந்திருப்பாள் எ-ம். உஎ

கொங்கிற்பொலிந்துநறவுயிர்க்குங்கொன்றைத்தொடையலணிகுழகன்
றிங்கட்கலைகளனைத்துமொளிர்செம்பொற்சடையிற்கரந்தனனே[ன்,
வெங்கட்டுளைவாளெயிற்றரவம்விழுங்கியுமிழாதிருந்ததோ
கங்குற்பொழுதுந்தனியாழிசெலுத்தாநிற்குங்கதிரோனே,

[இ-ள்] கொங்கில்-வாசனையினாலே, பொலிந்து-பிரகாசித்து, நறவு-தேனை, உயிர்க்கும்-துளிக்கின்ற, கொன்றைத்தொடையில்- கொன்றைமலராற்செய்தமாலையை, அணி-தரிக்கப்பெற்ற, குழகன்-பரமசிவன், திங்கட்கலைகளனைத்தும்-சந்திரனுடையபதினாறுகலைகளையும், ஒளிர்தரு-விளங்குகின்ற, சடையில்-சடாபாரத்தில், கரந்தனனே- ஒளித்துவைத்தானோ வெங்கண்-வெவ்வியகண்களையும், வாள்-ஒளிபொருந்திய, துளை-துளையுள்ள, எயிறு-பற்களையுமுடைய, அரவம்-பாம்பானது, விழுங்கி-யுட்கொண்டு, உமிழாதிருந்ததோ-கக்காமலிருந்துவிட்டதோ, கங்குல்பொழுது இராத்திரிகாலத்திலும், தனி-ஒப்பற்ற, ஆழி-சக்கரத்தை, கதிரோன்-சூரியனானவன்செலுத்தாநிற்கும்செலுத்துகின்றான்-எ-று. -கருத்து-இரவிலுஞ்சூரியனானவன் சக்கரத்தைச்செலுத்திநிற்கின்றான் சந்திரகிரணங்களனைத்தையுமசிவன்சடையிலொளித்துவைத்தானோகரும்பாம்புண்டுமிழாதிருந்ததோவென்றான்-எ-ம். உஅ

வடிக்கண்டுயிலாதறவருந்துமடவார்தமையும்படைத்தவனைத்
துடைக்கும்படிவெவ்விடங்காலுஞ்சுடாமாமதியுமமைத்தமலின்
விடிக்குங்கதிர்கட்டொழிற்கலற்றுமவெம்மைக்காற்றுநிதம்ங்கதவ
மடைக்குங்கமலத்திடையொழுக்குமருமமறையோனவாழியவே,

[இ-ள்] வடி-மாவடுபோன்ற, கண்-கண்கள், துயிலாது-நித்திரைசெய்யாமல், அற-மிகவும், வருந்தும்-வருந்தப்பெற்ற, மடவார்தமையும், மகளிரையும், படைத்து-உண்டாக்கி, அவரைத்துடைக்கும்படி- அயமதுவி

யையழிக்கும்படி, வெவ்விடம்-வெவ்வியவிடத்தை, காலும்-உக்கப்பெற்ற, சுடர்-காந்திபொருந்திய, மாமதியு-மமைத்துபெரியசந்திரனையும்படைத்த, அழலின்-தீயைப்போல, விரிக்கும்- அவனால்விடப்பட்ட, கதிர்கள கிரணங்கள், தொடல்-தொட்டால், சுற்றும்-சுடுகின்ற, வெம்மைக்கு-வெப்பத்திற்கு, ஆற்றாது-சகிக்காமல், இதழ்க்கதவும்-இதழாகியகதவுகளை, அடைக்கும்-அடைக்கப்பெற்ற, கமலத்திடை-தாமரைவீட்டில், ஒளிக்கும்-ஒளித்துக்கொள்ளும், அரு-அரிய, மா-பெரிய, மறையோன்- வேதநூற்குரியபிரமன், வாழிய-வாழக்கடவன்-எ-று ※நன்னூல்வழிபவென்பதனிற்றிஞயிர் மெய்யேகலுமிக்கஃதேதிஞமியல்பே இவ்விதியால்இயல்பாயிற்று கருத்து பெண்களையும்படைத்து அவர்களை யழிக்கச்சந்திரனையும்படைத்து அவன்கிரணம்படாததென்று தாமரையிலொளிக்கும் பிரமதேவன்வாழக்கடவனென்றான்-எ-ம், ௨௯

தண்ணங்கதிர்வெண்மதியென்பார்கழலாய்முடிக்கதென்னளவும்
வண்ணவரிவின்மதன்பகழிமலரமென்பாரவையுமுயி
ருண்ணுமரவக்கணைபோலவுடற்றுனின்றவொருபாவிப்
※ பெண்ணென்றயறாற்றிட்பிறந்தேற்கின்னுமேதாம்பேருலகே

[இ-ள்] சந்திரனோ, தண்-தண்ணிய, அம்-அழகிய, கதிர்-கிரணங்களையுடைய, வெண்மதியென்பார்-வெள்ளியசந்திரனென்றுசொல்லுவார், கழலாய்முடிக்கது-அது அக்கினியாய்விட்டாது, என்னளவும்- என்மட்டும், வண்ணம்-அழகிய, வரி-நெடிய, வில்-கருப்புவில்லையுடைய, மதன்பகழி-மன்மதனுடையபாணங்கள், மலரமென்பார்-மலரென்றுசொல்லுவார்கள், அவையும்- அம்மலர்களும், உயிருண்ணும்- உயிரையுண்கின்ற, அரவக்கணைபோல, சர்ப்பாணங்களைபோல, உடற்றுநின்ற-கொல்லுகின்றன, ஒரு-ஒப்பெற்ற, பாவிப்பெண்ணென்று-பாவியாகியபெண்ணென்று, அயறாற்றி-- அயலார்தூற்ற, பிறந்தேற்கு- பிறந்தவெனக்கு, பேருலகு-பெரியவிவ்வுலகிலுள்ளவைகளில், இன்னுமேதாம்- இனியெதுவெதுவாமோதானறியேன்-எ-று, ※தலவ்யாகரம்பல்பொருட்பெயரேபெயர்ச்சொலாகும் இவ்விதிபால்உலகுபெயர்ச்சொல் அகத்தியம பெயரின்பொருட்டுக்கிணை ரத்த துவேயென்ற அகத்தியர் கருத்து சந்திரனைக்குளிர்ச்சியென்பார்கள் அது என்னளவில்நெருப்பாயிற்று மன்மதபாணங்களை மலரென்பார் அவையென்னுயிரைக்கொல்லுமரவக்கணையாயினவென்றாள்-எ-ம், ௩௰

திரைசெய்கரியகடற்பிறந்ததிங்கட்கொழுந்துந்தமிழ்ப்பொதிய
வரையில்வளர்ந்தநறுஞ்சாந்துமவயவாளவேந்தர்மார்பேற்றுந்
தாளவடமுமுருகுயிர்க்குந்தண்ணென்மலருமைபந்தொடிதன்
விரகவனலைமேனமேலுமூட்டும்விறகுபோனறவே.

[இ-ள்] திரைசெய்-அலைகளைச்செய்கின்ற, கரிய- கருமைபொருந்திய கடற்பிறந்த-கடலினிடத்தேதோன்றிய, திங்கட்கொழுந்து-பாலசந்திரனும், தமிழ்-தமிழ்தோன்றிய, பொதியவரையில்- பொதியமலையில், வளர்ந்த-வளரப்பெற்ற-நறுஞ்சாந்து-நறியசந்தனமும், வயம்-வலிமைபொரு

ந்திய. வாள்வாட்படையையுடைய வேந்தர்-அரசர்களது, மார்பு-மார்புகள், ஏற்கும-ஏற்றற்கரிய, களபவடமும்-முத்துமாலையும, முருகுயிர்க்கு-வாசனையைத்தருகின்ற, கண்ணெனுமலரும-ஒளிர்ச்சியாயிருக்கின்ற மலரும்-பைந்தொடிகள-பசியவளையலணிந்த தமயந்தியினுடைய, விரகவனலை-விரகத்தாலாகியதீமையை, மேன்மேலும-மேலுமேலும், மூட்டும-மூள்சசெய்கின்ற-விறகுபோன்றன-விறகுகளைப்போலிருந்தன-எ-று. கருத்து சந்திரனும் சந்தனமும முத்துவடமும் மலர்களும தமயந்தி காமாக்கினியைமூட்டும விறகுகளைபபோலிருந்தது-எ-ம். ௬௧

நறைகொப்பளிக்குமலர்வாளிநலியவாற்றாதுயிர்ப்பொறைகொண்
டுறைதற்கரிதென்றிகல்வேழமுண்டகனிபோலுள்ளுடைந்து
மறுவற்றொளிருமதிமுகத்துமானேர்நோக்கிவிடுத்திடவும்
பெறுதற்கரியவுநவிதெனப்பிரியாதிருந்ததினனுயிரோ.

[இ-ள்] நறை-தேனை, கொப்பளிக்கும்-உமிழ்கின்ற, மலர்வாளி-மலர்க்கணைகளானவை, நலிய-வருத்துதல்செய்ய, ஆற்றாது-பொறாதவளாகி, உயிர்ப்பொறைகொண்டு-உயிர்ப்பாரஞ்சுமந்து, உறைதற்கு-தங்குதற்கு, அரிதென்று-அருமையென்று, இகல்-பகைமைபொருந்திய, வேழமுண்டகனிபோல்-யானையுண்டவிளங்கனிபோல், உள்ளுடைந்து-மனந்தளர்ந்து, மறுவற்று-களங்கமற்று, ஒளிரும்-விளங்காநின்ற, மதி-சந்திரன்போன்ற, முகத்து-முகத்தையுடைய, மானேர்-மானையொத்த, நோக்கி-பார்வையையுடைய தமயந்தி, விடுத்திடவும்-தன்னைவிட்டுவிடவும், பெறுதற்கு-பெற்றிடுவதற்கும், அரியவுநவிதென-இஃதரியவகையென்று, இன்னுயிர் அவளை-அவளினியவுயிரானது, பிரியாதிருந்தது-விட்டுநீங்காமலிருந்தது-எ-று. கருத்து மலர்க்கணை வருத்துதல் செய்யத்தமயந்தி வேழமுண்டகனிபோலாகிப் பெறலரியதிருவுருவென்று உயிரைவிடாதிருந்தாளென்றவாறு-எ-ம. வேழமென்றது வயித்தியசாத்திரத்தினபடி ஓர்வியாதியாம்; அதுமரக்கிற்சாப்பித்திருக்கும விளங்கனியையுங் குடிக்கையாக்கும பிரத்தியட்சபிரமாணம்; கவிளாமரத்திற் குடிக்கனகரணலாம ஆதலில்இக்கருத்துப்பொருந்தும-எ-ம். ௬௨

தார்வாயரும்பூமின்னவண்டினச்சிறைமெல்வரியூரிடைதளர்ந்து
சோர்வாடிதலைபாகமூலத்துணையிணைப்பணைமைதோய்ந்த
கூர்வாணெடுங்கணீர்வார்தல்கொற்றமாரன்விரகமெனு [வே
மீர்வாளைக்கொண்டுயிர்போழ்தற்கெற்று நாள்போன்றிருந்தது

[இ-ள்] தார்வாய-மலர்மாலையினிடத்தில, மூரலும-ஒலிக்கின்ற, இனம்-கூட்டமாயுள்ள, வண்டினம்-வண்டுகளின, சிறை-இறகினுடைய, மெல்வளியால்-மென்மையாகாற்றால், இடை-தளர்ந்து, இடைய-வருந்தி-சோர்வாள-சோர்பவளாகிய தமயந்தியினது, இதலைபாகத-வேறுபட்ட நிலைத்தையுடைய, மூலத்துணையின-இரண்டுகண்களின், மைப்பணை-கறுமை-அஞ்சனமானது, தோய்ந்த-கலந்த, கூர்வாள-கூரியவாட்படையைப்பொத்த, நெடுங்கண்-நெடியகண்களிவின்றும், நீர்வார்தல-நீரொழுகுதலை, கொற்றம-வெற்றியொருங்க, மாரன-மன்மதனுடைய, விரகமெனும-

பிரிவென்கிற, ஈர்வாள்-அறிவாளை கைக்கொண்டு-கையிற்கொண்டு, உயிர்-உயிரை, போழ்தற்கு-பிளத்தற்கு, எற்றுநூல்போன்று-எற்றியநூலையொத்து, இருந்தது-இருந்தது-எ-று. தொல்காப்பியமெய்ப்பாட்டியல்-இ-கு-இளிவேயிழவேயசைவேவறுமையெனவிளிவில் கொள்கையழுகைநான்கே இவ்விதியால் அழுகைவந்தவாறுணர்க(கருத்து)தமயந்தி இருகண்களினின்றே மைக்கண்ணினீரொழுகுதல்மன்மதனுடையவாளைக் கைக்கொண்டு உயிரைப்பிளத்தற்கு நூலைபோட்டதை ஒத்திருந்தது-எ-ம

புலவுத்திரைசூழ்நிலவலயம்புரக்கும்வேந்தையிப்பிறப்பி
னலமுற்றுறவிவ்விடத்தணைவதற்கு நவைதீர்த்தவமுன்னியற்றாதே
னிலவுத்துவர்வாய்மடநல்லீரின்னும் பிறந்துபுணர்வனென
நிலவுத்தழலிற்புகுந்திறப்பநினையாநிற்குநேரிழையே.

[இ-ள்] புலால்-புலால்நாற்றத்தையுடைய, திரைசூழ்-கடல்சூழ்ந்த, நிலவலயம்-பூமண்டலத்தை, புரக்கும்-காக்கின்ற, வேந்தை-நளராஜனை, இப்பிறப்பில்-இந்தப்பிறப்பில், நலம்-இன்பமானது, முற்றுற நிலவுபெற, இவண்-இவ்விடத்தில், அணைவதற்கு-தழுவுதற்கு, நவைதீர்-குற்றம்நீங்கிற, தவம்-தவத்தை, முன்-முற்பிறப்பில், இயற்றாதேயான்-செய்யாதேயான், இலவு-இலவிதழ்போன்ற, துவர்-சிவந்த, வாய்-வாயையுடைய, மடம்-இளமைபொருந்திய, நல்லீர் மடவீர், இன்னும்-இன்னமும், பிறந்து-உதித்தாவது, புணர்வனென-கூடுவேனென்று, நிலவு-சந்திரிகையாகிய, தழலிற்புகுந்து-தீயின்மூழ்கி, இறப்ப-உயிர்நீக்க, நேரிழை தமயந்தியானவள், நினையாநிற்கும், நினைக்கின்றாள்-எ-று கருத்து நளனை இப்பிறப்பிற்கூடுதற்கு முற்பிறப்பில் தவஞ்செய்யாததமயந்தியானவள் இனிப்பிறந்து நளனைப்புணர்வனென்று சந்திரகிரணத்தணலிற்புகுந்திறக்க நினைக்கின்றாள்-எ-ம, ௩௯

மன்றற்குழலார்வளிவிலக்கிவயங்குசுடர்காத்தெனமாரன்
வென்றிக்கொடியினுருவமைந்தமடமான்மூலையில்விசாமற்
குன்றிற்பிறந்ததாதளைந்துகுளிர்த்தூங்கருவிதோய்ந்துநறுந்
தென்றற்குழவிநுழைந்துவருஞ்சிறுசாளரங்கடாழ்செறிந்தார்,

[இ-ள்] மன்றல்-பரிமளம்பொருந்திய, குழலார்-கூந்தலையுடையமகளிர், வளிவிலக்கி-காற்றினாலுண்டாகுமிடையூற்றைநீக்கி, வயங்கு-பிரகாசியாநின்ற, சுடர்-விளக்கை, காத்தென-காத்தாற்போல, மாரன்-மன்மதனுடைய, வென்றி-வெற்றிபொருந்திய, கொடியின்-கொடியைப்போல உருவு-வடிவமானது, அமைந்த-அமையப்பெற்ற, மடமான்-தமயந்தியுடைய, மூலையில்-தனத்தில், விசாமல்-மோதாமல், குன்றில்-பொதியமலையில், பிறந்து-தோன்றி, தாது-மலர்ப்பொடியை, அளைந்து-பூசிக்கொண்டு, குளிர்தூங்கு-குளிர்ச்சிபொருந்திய, அருவி-அருநீரில், தோய்ந்து-முழுகி, நறும்-நறிய, தென்றற்குழவி-இளந்தென்றல், நுழைந்து-புகுந்து, வரும்-வருகின்ற, சிறு-சிறிய, சாளரங்கள்-பலகணிகளினுடைய, தாழ்-தாழைசெறிந்தார்-பதித்தார்கள், எ-று, (கருத்து) பாங்கியார்கள் தென்றற்காற்றுநுழையுஞ்சாளரவாயிற்கபாடங்களைச்சாத்தினார்கள்-எ-ம.()

வெந்தீபதனிற்பெய்தளிர்போன்மெலிந்து விளையாட்டயர்செழும்
பந்தோடரியகழங்கணிகள்பலவுந்துறந்துமலர்மகளை [பூம்
யந்தாரகலத்திருத்தியபோர்வேந்தன்பெயரேயறைகுதலாற்
செந்தார்ப்பசியகிள்ளையென்றுந்துறவாதிருந்தாள்சேயிழையே,

(இ-ள்) வெந்தீயதனில்-வெவ்விய நெருப்பினில், பெய் போட்டப்பட்ட தளிர்போல்-தளிரைப்போல, மெலிந்து-விரகாக்கினியால்வாடி, விளையாட்டயர்-விளையாடுவதற்கு உரிய, செழு-செழிய, பூ-அழகிய, பந்தோடு-பந்துடனே, அரிய-அரியவாகிய, கழங்கு அம்மனைகளையும், அணிகள்பலவும்-பலவாபரணங்களையும், துறந்து-நீக்கி, மலர்மகளை-திருமாதை, அம்-அழகிய தார்-மாலையணிந்த, அகலத்து-மார்பினிடத்திலே, இருத்திய இருக்கச்செய்த, போர்-போரைவிரும்பிய, வேந்தன்-நளராஜனது, பெயரே-பெயரினையே, அறைகுதலால்- சொல்லுதலால், செம்- சிவந்த, தார்-இரேகையையுடைய, பசிய-பச்சைநிறத்தைப்பொருந்திய, கிள்ளையொன்றும்-கிளியொன்றனையும், சேயிழை-தமயந்தியானவள், துறவாது-நீக்காமல், இருந்தாள் இருந்தனள், எ-று. [மகத்தியம பொருளேபதார்த்தந்திரவியமென்பதிருதிணையானு மியலுமற்றதுவே, இவ்விதியால்பந்துமுதலியனசற்பதார்த்தம், (கருத்து) தமயந்தியானவள் தீயிற்போட்ட தளிரைப்போலமெலிந்துபயந்துமுதலியவாபரணங்களைநீக்கி நளன்பெயரைச்சொல்லுங் கிளியொன்றையே நீக்காதிருந்தாள்-எ-ம். (௩௬)

அலைவாயவிடத்தினுடன்றோன்றி ஆவிகவரும்வெண்ணெருப்பே
யுலயாப்புவனமனைத்துமழலொருங்குகொளுத்துநுதற்கண்ணன்
றலைமேலுனதுகலையொன்றேதரித்தானென்றாலமிகவுமுயிர்க்
கொலைசூழ்ஞருரினின்போலுங்கொடியாருளரோகூறென்றாள்,

(இ-ள) அலைவாய்-கடலினிடத்தே, விடத்தினுடன்றோன்று, விடத்தினுடனேபிறந்து, ஆவி-உயிரை, கவரும்-வௌவுகின்ற, வெண்ணெருப்பே (சந்திரனென்னப்பட்ட) வெள்ளியநெருப்பே, உலையா-கெடாமல், புவனமனைத்தும்-உலகம்யாவையும், அழல்-தீயாய், ஒருங்கு- ஒன்றாய், கொளுத்துகின்ற, நுதற்கண்ணன்-நெற்றிக்கண்ணினையுடையபரமசிவன், தலைமேல் தலைமீது, உனதுகலையொன்றே உன்னுடையபங்கொன்றனையே, தரித்தானென்றால்-தரிப்பானேயானால், மிகவும் அதிகமாக, உயிர்- உயிரை, கொலைசூழ்நரில்-கொல்லக்கருதுவோர்களில், நின்போலும்-உன்னைப்போலும், கொடியார்-கொடுமையையுடையவர்கள், உளரோ இருக்கிறார்களோ, கூறென்றாள்-சொல்லென்றாள்-எ-று, (கருத்து) விஷத்துடன்பிறந்துஉயிரைக்கவரும்சந்திரனே உலகமயாவையும் கொளுத்தும் பரமசிவன் தலைமேலுன்கலையொன்றைத்தரித்தானென்றால் உயிரைக்கொல்பவர்களிலுன்போலுங்கொடியவருண்டோவென்றாள்-எ-ம். (௩௭)

தென்றலசெக்கர் முதலியவற்றை வெறுப்பனவாகச் சிலசெய்யுளிரு ப்பினுஞ்சந்திரனை நிந்திக்கல் பெரும்பான்மைப்பற்றி சமுகத்தோட்டமெ ன்றற்போல இப்படலத்திற்கு அப்பெயரிடப்பட்டது.

௫ சந்திரோபாலம்பனப்படலம்

முற்றிற்று,

௨

மன்மதோபாலம்பனப்படலம்.

முன்னே சந்திரனை நிந்தித்த தமயந்தியானவள்

இப்படலத்தால் மன்மதனை நிந்தித்தல் சொல்லப்படுகின்றது,

கலிவிருத்தம்,

மங்குலூடேமறைந்துயிர்வாட்டுமித்
திங்கடன்னைவெறுத்தது தீங்கென
வங்கமூடொளித்தாருயிர்கூட்டுணுந்
தங்கவேளைவெறுக்கத்தொடங்கினாள்.

(இ-ள்) தமயந்தியானவள் மங்குலூடு - மேகத்தினிடத்திலே, மறைந்து - ஒளித்திருந்து, உயிர் ஆவியை, வாட்டும் - வாட்டுகின்ற, இத்திங்கடன்னை இச்சந்திரனை, வெறுத்தது - வெறுத்துப்பேசினது, தீங்கென - குற்றமென் றுநினைத்து, அங்கமூடு - தேகத்தினுள்ளே, ஒளித்து - மறைந்துநின்று, ஆர் நிறைந்த, உயிர் ஆவியை, கூட்டுணும் - கொள்ளைகொள்ளுகின்ற, தங்க - உ யர்வுபொருந்திய, வேளை - மன்மதனை, வெறுக்க - வெறுத்தல்செய்யத்தொ டங்கினாள் - ஆரம்பித்தாள் - எ-று, (கருத்து) தமயந்தியானவள் சந்திரனை வெறுத்தது குற்றமென்று மன்மதனை வெறுக்கத்தொடங்கினாள் இஃது புராணிகர்கூற்று-ம (௧)

நையுமென்னுயிர்காமப்பூங்கணை
யெய்யும்வேளொன்றியம்புவல்கேட்டியால்
வெய்யசெந்தழலேந்திவெண்ணீறணி
யையன்முன்னுறிலாண்டொழிகாண்பனால்,

(இ-ள்) நையும் - வாடுகின்ற, என்னுயிர் - என்னுடைய உயிரின ஆகாமம் - பேராப்பூங்கணையெய்யும் - பூவம்பையெய்கின்ற, வேள் - மன்மத னே, ஒன்றியம்புவல் - ஒன்றுசொல்வேன், கேட்டி - கேட்பாயாக, வெய்ய, வெவ்விய, செந்தழல் - சிவந்ததீயை, ஏந்தி - தாங்கி, வெள - வெள்ளிய, நீற ணி - விபூதியைத்தரித்திருக்கின்ற, ஐயன்முன் - பரமசிவனெதிரே - உறில் -

உம்பெய்யப்பொருந்துவையானல்—ஆண்டொழில்-நின்னுண்மைசேவகத்தை—காண்பன்-காணுவேன்—எ-று, (கருத்து) என்னுயிர்ப்பெயர் நீங்கமலர்க்கணையெய்யு மன்மதனேகேள் சிவனிடத்திற்சென்று கணைசெலுத்துவையேயானல் உன்சேவகத்தை காண்பேன் என்ருள் என்பதாம். (௨)

அலரின்மீதுறைபந்தணனெய்திட
மலரையன்றிவடிக்கணைநல்குமேற்
சிலையெனக்கழைகொண்டதிறலினே
யுலகில்யாவருயிர்கொண்டிருப்பரோ.

(இ-ள்) அலரின்மீது-தாமரைமலரின்மேல், உறை-வசிக்கின்ற, அந்தணன்-பிரமனுனவன், எய்திட-எய்யும்படி, மலரையன்றி- பூங்கணையல்லாமல்—வடி-வடிக்கப்பெற்ற,கணை-இரும்புமுதலியவற்ருலாகியபாணங்களை, நல்குமேல் கொடுப்பானேயானல, கழை-கரும்பினை, சிலையெனக்கொண்ட-வில்லாகக்கொண்ட, திறலினேய்-வலிமைபொருந்தியமன்மதனே, உலகில-உலகத்தில், யாவர்-எவர்கள, உயிர்கொண்டு- ஆவியைக்கொண்டு, இருப்பர்-இருப்பார்கள்—எ-று, (கருத்து) மன்மதனேபிரமதேவன மலர்க்கணையல்லாதுவடிக்கணைகொடுப்பானுகில் உலகத்தில்யார் உயிர்வைத்திருப்பார்களஎன்ருன் என்பதாம். (௩)

அருவமாயணுவாய்*மனத்தையும்
விரைகொளவாளிவிடுத்தும்பிளத்தலாற்
பொருவிலவேள்கட்புலனிற்புலம்படு
முருவுபோழ்தலுனக்கரிதன்றரோ

(இ-ள்) அருவமாய-அரூபமாகியும், அணுவாய்-அணுவடிவாயுமிருக்கின்ற. மனததையும்-மனததினையும், விரைகொள்-வாசனையைக்கொண்ட, வாளி-மலரம்புகளை,விடுத்து-எய்து, பிளத்தலால்-பிளக்கின்றபடியால், பொருவில்-ஒப்பில்லாத, வேள் மன்மதனே, கட்புலனில்-நேத்திரேந்திரியத்திற்கு, புலப்படும்-விடயப்படுகின்ற உருவு-வடிவங்களை, போழ்தல் பிளத்தல், உனக்கரிதன்று-உனக்கெளிதாம்—எ-று * தொல்காப்பியம்-மரபியல-உகூ-கு-ஒன்றறிவதுவே யுற்றறிவதுவேயிரண்டறிவதுவே யதனெடுநாவே மூன்றறிவதுவே யவற்ருெடுமூக்கே நான்கறிவதுவேயவற்ருெடு கண்ணே யைந்தறிவதுவே யவற்ருெடுசெவியே யாறறிவதுவே யவற்ருெடுமனனே நேரிதினுணர்ந்தோர் நெறிப்படுத்தினரே இவ்விதியால் மனமென்றது ஓரறிவுதான் கருத்து) மன்மதனே அரூவத்தைப்பிளக்கு முனக்கு உருவத்தைப்பிளத்தல் அரிதோஎன்ருள என்பதாம். (௪)

மன்றறைறுமதுமலர்வாளிகொண்
டின்றேனுருயிரீருந்தகைமையாற்
குன்றவில்லிகொடுக்கழற்கண்ணில்வே
ளொன்றினேனெனல்பொய்யெனவேண்டுமால்.

(இ-ள்) மன்றல் வாசனையானது, நாறும்-மணக்கின்ற—மது-தேனையுடைய, மலர்வாளிகொண்டு-மலரம்புகளைக்கொண்டு, இன்று-இப்பொழுது, என் என்னுடைய, ஆர்-நிறைந்த, உயிர்-ஆவியை, ஈருந்தகைமையால்-அறுக்கின்றமுறைமையினாலே, குன்றவில்லிமேவில்லேந்திய-பரமசிவனுடைய, கொடு-கொடிய, தழற்கண்ணில்-தீவிழியில், வேள்-மன்மதனானவன், பொன்றினனெனல்-இறந்தானென்றுசொல்வது, பொய்யெனவேண்டும்-பொய்யென்றுசொல்லவேண்டும்—எ-று, (கருத்து) மன்மதனானவன் பூவம்புகொண்டென்னுயிரைப்பிளத்தலால் சிவன்நெற்றிக்கண்ணாலெரிந்தானெனல் பொய்யென்றாள் என்பதாம். (ரு)

கூற்றமென்னக்கொலைபுரிவேனிலா
னூற்றிதழ்க்கமலத்திறை நான்மைய
வாற்றல்சான்றமலர்க்கணையைந்தல
தொற்றநல்கினுலகினையென்செயான்.

(இ-ள்) கூற்றமென்ன-யமனென்னும்படி, கொலைபுரி - கொலைத்தொழிலைச்செய்கின்ற, வேனிலான் - வசந்தகாலத்திற்குரியமன்மதன், நூற்றிதழ்க்கமலத்திறை-நூறிதழ்களுடைய, தாமரைமலரி-லிருக்கின்றபிரமனானவன், நுண்மை-நுட்பமாகிய, ஆற்றல்சான்ற-வலிமையுள்ள, மலர்க்கணை-பூவம்புகளை, ஐந்தலது-ஐந்தன்றி, ஏறம்-அதிகமாக, நல்கின்-கொடுத்தல், உலகினை-உலகத்தை, என்செயான்-என்னதுன்பஞ் செய்யமாட்டான்—எ-று. (கருத்து) யமன்போற்கொலைசெய்யு மன்மதனை பிரமனைங்கணைமேலதிக்கணைதரின் உலகத்தையென்செய்யமாட்டானென்றாள் என்பதாம், (சு)

அருவமாயுமென்னாவிபதைத்துளம்
வெருவுமாறுவினைசெயும்வேனிலான்
கருமிடற்*றிறைகண்ணிலெறிந்திடா
துருவமெய்திலுலகமுமுய்யுமே.

(இ-ள்) அருவமாயும்-அருவமடைந்தும் என் என்னுடைய ஆவிபதைத்து-உயிர்பதைத்து, உளம்-மனம், வெறவுமாறு-பயங்கொள்ளும்படி, வினைசெயும்-மலர்க்கணைகளைதொடுக்கின்ற, வேனிலான்-வசந்தகாலத்திற்குரியமன்மதனானவன், கருமிடற்றிறை-நீலகண்டத்தையுடையபரமசிவனது, கண்ணில்-நெற்றிக்கண்ணில், எரிந்திடாது-எரிந்திடாமல், உருவமெய்தில்-வடிவத்தைப்பெற்றிருப்பானானால், உலகமும்-உலகமும், உய்யுமோ-பிழைக்குமா—எ-று. தருக்கசங்கிரகம் ௩௩-கு-இறையேயீசன் முற்றறிவனோர்முதலே (கருத்து அருவமடைந்திருந்தும்என்னாவி பதைக்கவும் பெய்யுமன்மதனானவன் உருவமடைந்தா லுலகம்பிழைக்குமாஎன்றாள் என்பதாம். (எ)

விரிந்தவேணிவிமலன்வெகுளியா
லெரிந்தளாரிற்பிழைத்தவர்யாவரோ
கரிந்தவேள்பிழைத்தெய்வதுமன்னியர்
புரிந்ததீவினையின்புணர்ப்பாகுமே.

(இள்) விரிந்த-விரியப்பெற்ற, வேணிசடையையுடைய-விமலன் பரமசிவனது-வெகுளியால்கோபத்தினால், எரிந்துளாரில் எரிக்கப் பட்டவர்களிலே-பிழைத்தவர்-பின்னும்பிழைத்தவர்கள, யாவர்எவர்கரிந்தவேள்-கரிந்துபோனமன்மதன், பிழைத்துபின்னும்பிழைத்து, எய்வது பாணங்களையெய்வது-கன்னியமாதர்கள், பிரிந்த-செய்த தீவினையின் பாவத்தினுடையபுணர்ப்பாகும்-சம்பந்தமாகும் — எ-று, கருத்து, சிவன்கோபத்தாலெரிந்திவரிற் பிழைத்தவாயாவர் யாவாமன்மதன்பிழைந்தெய்வது, மாதர்கள்செய்த தீவினையின் சம்பந்தமாமென்றான் எ-ம், (௮)

சடிலமன்றுபைந்தார்குழற்பின்னல்கார்
* மிடற்றுதோன்றல்விடமன்றுநானமே
புடலளாப்புவைவண்ணீறன்றுருவிலா
யடர்வதென்னையானலன்காணடியால்,

(இ-ள்) உருவிலா-வடிவமில்லாத மன்மதனே, அடர்வதென்னை என்னுடன்போர்செய்வதென்ன, சடிலமென்றுசடையன்றுபை- பசிய, தார்-பூமாலையணிந்த-குழல்-கூந்தலினது, மன்னல்பேணி, கார், கருமை-மிடறு கழுத்துனிடத்தில, தோன்றல்-தோன்றுதல், விடமன்று நஞ்சமென்று, நான்மேகத்தூரியாம், வெள்-வெள்ளிய, நீன்றுவிபூதியென்று, உடல்விளாப்புசரீரத்தினதுவெண்ணிறமாம். அரனலன்-ஆதலாலபரமசிவனல்லன் காணடி நீகாண்பாயாக — எ-று. * குவலயானந்தம்-உறுப்பியல்-மெ-ரூ-கை கால் கண் செவி மாபு புய ம் லே தலே முகம் மிதழ்விரலிவைசினையாகும், யிவ்விதியால்மிடறுசினைப்பொருள் (கருத்து) மன்மதனே சடையல்ல கூந்தலின்பின்னல், கண்டறுங்கருப்புவிஷமல்லகஸ்தூரிபூசும் வெண்ணீறல்ல-உடலவெளுப்பு ஆகையால்நான்சிவனல்ல என்னிடத்திலேன்போர்செய்கிறாய் யென்றாள்ளென்பதாம். (௯)

கொன்செய்வாளிகுளித்தசெம்புண்ணிடைத்
துன்பமெய்தத்தழல்சொரிந்தாலென
வன்பர்போலநின்றாரமிறைப்பரா
லென்செயாருயிர்த்தோழியரின்னுமே,

(இ-ள்) உயிர்த்தோழியர்-உயிரையன்னதோழியராயிருந்தவர்கள் அன்பர்போல-இப்பொழுதென்னிடத் தன்புடையவர்போல, நின்று- என்னைச்சூழ்ந்துநின்று, கொன்செய்-அச்சத்தைச் செய்கின்ற வாளி-மன்மதபாணங்கள், குளித்த-தைத்த, செம்-சிவந்த, புண்ணிடை - புண்ணினிடத்திலே, துன்பமெய்த-யான்றுன்பத்தை யுடைய, தழல் சொரிந்தாலென-நெருப்பைச்சொரிந்ததுபோல், ஆரம்-சந்தனக்குழம்பை இறைப்பார்-வீசுவார்கள், இன்னம்-இன்னமும், என்செயார்-யாது செய்பார்கள் — எ-று, (கருத்து தோழியா கள்மன்மதபாணம்பட்டபுண்ணிடத்துத்தீயைபோலுஞ் சந்தனத்தையிறைக்கிறார்கள் இன்னுமென்னசெயயமாட்டார்களென்றுளன்டதாம். (௰)

தேற்றுவார்சிலர்தேங்கமழ்வாசநீர்
தூற்றுவார்சிலர்தொல்குலதெய்வதம்
போற்றுவார்சிலர்பூண்முலைச்சாந்தினு
லாற்றுவாரினைமூற்றுகின்றார்சிலர்,

(இ-ள்) சிலர்-தோழிகளிற்சிலரானவர், தேற்றுவார் தேறச்சொல்லுவார்கள், சிலர்-சிலரானவர், தேம்-வாசனையான தூகமழ்-மணக்கின்ற, வாசநீர்பனிநீரை-தூற்றுவார்-வீசுவார்கள்-சிலர்சிலரானவர், தொல்தொன்றுதொட்டாராகித்துவருகின்றகுலதெய்வம் குலதெய்வத்தை,போற்றுவார்-பிரார்த்தனைசெய்வார்கள்,சிலர் சிலரானவர், பூண்-ஆபரணத்தையணிந்த-முலை-தனத்தின்வெப்பத்தை, சாந்தினுல்-சந்தனக்குழம்பினுல், ஆற்றுவாரின்-தணிப்பவர்களைப்போல, உழற்றுகின்றார் வெப்ப மிகச்செய்வார்கள்—எ-று, (கருத்து) சிலர்தேற்றுவார்கள்சிலர்பனிநீரைஊற்றுவார்கள் சிலர்குலதெய்வத்தைப்போற்றுவார்கள்-சிலர் சந்தனத்தாலாற்றுவார்கள்போலச்சுடுகின்றார்கள்-என்பதாம், (௰௧)

இன்னவாறுமகளிரியற்றவும்
கன்னன்மாரனகணையுயிீரவும்
பொன்னின்வார்முலைமுத்தம்பொரிந்திடத்
தன்னையும்மறந்தாடமயந்தியே,

(இ-ள்) இன்னவாறு-இவ்விதமாய், மகளிர்-தோழிகள், இயற்றவும்- உபசாரஞ்செய்யவும், கன்னல், கருப்புவில்லேந்திய-மாரன்-மன்மதனுடையகணை-பாணங்கள், உயிர் ஆவியை, ஈரவும்-பிளக்கவும், பொன்னின்-பொன்னாற்செய்த, வார்-கச்சையணிந்த, முலை-தனங்களின்மீதிற்றரித்த, முகம் முத்துகள், பொரிந்திட-நீராகவும், தமயந்தி, தமயந்தியானவள், தன்னையுமறந்தாள்-தன்னையுமறந்துவிட்டாள்—எ-று. (கருத்து) இவ்வாறுபெண்கள செய்யவும் மன்மதன் பாண மெய்யவும் முத்துக்கள் பொரிந்திடத்துறந்தாள் தமயந்திதன்னையுமறந்தாள் என்பதாம். (௧௨)

காவிமென்குழனன்னுதற்றோழியர்
காவியகட்கதிர்முலைக்கன்னியைம்
* பூவின்மெல்லணைச்சேர்த்திப்புடையிருந்
தாவியுண்டுகொலோவென்றழுங்குவார்

(இ-ள்) காவி-கஸ்தூரியணிந்த, மெல்-மெல்லிய, குழல்-கூந்தலையும், நன்னுதல்-நல்லநெற்றியையுடைய, தோழியர்-தோழிகள-காவிகருங்குவளைபோன்ற-அம், அழகிய-கண், கண்ணையும், கதிர்-காந்திபொருந்தியமுலை-தனங்களையுடைய, கன்னியை-தமயந்தியை பூவின்-மலரினாற்செய்யப்பட்ட, மெல்-மெல்லிய-அணை-மெத்தையின் மேல், சேர்த்தி-சேர்த்து, புடையிருந்து-பக்கத்திலிருந்து, ஆவி-உயிரானது, உண்டுகொலோவென்று உண்டுவில்லையோவென்று அழுங்குவார்-வருந்துவார்,—எ-று. (தொல்காப்பியம்-மரபியல்-௬௬-௫-இலையேமுறையேதளிரேதோடேசினையேகுழையேபூவேயரும்பே-நனையுளப்பட் தவ்வனையவையெல்லாமாரனும்

பரூஉக்களவிரியன்ப-இவ்விதியால்-பூஎன்றது-மரனேடு வந்தது (கருத்து)தோழிமார்களை தமயந்தியைமலரணையிற்கிடத்தி உயிருண்டோவில்லையோவென்றழுவார்களென்பதாம். (௫௩)

எண்ணியெண்ணியிரங்குவதென்னுயி
ருண்ணெகிழ்ந்ததுயிர்துறந்தாளல்ல
வுண்மைமென்றுவாய்துடிக்கின்றது
கண்ணிமைக்தனகாணுமென்பார்சிலர்

(இ-ள்) சிலர்-அத்தோழிகளிற்சிலர்,எண்ணியெண்ணி-நினைத்து நினைத்து,இரங்குவதென்-புலம்புவதென்னை,உள-உள்ளே,உயிர்ப்பு மூச்சு நெகிழ்ந்தது-அசைந்தது,உயிர் ஆவி-துறந்தாளல்ல - நீங்கினவளல்லள்,வண்மை-அழகிய,மெல-மெல்லிய,துவர்-பவளம்போன்ற, வாய்- வாயானது,துடிக்கின்றது-துடியாநின்றது,கண்-கண்களானவை இமைத்தன-இமைத்தல்செய்கின்றன,காணுமென்பர்-பாருமென்பார்கள் — எ-று, (கருத்து)தோழிகளிற்சிலர் அழவேணடியதென்ன உயிரிருக்கின்றதுவாய்துடிக்கின்றதுகண்களிமைக்கின்றன பாரென்பார்கள்சிலர்என்பதாம.(௫௪)

மைத்தடங்கணீர்மாற்றுமின்சோர்ந்துவீ
ழுத்தரீகமுயர்முலைசேர்த்துமின்
கொத்துநாண்மலரோடிழ்குலைந்தசோர்
தொய்த்தகூந்தன்முடிமினென்பார்சிலர்

(இ-ள் சிலர்-தோழிகளுர்சிலரானவர்,மை- அஞ்சனந் தீட்டிய,தடம்-விசாலமபொருந்திய,கணீர்-கண்களினீரை,மாற்றுமின்-மாற்றுங்கள்,சேர்ந்து-சோர்வடைந்துவீழ்வீழ்கின்றஉத்தரீகம்-மேற்போர்வையை,உயர் உயர்ந்த,முலை-தனத்தின்மேல்-சேர்த்துமின்-சேருங்கள்,கொத்து கொத்தாகிய,நாள் அன்றலர்ந்த,மலரோடும்-பூக்களுடனே,குலைந்து-அவிழ்ந்துசோர்சோர்கின்ற,மொய்ந்த-நெருங்கிய,கூந்தல்-குழலை,முடிமினென்பார்-முடியுங்களென்றுசொல்லுவார் — எ-று,குவலயாநந்தம-உறுப்பியல்-௫௩-சூ-பணணியலாற்கடமெனும் பொருளாய்-நாலினியல்புபடமெனும் பொருளாய்த்-திரிந்துவருதல்,சமவாயமென்பர்-இவ்விதியால்நாலசமவாயமெனக அசத்தியம் சமஞ்சமம்விபேடஞ் சமுதாயமுமுளஇதுவுமறிக(கருத்து) தொழிகளிற் சிலர் கண்ணீரைத் துடை யுங்கள் மேற்போர்வையையால் முலையைமூடுங்கள் அவிழ்ந்தகூந்தலைமுடியுங்கள் என்பார்களஎன்பதாம். (௫௫)

சுடருவெண்மதிதூற்றுந்தழற்சுட்
விடரினமூழ்கிபிறந்துபடுமுன
மடவார்கிடர்மாற்றுவன்யாரெனக்
கடன்முகட்டிநக்கிரவன்றோன்றினன்

(இ-ள்) சுடரும்-பிரகாசியாநின்ற,வென்-வெள்ளிய,மதி சந்திரனுடைய,தூற்றும்-தூற்றுகின்ற,மழல் தீயானது,சுட-சுடுதலைசெய்ய இடரில-

துன்பத்தில்,மூழ்கி-அழுந்தி,இறந்துபடுமுனம்-உயிர்நீங்குமுன்னே,மட்வார்க்கு-தமயந்திக்கு.இடர்,துன்பத்தை,யான்-நானே,மாற்றுவன்-நீக்குவன்,ஏன்-என்பவன்போல:கடன்முகட்டில்,கடலினுச்சியில்-கதிரவன்சூரியன்தோன்றினான் உதயமானான்—எ-று,(கருத்து)சந்திரனாகிய நெருப்புச்சுடதமயந்தி துன்பத்திலழுந்தியிறக்குமுன்சூரியனுதயமாயினான்-எ-ம் (௰௬)

மன்மதோபாலம்பனப்படலம்.

முற்றிற்று.

௨

இந்திரப்படலம்.

இப்படலத்தால் தமயந்தியின் சயம்வரத்திற்கு இந்திரன்முதலியதேவர்வரவுசொல்லப்படுகிறது,

கலிவிருத்தம்,

இடுக்கணைத்தவிர்த்துகளித்துளார்
நடுக்கமெய்தநலிதருவேந்தரின்
விடுத்ததண்கதிர்த்திங்களவிளங்கொளி
கெடுத்துவெய்யவன்கீழ்த்திசைத்தோன்றினான்.

(இ-ள்) இடுக்கண்-துன்பத்தை,எய்த-அங்காட்டிலுள்ளோரடைய,இகந்து-அதிக்கிரமித்து,களித்துளார்-செருக்கடைந்த குறுநிலமன்னர்,நடுக்கம்-நடுக்கத்தை,எய்த,அடைய-நலிதரு,வருத்துகின்ற வேந்திரன்-அரசரைப்போல்,விடுத்த-(தமயந்திவருந்தும்படி)விடுக்கப்பெற்ற,தண்-குளிர்ச்சிபொருந்திய,கதிர்-கிரணங்கள்நிறைந்த,திங்கள-சந்திரனுடையவிளங்கு-விளங்குகின்ற ஒளி-காந்தியை,கொடுத்து-அழித்து,வெய்ய வன்-சூரியனாவன்,கீழ்த்திசை-கீழ்த்திசையில்,தோன்றினான்-உதித்தான் "எ-று 0குவலயானந்தம்-சிறப்புப்பாயிரம், உ-ரு-என்னசொல்லினுமியன்றமருவகிற்-பன்னியுரைப்பதுபதப்பொருளாமே.இவ்விதியாலபதவுரைவகுதவாறறிக, கருத்து)குறுநிலமன்னர்துன்மேடையப்பொருநிலமன்னர் புறப்பட்டார்போலச் சந்திரபிரகாசத்தைக் கொடுத்துச்சூரியனுதயமாயினான் — எ-ம், (௧)

வையமேழுடைமன்னனிறத்தலும்
வெய்யபாசறைவிட்டகல்வேளரி
ஐயசெங்கதிராதவனேறன்முன்
செய்யவான்விட்டகன்றதுதிங்களே

(இ-ள்) வையமேழுடை-ஏழுதீபங்களையுமுடைய, மன்னன்-அரசனானவன், இறத்தலும்-வந்தஅக்கினமாத்திரத்தில், வெய்ய-வெவ்விய, பாசறைவிட்டு-படைவீட்டைவிட்டு, அகல்-நீங்குகின்ற, வேனிரின்-குறுநிலவேந்தனைப்போல, ஐய-அழகிய, செங்கதிர்-சிவந்தகிரணங்களுள்ள, ஆதவன்-சூரியனானவன், தோன்றுமுன்-உதிக்குமுன்னே, செய்ய-சிவந்த, வான்விட்டு-ஆகாயத்தைவிட்டு, திங்கள்-சந்திரனானது, அகன்றது-நீங்கியது—எ-று [இது உவமையணி] (கருத்து) சூரியனுதயமாகுமுன்னே சந்திரன்நீங்கினன் என்பதாம். (௨)

அன்னகாலையிலாய்வளைத்தோழியர்
றென்னல்வரட்டுநிலவுக்கதிர்மதி
யின்னுமெய்திறந்துபடுமென
வுன்னியன்னையொடுற்றவைகூறினர்.

(இ-ள்) அன்னகாலையில்-அப்பொழுதில்-ஆய்-ஆராய்ந்தெடுக்கப்பட்ட வளை-வளையணிந்த, தோழியர்-தோழிகள், நென்னல்-நேற்றைப்பொழுதில், வாட்டு-வாட்டிய, நிலவு-பிரகாசம்பொருந்திய, கதிர்-கிரணங்களுடைய, மதி-சந்திரனானவன், இன்னும்-இன்னமும், எய்தல்-வந்தால், இறந்துபடுமென-தமயந்திமரணத்தையடைவாளென்று, உன்னி-நினைத்து அன்னையொடு-தாயுடனே, உற்றவை - அடைந்தகாரியங்களைக்கூறினா சொல்லினார்கள்—எ-று. * அகப்பொருள்விளக்கம் அகத்திணையியல்-௯௮-ஞ-தலைவிபாங்கிக்கறத்தொடுநிற்கும் பாங்கிசெவிலிக்கறத்தொடுநிற்கும் செவிலிநற்றாய்க்கறத்தொடுநிற்கும் நற்றாய்தந்தைதன்னையர்க்கறத்தொடுநிற்குமென்ப நெறியுணர்ந்தோரே இவ்விதியால் தோழிகள்கூறினர் (கருத்து) தோழிமார்கள் தமயந்திதாயாகிய காஞ்சனமாலையிடத்துநடந்தகாரியங்களைச்சொன்னார்கள் என்பதாம். (௩)

அத்திறந்தெரிந்தாய்மலர்க்கோதைவெண்
முத்தமூரன்முதுக்குறைந்தாளென
வுய்த்துரைத்தனடோடைப்புகர்முக
மத்தமால்கரிமன்னவர்மன்னற்கே.

(இ-ள்) அத்திறந்தெரிந்து - அச்செவிலிசொல்லியதிறத்தைதெரிந்துகொண்டு, ஆய்-ஆராய்ந்தெடுக்கப்பட்ட, மலர் - மலர்மாலையணிந்த, கோதை-கூந்தலையுடையநற்றாயானவள், வெள்-வெள்ளிய, முத்தம்-முத்துக்களையொத்த, மூரல்-பற்கள்பொருந்திய தமயந்தியானவள், முதுக்குறைந்தாளென-பேரறிவடைந்தாளென்று, ஓடை-பட்டமணிந்த, புகர்முகம்-புள்ளிபெற்றமுகமுள்ள, மத்தம-மதங்கொண்ட, மால்-பெரிய, கரி - யானையையொத்த, மன்னவர்மன்னற்கு-வீமராசனுக்கு, உய்த்து-அவ்விடத்திற்கருத்தைச்செலுத்தி, உரைத்தனள்-சொல்லினாள்—எ-று, (கருத்து) காஞ்சனமாலையதையறிந்து தமயந்திபேரறிவடைந்தாளென்றுதன் கணவனாகிய வீமராஜனுக்குச்சொன்னாளென்பதாம், (௪)

தடங்கொள்வெம்முலைசாற்றியமாற்றமு
மடங்குசிந்திடையாக்கமுநோக்கிய

மடங்கலேறனையான்மணநாட்டிய
முடங்கலபோக்கினன்மொய்கழல்வேந்தர்க்கே,

(இ-ள்) அடங்கொண்டபாகமையைக்கொண்டு, வெம்-விருப்பத்தைத்தருகின்ற, முலை-தனத்தைப்பெற்றதுணைவியானவள், சாற்றிய-சொல்லிய, மாற்றமும்-சொல்லையும், துடங்கு-வளையாநின்ற, சிற்றிடை-சிறியவிடையையுடைய தமயந்தியினது, ஆக்கமும்-பருவத்தையும், நோக்கிய-கண்ட, மடங்கலேறனையான் - ஆண்சிங்கத்தையொத்தவீமராசனானவன், மணம்-விவாகத்தை, நாட்டிய-குறிக்கப்பெற்ற, முடங்கல்-ஓலையை, மொய-நெருங்கிய, கழல்-வீரக்கழலணிந்த, வேந்தர்க்கு-அரசர்க்கு, போக்கினன்-செலுத்தினன்—எ-று, (கருத்து) வீமராசன் தன்மனைவிசொன்ன சொல்லையும் தமயந்திபார்த்துத் திருமணஓலை தயத்துதேசததராசர்களுக்கனுப்பினனென்பதாம், (௫)

வேலைசூழ்புவிமன்னர்க்குவேந்தர்கோ
னோலைபோக்கியதோர்ந்துயர்கற்பக
மாலைதாழ்முடிவாசவற்கோதுவான்
ஞாலமேத்திசைநாரதன்போயினன்,

(இ-ள்) வேந்தர்கோன்-வீமராஜனானவன், வேலைசூழ் - கடல்சூழ்ந்த புவிமன்னர்க்கு - பூமண்டலத்தையாளுகின்றவரசர்க்கு, ஓலை-ஓலையை, போக்கியது-செலுத்தியதை, ஓர்ந்து-அறிந்து, உயர்-உயர்ந்த, கற்பக மாலை-கற்பகத்தினுடையமலர்மாலை, தாழ்-தாழ்கின்ற, முடி மகுடமணிந்த, வாசவற்கு-இந்திரனுக்கு, ஓதுவான்-சொல்லும்பொருட்டு, ஞாலம்-உலகத்தார், ஏத்து-துதிக்கின்ற, இசை-புகழ்பெற்ற, நாரதன்-நாரதமுனிவன், போயினன்-போனான்—எ-று. (கருத்து நாரதமுனிவனானவன் வீமராஜன் அரசருக்கோலைவிட்டதையறிந்து தேவேந்திரனுக்குச்சொல்லும்பொருட்டுப்போயினன்-என்பதாம், (௬)

அறுசீர்க்கழிநெடில்யாசிரியவிருத்தம்,

வானவரொண்சுடரெறிக்குமுடிதாழ்த்துவனைகழற்கால் வணங்கியேத்தத், தேனிமிருங்கற்பகநாண்முகையுடைந்துபசியநறுந்தேறலூற்ற, மேனகைசாமரையிரட்டவுருப்பசிவெள்ளடையுதவவிளரித்தீஞ்சொற், பாணலங்கட்டிலோத்தமைமென்சதி முறையிற்பதம்பெயர்க்குமாணுதூங்க,

(இ-ள்) வானவர்-தேவர்களுடைய, ஒள்-ஒள்ளிய, சுடர் - காந்தியை எறிக்கும்-வீசுகின்ற, முடி-மகுடங்களை, தாழ்த்து-தாழச்செய்து, வனைகழற்கால்-வீரக்கழலைபணிந்தபாதத்தை, வணங்கி-தாழ்ந்து, ஏத்த-புகழவும், தேன்-வண்டுகளானவை, இமிரும்-ஒலிக்கின்ற, கற்பகம்-கற்பகத்தினுடைய, நாள்-அன்றலர்ந்த, முகை-அரும்புகள், உடைந்து-உடைபட்டு, பசிமை-பெருகிய, நறும்-நறிய, தேறல்-தேனை, ஊற்ற-சொரியவும், மேனகை-மேனகையானவள், சாமரை-கவரிகளை, இரட்ட - அசைக்கவும், உருப்பசி - உருப்பசியானவள், வெள்ளடை - தாம்பூலத்தை, உதவ - கொடுக்கவும், விளரி - விளரியென்னுமிசையைய பொ

ந்த,தி- மதுரம்பொருந்திய,சொல்- சொல்லையும், பானல்,நீலோற்பலம்போன்ற-அம-அழகிய,கண்-கண்களையுமுள்ள,திலோத்தமை-திலோத்தமையானவள்,மெல்-மெல்லிய,சதிமுறையில்-தாவவொத்தின்முறைப்படிபதம்பெயர்க்கும்-பதம்பெயர்தற்குரிய-பாணிதுங்க-அஸ்தாபிநயஞ்செய்யவும்,எ-று, தொன்னூல்விளக்கம்,இயைபிசை தொல்லுருபீற்றிசொத்தாதலே-இவ்விதியால்-எற்ற- ஊற்றளனவீற்றிலடுக்குவருதலால் இயைபிசையலங்காரம் (கருத்து) தேவர்கள்வணங்கவும்கற்பகத்தருக்கள்தேன் சொரியவும மேனகைசாமரைபோடவும -உருப்பசிதாம்பூலங்கொடுக்கவும்திலோத்தமையபிநயஞ்செய்யவும்-எ-ம்,இதுமுதல்ஐந்துகுளகம்,   (எ)

தண்டரளமணிமுறுவலயிராணிவரிபரந்ததடங்காமர், வண்டுபகட்டெழின்மார்பின்மந்தாரநறுந்தெரியன்மலரில்வீழப்,புண்டரிகச்செழுங்காடுபூத்ததெனவிழிமலர்கள்பொலிந்துதோன்றத்,தெண்டிரைவாயமிழ்தமெனத்தெள்விளித்தேனரமகளிர்செவியினூற்ற,

(இ-ள்) தண்-குளிர்ந்த,தரளம்- முத்துகள்போன்ற, மணி-அழகிய,முறுவல்,பற்களையுடைய,அயிராணி-இந்திராணியின்,வரி,இரேகைகளானவை-பரந்த- பரவப்பெற்ற,தடம்- விசாலப்பொருந்திய,கண்-கண்களென்னும்,காமர்-அழகிய,வண்டு,வண்டுகளானவை- பகடு-பகைமைபொருந்திய,எழில்-அழகிய,மார்பின்- மார்பிலணிந்த, மந்தாரம்-மந்தாரத்தினைதாம்-கல்ல,தெரியல்-மாலையினுடைய,மலரில்-பூவில்,வீழ-மொய்க்கவும்,புண்டரிகம் தாமரையினுடைய செழுங்காடு- செழிமையுள்ளவனம,பூத்ததெனபூத்ததென்னும்படி, விழிமலர்கள்-நேத்திரகமலங்கள்,பொலிந்துபிரகாசித்து,தோன்ற-விளங்கவும,தெள்-தெள்ளிய,திரைவாய்-சுடலினிடத்துண்டாகிய அமிழ்தமென அமிர்தமென்று சொல்ல,தெள்விளித்தேன்-தெள்விளியென்னுமிசைத்தேனை ,அரமகளிர- அரமபையரானவர்கள,செவியின்- காதினிடத்திலே-ஊற்றசொரியவும்,எ-று, (கருத்து)இந்திராணிகண்கள்மந்தாரமாலைமலரில் விழவும,ஆயிரங்கண்கள்விளங்கவும,அரமபையர்கள்பாடவும்,எ-ம்,   (அ)

மருவுயிர்க்குநறுந்துணர்மென்மலர்பொதுளும் பொலன்றருவுமணியுமானுமிருநிதியுமவிழிக்கடையினருளேற்றி முறைமுறைநின்றேவல்கேட்பக், கருநிணர்க்கண்கவர்வண்ப்பிறங்கதருவடமகளிர்களித்தபாடற், கருதிமுறைபிறழாமன்மாடகயாழ்நரம்புளருந்துழனியார்ப்ப

(இ-ள்)மருவாசனையை,உயிர்க்கு- வீசுகின்ற, நறும்-நறிய,துணர்-கொத்தாகிய,மெல்-மெல்லிய,மலர்- மலர்களானவை,பொதுளும் -நெருங்கியபொலனபொன்மயமாகிய, தருவும்,ஐந்தருவும் மணியும்-சிந்தாமணியும்,ஆனும்-காமதேனும் - இருநிதியும்- சங்கநிபதுமநிதியென்னுநிதிகளிரண்டும்,விழிக்கடையின் கடைக்கண்களினுடைய,அருள்- அருளை, நோக்கிபாத்து,முறைமுறைநின்று-வரிசைவரிசையாகநின்று,ஏவல்-ஏவலை,கே

ட்ப-கேட்கவும், கருதினர்-நினைத்தவர்களுடையாகஞ்-கண்களை, கவர்-பற்றிக்கொள்கின்ற, வனப்பின்-அழகினைப்பொருந்தியசுந்தரருவர்கக்தருவருடையன்மடம்-இளமைபொருந்திய, மகளிர்-மாதர்கள், கனிக்க-முதிர்ந்த, பாடல்-பாடல்களாலே, சுருதி-ஒலியினது, நரம்பு-வரிசைகள், பிறழாமல்-வேறுபடாமல், யாட்கம்-முறுக்காணியோடுகூடிய, யாழ்-வீணையின், நரம்பு-நரம்பினை, உள்ளுப-தடவுகின்ற, அழுனி-ஒலியானது, ஆர்ப்ப-ஒலிக்கவும்-எ-று, குவலயாநந்தம்- பலதொழிற்பெயரோவினைச்சொல்லென்ப (கருத்து) ஐங்கருவும்- சிந்தாமணியுங்காமதேனுவும்-சங்கநிதியும்-பதுமநிதியும்-ஏவல்கேட்கவும கந்தருவமாதர்கள வீணைவாசிக்கவுமெ-ம், (௬)

மருங்கினொருபுடைவிசித்த சுற்றுடைவாள் வட்டுடையின்வயங்கவோர்பால்; பொருங்குலிசப்படைகமஞ் சூன்முகிலினிடை விளங்குமின்னிற்பொலிவுகாட்ட, சுரும்பிரமிஞ்சில்லோதிப்புலோமசைசெம்பஞ்சடிமென்சுவடுதோய்ந்து, விரிந்ததடம்புயம் பவளக்கொடிபடர்ந்தகுலவரையின்விளங்கிததோன்ற.

(இ-ள்) மருங்கின்-இடையில், ஒருபுடை- ஒருபக்கத்தில், விசித்த-கட்டியாகுற்றுடைவாள்-குறியசுரிகையானது, வட்டுடையின்-அரைக்கவசத்தின்மீது, வயங்க-பிரகாசிக்கவும் ஓர்பால்-ஒருபக்கத்தில்-பொரு-போர்செய்கின்ற குலிசப்படை-வச்சிராயுதமானது, கமம- நிறைவுபொருந்திய, சூல்கருப்பத்தையுடைய, முகிலினிடைய- மேகத்தினிடத்திலே-விளங்கு-பிரகாசிக்கின்ற, மின்னில்- மின்னலைப்போல-பொலிவு-காந்தியை, காட்ட-காண்பிக்கவும, சுரும்பு-வண்டுகளானவை இமிர், ஒலிக்கின்ற, அம-அழகிய, சில்-பொன்வட்டத்தகட்டினையணிந்த, ஓதிகூந்தலையுடைய, புலோமசை-இந்திராணியினது, செம்பஞ்சுக்குழம்பணிந்த, அடி-பாதங்களின், மெல்-மெல்லிய-சுவடு- சுழும்பு, தோய்ந்து-பொருந்தி, விரிந்த-விரியப்பெற்ற, தடம்-விசாலம்பொருந்திய, புயம- தோள்களானவை, பவளக்கொடி-பவக்கொடிகள்படர்ந்த, படரப்பெற்ற-குலவரையின் குலகிரிகளைப்போலவிளங்கித்தோன்ற-பிரகாசித்துத்தோன்றவும்-எ-று, (கருத்து) ஒருபக்கத்திலுடைவாள்பிரகாசிக்கவும்மற்றொருபக்கதிதில்இந்திராணிகாற்சுவடுபட்டபுயங்கள்பிரகாசிக்கவுமெ-ம் (௭)

விஞ்சையர்கின்னரரவுணருரகர்புவிமுழுதாளுவேந்தர்யாரு, மஞ்சலிசெய்திருமருங்கும்புடைசூழமுனிவர் குழாமாசிகூற, வெஞ்சலில்பல்வளஞ்சிறப்பவரியணையில்வீற்றிருக்குமிமையோர் வேந்தைக், கஞ்சமலராயனளித்தமறையபயினாதனிருகண்களிப்பக்கண்டான்,

[இ-ள்] விஞ்சையர், வித்தியாதரர்களும்-கின்னரர்-கின்னரர்களும-அவுணர்அசுரரும், உரகர்-நாகரும், புவிமுழுதாளுய-பூலோகமுழுதையுமாட்சிசெய்கின்றவேந்தர்யாரும்-அரசர்கள் யாவரும், அஞ்சலிசெய்து -வணக்கஞ்செய்து, இருமருங்கும-இரண்டுபக்கத்திலும, புடைசூழ-நெருங்கிச்சூழவும்முனிவர்குழாம்-முனிவர்கூட்டங்கள், ஆசிகூற-ஆசீர்வதிக்கவும் எஞ்சலில்-குறைவில்லாத, பல்-பலவாகிய, வளஞ்சிறப்ப-வளங்களானவைமிகு

மிக, அரியணையில்-சிங்காசனத்தில், வீற்றிருக்கும்-வீற்றிருக்கின்ற, இமையோர்வேந்தை-இந்திரனை, கஞ்சமலர்-தாமரைமலரிலிருக்கின்ற, அயன்-பிரமனானவன், அளித்த-பெற்ற, மறை-வேதத்தை, பயில்-பயிற்சிசெய்கின்ற, நாரதன்-நாரதமுனிவன், இருகணை-தன்னிருகண்களும், களிப்ப-களிப்பையடைய, கண்டான-பார்த்தான்-எ-று, (கருத்து) விஞ்சையர்களும்-கின்னரர்களும்-அசுரர்களும்-நாகர்களும்-புலிபாசர்களும்-புடைசூழவும்-முனிவர்களாசீர்வதிக்கவும்-சிம்மாதனத்திலிருக்குமிந்திரனைநாரதன்கண்டான்,எ-ம. (௰௧)

பொன்னகரந்தனிற்புரக்கும்புரந்தரனுநாரதமுனிவன்புகுதலோடு,
முன்னரியற்றியதவத்தினெய்தப்பயனிப்பிறப்பிமுடிந்ததாமென்,றன்ன
முனிவரனுவப்பவருக்கியபாத்தியமுதலாவனைத்துநல்கி, யின்னமுத
முகுவன்போலினிதுரைக்குமுகமனொடிருக்கையீந்தான்.

(இ-ள்) பொன்னகரம்-அமராவதியை, தனி-ஒப்புற-புரக்கும்-அளிக்கப்பெற்ற, புரந்தரன்-இந்திரனானவன், நாரதமுனிவன்-நாரதமுனிவன், புகுதலோடும்-அடைந்தமாத்திரத்தில், முன்னர்-முற்பிறப்பில், இயற்றிய-யான்செய்த, தவத்தின்-தவத்தினாலே, எய்து-அடையவேண்டிய, பயன்-பிரயோசனம், இப்பிறப்பில்-இந்தப்பிறப்பில், முடிந்ததாமென்று-முற்றுப்பெற்றதாமென்று, அன்னமுனிவரன்-அந்தநாரதமுனிவன், உவப்ப-மகிழ்ச்சியையடைய, அருக்கியபாத்தியமுதலா-அருக்கியபாத்தியமுதலாக, அனைத்தும்-யாவையும், நல்கி-கொடுத்து, இன்னமுதம்-இனியவமிர்தமானவை, உகுவனபோல்-சொரிவனபோல், இனிது-இனிதாக, உரைக்கும்-சொல்லுகின்ற, முகமனொடு-உபசாரத்துடன், இருக்கை-ஆசனத்தை, ஈந்தான-கொடுத்தான்-எ-று. *ஆவலபானந்தம்-உறுப்பியல்-ம ரு-பாடல்படித்தல் கொள்ளுதல்-கொடுத்தலணிதல், புனைதலாம்-பல தொழிலுமுயர்திணைமுப்பாற்குரியவாகும், இவ்விதியால்கொடுத்தலறிக (கருத்து) தேவேந்திரன்-நாரதன்வந்தமாத்திரத்தில் ஆசனங்கொடுத்தான்-எ-ம. (௰௨)

உருகியுளங்களிசிறப்பவாயிரங்கண்மலராலுமொருங்குநோக்கி
யருமறையோயிவணீங்கிநெடுங்காலமெவ்வுலகிலடைந்தாயென்னப்
பொருவரியதவமுனிவன்வானவர்கோன்முகநோக்கிப்புணரிசூழ்ந்த
விருநிலத்திற்கடவுணதிப்புனலாடியித்துணைநாளிருந்தனென்றான்.

(இ-ள்) உருகியுளம்-மனமுருகி, களிசிறப்ப-களிப்புமிக, ஆயிரங்கண்மலராலும்-ஆயிரங்கண்களாகியதாமரைமலராலும், ஒருங்கு-ஒருமிக்க, நோக்கி-பார்த்து, அருமறையோய்-நாரதமுனியே, இவணீங்கி-இவ்விடம்விட்டு, நெடுங்காலம்-நெடுநாளாக, எவ்வுலகில்-எந்தவுலகத்தில், அடைந்தாயென்ன-போயினையென்றுகேட்க, பொருவரிய-ஒப்பில்லாத, தவமுனிவன்-தவத்தையுடையநாரதமுனிவன், வானவர்கோன்-இந்திரனது, முகநோக்கி-முகத்தைப்பார்த்து, புணரிசூழ்ந்த-சமுத்திரஞ்சூழ்ந்த, இருநிலத்தில்-பெரியபூமியினிடத்தில், கடவுள்-தெய்வத்தன்மையுள்ள

நதிப்புனலாடி-நதிதீர்த்தங்களிலேஸ்நானஞ்செய்து, இத்துணைநாள்- இவ்வளவுநாள், இறந்ததென்றான்-கழிந்ததென்றான்-எ-று, (கருத்து) தேவேந்திரன் நாரதனைப்பார்த்து இவ்வளவுநாளெங்கேபோனீரென்றுகேட்க நாரதன்பூலோகத்திற்றீர்த்தமாடப்போனேனென்றான்-எ-ம, (௰௩)

என்றுமுனிவரனுரைப்பக்கடல்புடைசூழ்நிலவலயத்திகல்வேன்மன்னர், துன்றுசமந்துறந்தனர்கொல்சுடர்க்கதிர்போழ்ந்தரமகளிர் துணைமென்கொங்கை, மன்றல்வீழ்ந்திங்கெமக்கோர்நல்விருந்தாய்வரலொழிந்தவாறேதென்றான், குன்றினிருஞ்சிறையரிந்தசுடர்வைரப்படைசுமந்த குவவுத்தோளான். (௰௩)

[இ-ள்] என்று-இப்படியென்று, முனிவரன்-நாரதமுனிவன், உரைப்ப-சொல்ல, குன்றின்-பர்வதங்களுடைய, இரும்-பெரிய, சிறை-இறகுகளை, அரிந்த-அறுந்த, சுடர்-பிரகாசம்பொருந்திய, வைரப்படை-வச்சிராயுதத்தை, சுமந்த-தாங்கிய, குவவு-திரட்சிபொருந்திய, தோளான்- புயங்களையுடையவனாகியவிந்திரன், கடல்புடைசூழ்-கடலாற்புடைசூழப்பட்ட, நிலவலயத்து-பூமண்டலத்தில், இகல-போர்செய்கின்ற, வேல-வேற்படையேந்தி, மன்னர்-அரசரானவர், துன்று-நெருங்கிய, சமர்-பேரை, துறந்தனர்-கொலவிடுத்தனரோ, சுடர்க்கதிர்போழ்ந்து- சூரியமண்டலத்தைக்கிழித்துக்கொண்டு, அரமகளிர்-அரமங்கையர்களின், துணை-இரண்டாகிய, மெல்-மெல்லிய, கொங்கை-தனத்தினுடைய, மன்றல்-மணத்தை, வீழ்ந்து-விரும்பிய, இங்கு-இவ்விடத்தில், எமக்கு-எமக்கு, ஓர்- ஒப்பற்ற, நல்லவிருந்தாய்-நல்விருந்தாகி, வரல்-வருதலை, ஒழிந்தவாறு-நீங்கியவிதம், ஏதென்றால்-என்னகாரணமென்றான்-எ-று, [கருத்து] இப்படிநாரதன்சொல்லத் தேவேந்திரன் உலகத்தரசர் யுத்தத்தைவிட்டார்களோ வீரசொர்க்கத்துக்குவராதிருந்தவகையென்னவென்றான-எ-ம. (௰௪)

கன்னல்கமுகெழில்காட்டுந்தண்பணைசூழ்விதர்ப்பநகர்காவல்பூண்ட, மன்னனருந்தவப்பேற்றாலுலகினில்வனப்பனைத்துமொருவடிவமாகி, யன்னநடைவாய்ந்துமதர்விழியெனவாண்முகத்தினிரண்டையில்வேறுக்கிப், பொன்னவிர்பூணமுலையென்னப்பொருப்பேந்தியிருநிலத்திற்பெசவிந்ததன்றே,

[இ-ள்] கன்னல்-கரும்புகளானவை, கமுகு-கமுகைப்போலும், எழில்காட்டு-அழகுடையதாய்வளர்ந்துகாட்டுகின்ற, தண்-தண்ணிய, பணைசூழ்-வயல்களாற்சூழப்பட்ட, விதர்ப்பநகர்-விதர்ப்பதேசத்தை, காவல்பூண்ட-காக்குந்தொழிலையடைந்த, மன்னன்-வீமராசனுடைய, அருந்தவப்பெற்றான்-அரியதவப்பேற்றினாலே, உலகில்-உலகத்திலிருக்கின்ற வனப்பனைத்தும்-அழகெல்லாம், ஒருவடிவமாகி- ஓருருவாகி, அன்னநடை-அன்னத்தினடையை, வாய்ந்து-பொருந்தி, மதர்-மதர்த்த, விழியென-கண்களென்றுசொல்லும்படி, வாள்-ஒளிபொருந்திய, முகத்தின்- முகத்தினிடத்திலே, இரண்டயில்வேல்-கூரியவிரண்டுவேற்படைகளை, தாங்கி-தாங்கிக்கொண்டு, பொன்-பொன்னினாற்செய்யப்பட்டு, அவிர்-பிர

காசிக்கின்ற, பூண்-ஆபரணங்களையணிந்த, மூலையென்ன- தனங்களென்றுசொல்லும்படி, பொருப்பு-இரண்டுமலைகள், ஏந்தி-தாங்கி, இருநிலத்தில்-பெரியபூவுலகில், பொலிந்தது-பிரகாசித்தது-எ-று. [கருத்து] விதர்ப்பதேசத்தரசனுகிய வீமனுறவத்தால் உலகத்தழகெல்லாமொருவடிவாகித் தமயந்தி உதித்தாள்-எ-ம. (௫௫)

ஆங்கவண்மேல்விழைவினராயநின்னுலகிற்போகமுமின் னமிழ்துமனையாண், மாங்குயிலின்றீங்குதலைமொழிக்கிணையாச்சிறிதேனுமதிக்ககில்லார், பூங்கமலமுகையனையபொறிசுணங்குகொரிளமுலையின் பூசல்வேண்டும், வீங்குகடம்புயமெலியவிளைத்திடுவாளமர்துறந்தார்வேந்தரெல்லாம்,

(இ-ள்) அங்கு-அவ்விடத்தில், அவண்மேல்- அத்தமயந்தியென்னுமாதின்மேல்விழைவினராய, விருப்பையுடையவராகிய, நின்னுலகு- உன்னுடையவுலகத்தில், போகமும்-போகத்தையும், இன்னமிர்தும்-இனியவமிர்தத்தையும், அனையாள்-அவளுடைய, மாங்குயிலின்-மாமரத்திலுள்ளகுயிலின்மொழியையொத்த, தீம்-மதுரம்பொருந்திய, குதலைமொழிக்கு மழலைச்சொல்லுக்கு, இணையா-ஒப்பாக, சிறிதேனும்-அற்பமாயினும், மதிக்ககில்லார்-மதியாதவர்களாய், பூ-அழகிய, கமலமுகையனைய- தாமரையரும்பையொத்த, பொறி-புள்ளிகளைபொருந்த, சுணங்கு-தேமல், ஆர்-நிறைந்த, இளமுலையின்-இளமைபொருந்தியதனங்களின், பூசல்-போரை, வேட்டு-விரும்பி, வீங்கு-பருத்த, கடம்-விசாலம்பொருந்திய, புயம்-தோள்கள், மெலிய-வாட, விளைத்திடு-செய்கின்ற, வாளமர்-வாட்போரையாச்செய்யும்போரை, வேந்தரெல்லாம்-அரசர்யாவரும், துறந்தார்-விட்டார்கள்-எ-று, * வலயானந்தம்-முறுப்பியல், ௯-கு-ராவாலறிவனகவையுள்பொருளை இவ்விதியால் அமிழ்து கவையுள்ளபதார்த்தம் கருத்து அரசர்கள் தமயந்தியிடைகனதனப்போரைவிரும்பி வாட்போரை விட்டார்கள்ளன்றுணர்-எ-ம, (௫௬)

அத்தகையமடவரலோராண்டகையைமுளத்தமைத்தாளவனையீன்ற, மூத்தநெடுங்குடைவேந்தனிலவலயமினிதளிக்குமுதல்வர்க்கெல்லாம், முய்த்துணரச்சுயம்வரமென்றோலை போக்கினனதனையுரைப்பானெண்ணி, யித்தலையெய்தினனென்றானின்னிசைநாரதமுநுணர்ந்தயாழ்வல்லோனே.

இ-ள். அத்தகைய-அப்படிப்பட்ட, மூள்ள, மடவரல்-தமயந்தியானவள், ஓர்-ஒரு, ஆண்டகையை-ஆண்மகளிற்சிறந்தவனை, உளத்து-மனத்தின்கண், அமைத்தாள்-வைத்தாள், அவனையீன்ற- அவளைப்பெற்ற, மூத்தம்-முதிர்ச்சியுற்ற, நெடுங்குடை- நெடியகுடையையுடைய, வேந்தன்-வீமராசனானவன், நிலவலயம்-பூமண்டலத்தை, இனிது-இனிதாக, அளிக்கும்-புரக்கின்ற, முதல்வர்க்கெல்லாம்-தலைமைபூண்டாவரசரனைவர்க்கும், உய்த்து-கருத்தைச்செலுத்தி, உணர்-அறிய, சுயம்வரமென்று-சுயம்வரநாளின்னாளென்று, ஓலைபோக்கினன்-எழுதப்பட்டவோலையைச்செலுத்தினான், அதனை-அச்செய்தியை, உரைப்பான்- உரைக்கும்படி.

க்கு, எண்ணி-நினைத்து, இத்தலை-இவ்விடத்தில், எய்தினனென்றான்-வ ந்தேனென்றுசொன்னான், இன்னிசைநூல்-இனியவிசைநூல்முழுது,மு ழுவதையும், உணர்ந்த-அறிந்த, யாழ்வல்லோன்- யாழின்வல்ல, நாரத ன-முனிவன-எ-று. ஓ குவலயாநந்தம்-உயர்திணையஃறிணை-யிருதிணை யிலும் வரும்பொருள் பலவும்பொருளெனவறைப இவ்விதியால்- உள ப-அஃறிணை(கருத்து)அத்தமயந்தி-நளனையிச்சித்தாள- அவளைப்பெற் றவீமன உலகத்தார்க்கெல்லாம் சுயம்வரமென்றோலைவிட்டான-அதை ச்சொல்லும்பொருட்டிங்குவந்தேனென்றான்-எ-ம். ௰௭

* விண்ணகத்துமபெற்றகரியவிழுமபொருணீபெறவேண்டல் வி
ரிநீர்சூழ்ந்த,மண்ணகத்துவருதியெனமகபதிவாண்முகநோக்கிமகிழ்ந்து
கூறிப், பண்ணமைந்ததீஞ்சொற்றமயந்திசுயம்வரத்திற் பாரில்வேந்த
ர், நண்ணியமர்விளைப்பதுகாணகுவலென்றாசிபலநவின்றுபோனான்.

இ-ள், விண்ணகத்தும்-தேவருலகத்தும், பெறற்கரிய- பெறுதற்கரு மையான, விழுப்பொருள-சிறப்புபெற்றநளை, நீ பெறவேண்டில-நீபெற விரும்பினையாயின, விரிநீர்சூழ்ந்த-கடலாற்சூழப்பட்ட, மண்ணகத்து- பூவுலகத்தில், வருதியென-வருவாயென்று, மகபதி-இந்திரனுடைய, வா ள்-ஒளிபொருந்திய, முகநோக்கி-முகத்தைப்பார்த்து, பண்ணமைந்த-பண் ண்பொருந்திய, தீ-தித்திப்புள்ள, சொல்-மழலைச்சொல்லையுடைய, தமயந்தி- தமயந்தியினது, சுயம்வரத்தில்-சுயம்வரநாளில், பாரில்-பூமியிலிருக்கின் ற, வேந்தர்-அரசரானவர்கள், நண்ணி-அடைந்து, அமர்-போர்த்தொழி லை, விளைப்பது-செய்வார், அது- அப்போரை, காணகுவலென்று-பார்ப்பே னென்று, ஆசிபல-அநேகஆசீர்வாதங்களை, நவின்று-சொல்லி, போனான் நாரதமுனிவன்போயினான-எ-று, அ ம் று-ஏ-அசைகள். * குவலயாநந்தம் உயிர்பொருளுயிரிலாப்பொருளிருவகை இவ்விதியால்-விண்ணகமுயிரி லாப்பொருளைக்குறிக(கருத்து) விண்ணிற்பெறுதற்கரியபொருளை ம ண்ணிற்பெறவிரும்புவையாகில்வாவென்றுவாழ்த்திப்போரைக்காணபே னென்றுநாரதன்போனான்-எ-ம். ௰௮

அருந்தவனேகலுமிறைவனடன்மாரன்பகழிபொறலற்றானாகிக், க
ருந்தடங்கட்டமயந்திகதிர்முலையும்வார்காதுங்குழையுமென்றோளு, முருந்
தினிளமுறுவலும வாணுதலுமதியுமுருவொளியாமுணர்ந்தோன்ற
வருந்தியயிராணிமுதலரம்பையர் பாலுறுங்காதலுமறந்தானன்றே,

இ-ள். அருந்தவன்-நாரதமுனிவன்,ஏகலும்-போனவளவில், இறைவ ன்-இந்திரனானவன், அடல்-வலிமைபொருந்திய,மாரன்-மன்மதனது,பக ழி-பாணங்கள், பொற-பொறுக்க, ஆற்றானாகி-பொறுக்கமாட்டாதவனா ய, கரு-கரிய, தடம்-விசாலம்பொருந்திய,கண்-கண்ணையுற்ற, தமயந்தி-த மயந்தியினுடைய,கதிர்முலையும்-காந்திபொருந்தியஸ்தனங்களும், வார்கா தும்-நெடியசெவிகளும், குழை- மூங்கில்போன்ற, மென்றோளும், மெல் லியதோளும், முருந்தினிளம - மயிலிறகின்முதன்முளைபோன்ற, மு

றவலும்பற்களும், வாள்ஒளிபொருந்தியமுகவதியும்முகமாகியசந்திரனும,உருவெளியாய்உருவெளிதோற்றமாய், முன்னாளதிரே,தோன்றதெரிய,வருந்தி-வருத்தப்பட்டு, அயிராணிமுதல-இந்திராணிமுதலாகிய,அரம்பையர்பால் அரமகளிரிடத்தில்,உறு - மிகுந்த,நலனும நலத்தையும்,மறந்தான்மறந்துவிட்டானஎ-று கருத்து) தேவேந்திரனமன்மதபாணததாக்கச்சகியாதவனாய்த்தமயந்தியுருவெளியாகத்தோற்றவருத்தம்பட்டிராணிமுதலியோரின்பங்களைமறந்தானஎ-ம். (௰௯)

மண்ணுலகின்மடவாலைவிழைந்தனனமிறைவனென்னவருந்திமாழாந்,தெண்ணினமதெழினலனுமிளமையுநன்றாயவெனவிகழ்ந்துகூறி,வெண்ணிலவுபொழிதாளமுறுவலயிராணிமுதல் விண்ணில்வாழுமொணணுதன்மகையார்மடநாணமீதூரவோவியமபோன்றுணர்வுதீர்ந்தார்,

(இ-ள்) மண்ணுலகின் - பூவுலகத்திலிருக்கின்ற மடவாலை-ஒருபெண்ணாகியதமயந்தியை, விழைந்தனன் - விரும்பினான், நம்மிறைவனென - நம்முடையரசனென்று,வருந்திவருந்தப்பட்டு, மாழாந்து மயக்கமடைந்து, எண்ணின் - எண்ணுமிடத்தில்,நமதுநம்முடைய,எழிலனும் - அழகினுடையதன்மையாம்,இளமையும்-இளமைப்பருவமும், நன்றாயவென-நல்லதாயவென்று,இகழ்ந்துகூறிபழித்துச்சொல்லி,வெள்-வெள்ளிய,நிலவுபிரகாசத்தை,பொழி-பொழிகின்ற,தாளம்- முத்தினைபொத்த, முறுவல்பற்கள்பொருந்திய, அயிராணிமுதல் இந்திராணிமுதலாகிய,விண்ணில்வாழும்-தெய்வலோகத்தில் வாழ்கின்ற,ஒள்-ஒள்ளிய,நுதல்நெற்றியையுடையமங்கையர்மாதர்கள், மடம்-அறியாமையும,நாண நாணும்,மீதூர அதிகரிக்க, ஓவியம்போன்று சித்திரத்தைபொத்து வுணர்வுதீர்ந்தார்-அறிவுநீங்கினார்கள்-எ-று, (கருத்து) இந்திராணிமுதலான மங்கையர்கள்நமதரசன் தமயந்தியைஇச்சித்தானென்று சித்திரத்தைபொத்தறிவிழந்தார்கள்எ-ம். (௨௰)

மாதாநெடுங்கணரமகளி ரிவ்வாறு துயருழப்பமனத்தினோரத்ததைமலர்க்கற்பகநறுந்தார்மணிமார்பன் றுயர்கூர்ந்து தருமனவெய்யகதழெரிப்புத்தேள்வருணனுடனேகக்கொடிஞ்சியந்தேர்கடிதிற்றூண்டியதிருநெந்திரையாழிசூழ்புவியுநெல்லையில்வந்தடைந்தானமன்னோ,

(இ-ள்) மதர்மதர்த்த,நெடுங்கண் - நெடியகண்களையுடைய,அரமகளிர்-அரம்பையரானவர்கள்,இவ்வாறு-இந்தப்பிரகாரம், துயருழப்ப-துன்பப்பட, மனத்தின் - மனத்தினிடத்திலே, ஓராஎண்ணாமல், ததைநெருங்கிய,மலர்மலரை யுடைய,கற்பகநறுந்தார்நறியகற்பகமாலையணிந்த, மணிமார்பன்-அழகியமார்பையுற்றவிந்திரன், துயர்கூர்ந்து துயரமிகுந்து, தருமன்யமனும,வெய்யவெவ்விய,கதழ்வேகம்பொருந்திய,எரிப்புத்தேள அக்கினிதேவனும்,வருணன் - வருணனும,உடனேஉடனாகவர,கொடிஞ்சிமேன்மொட்டையுடைய,அம-அழகிய,தேர்-இரதத்தை,கடிதில்சீக்கிரத்திலே,தூண்டி செலுத்தி,அதிமரு-அதிர்கின்ற,நெடுந்திரைநெடியஅலை

களையுடைய, ஆழிசூழ்கடலாற் சூழப்பட்ட, புவியின் பூவுலகில், ஒல்லையில் விரைவில், வந்தடைந்தான் வந்துசேர்ந்தான் - எ-று. மன் ஓ அசைநிலை. குவலயானந்தம் வருதல் பறக்கண்டத்தின் மவ- மூவகைய மூயிர்ப்பொருளினமே இவ்விதியால் கற்பகம் உயிர்பொருள் - கருத்து - இந்திரன் அரசவையர் முதலானவர்களிடத் தன்பப்பகலைப் பறியாமல் தன்பப்பட்டியமன்றாக னிதேவன் வருணன் இவர்களுடன் தேறிதேறிப் பூமியிலே வந்தான் எ-டு.

இந்திரப்படலம் - முற்றிற்று.

நளன்தூதுப்படலம்.

இப்படலத்தால் இந்திரன் முதலிய நால்வர் பொருட்டுத் தமயந்தியினிடத்து நளன் தூது சென்றமை சொல்லப்படுகின்றது.

கலிவிருத்தம்.

அண்டருலகத்திறைவன் அவ்வுழியிருப்பம்
மண்டுபுனல்வாளைவளர் பூகமடல்கீறுந்
தண்டலையுடுத்த நிடதந்தனிபுரக்கு
மொண்டிறலுடைக்குரிசில் செல்திறமுரைப்பாம்,

இ-ள். அண்டருலகத்து - தேவருலகத்தை யாளுகின்ற, இறைவன் இந்திரன், அவ்வுழி - அவ்விடத்திலே, இருப்ப தங்க மண்டு நெருங்கிய, புனல் நீரி லிருக்கின்ற, வாளை - வாளைமீன்களானவை, வளர் வளர்கின்ற, பூகம் கமுகினுடைய, மடல் பாளைகளை, கீறும் கிழிக்கின்ற, தண்டலை சோலைகளை, உடுத்த - உடுக்கப்பெற்ற, நிடதம் - நிடதேசத்தை, தனி - ஒப்புற, புரக்கும் காக்கின்ற, ஒள் - ஒள்ளிய, திறல் - வலிமையுடைய, குரிசில் - நளமகாராசன், செல்திறம் - செய்தகாரியத்தை, உரைப்பாம் - யாம் சொல்லுவோம் - எ-று. குவலயானந்தம் - இயற்கைசெயற்கை யிருவகையினும் முயிரிலாப்பொருளை வுரைத்தனர்புலவர் - இவ்விதியால் புனல் உயிரிலாப்பொருளென்றறிக - கருத்து - தேவேந்திரனவ்விடத்திருக்க நளன்செய்கைச் சொல்லுவாம். ௧

அன்னமுரைசெய்தவெழிலாயிழையை நெஞ்சத்
துன்னியயர்வோடுமுயிருண்டிலைகொலெனக்
கன்னமதனோங்கணைகருத்திடை குளிப்ப
மன்னவர்கண் மன்னன் மதிமாழ்கியயர்காலை

இ-ள். அன்னம் - அன்னப்புள்ளானது, உரைசெய்த - சொல்லிய, எழில் - அழகிய, ஆயிழையை - தமயந்தியை, நெஞ்சத்து - மனத்தினிடத்து, உன்னி - நினைத்து, அயர்வோடும் - சோர்வுடனே, உயிர் - உயிரானது, உண்டிலைகொ

லென்ன-உண்டோவில்லையோவென்றுசொல்ல—கன்னல் - கருப்புவில்லேந்திய—மதன்-மன்மதனுடைய—பங்கணை- பஞ்சபாணங்களும—கருக்கிடை-கருத்தினிடத்து—குளிப்ப - தைக்க—மன்னவர்கண்மன்னன்-என்றவன்—மதிமாழ்கி அறிவுமயங்கி—அயர்காலை - துன்பப்படுஞ்சமயத்தில்—எ-று. (கருத்து) நளன் தமயந்தியைநினைந்து வருத்தப்படுங்காலத்தில் என்பதாம் இதுமுதலிரண்டுகுளகம். (௨)

பூகமடல்கீறியிளவாளைபுனல்காலு
மேகமிசைதாவிடும்விதர்ப்பநகர்மன்ன
ளோகையொடளித்தவுயிரோவியநிகர்க்குந்
தோகைமணவோலைகொடுதூதுவரடைந்தார்.

(இ-ள்) பூகமடல்-கமுகம்பாளையை—கீறி-கிழித்து—இளவாளை-இளமைபொருந்தியவாளைமீன்களானவை—புனல்காலும்- நீரைச்சொரிகின்ற—மேகமிசை மேகத்தின்மீது—தாவிடும்- தாவுகின்ற—விதர்ப்பநகர்-விதர்ப்பதேசத்தையாளுகின்ற—மன்னன் - வீமராஜனானவன்—ஓகையோடு-மகிழ்ச்சியுடனே—அளித்த - பெற்றஉயிர்-உயிரையுடைய—ஓவியம்-சித்திரத்தை—நிகர்க்கும்-ஒப்பாயிருக்கின்ற—தோகை- தமயந்தியினது—மணவோலைகொடு - கலியாணவோலையைக்கொண்டு—தூதுவர்-தூதர்கள்—அடைந்தார் சேர்ந்தார்கள—எ-று. (கருத்து) தூதர்கள்சமயந்திகலியாணவோலையைக்கொண்டுவந்தார்கள் என்பதாம். (௩)

மூடங்கலின்வரைந்தவுரைமுற்றுமுணராமுன்
றடம்புயம்வளர்ந்தனவரைக்குவமைசாலக்
குடங்கையினகன்றவிழிகோசரிசெல்வான்
மடல்கலனையானுளமகிழ்ச்சியொடெழுந்தான்.

(இ-ள) மூடங்கலின்-ஓலைச்சுருளில்—வரைந்த-எழுதப்பட்ட—உரைசொல்லுகளை—முற்றும்-முழுவதும்—உணராமுன்- அறியாமுன்னே, தடம்-பெரிய—புயம்-தோள்களானவை—வரைக்கு- பர்வதங்களுக்கு—உவமைசால- உவமைபொருந்த—வளர்ந்தன - பருத்தன—குடங்கையின்-உள்ளங்கையோல—அகன்ற-பரந்த—விழி - கண்களையுடையதமயந்தினது—கோசரி-குண்டினபுரத்துக்கு—செல்வான்- செல்லும்பொருட்டு—மடல்கலனையான்- சிங்கவேற்றினையொத்தநளமகாராசன்—உளமகிழ்ச்சியோடு - மனங்களிப்புடனே—எழுந்தான்- எழுந்தனன்—எ-று. (கருத்து) நளன் திருமணவோலையின் செய்தியறியுமுன்புயங்கள்பூரித்தனவிதர்ப்பதேசத்துக்குச்செல்லும்பொருட்டெழுந்தானென்பதாம் ()

கொய்யுளைவயப்புரவிகோடியுழைபோத
மையமைத்வாரணமருங்குறநெருங்க
வெய்யதிறல்வாளுழவர்வேலைபுடைசூழ
மொய்திரையளக்கரினியம்பலமுழங்க.

(இ-ள்) கொய்-கொய்துகட்டிய—உளை-புறமயிரையுடைய—வயம்-வலிமைபொருந்திய—புரவிகோடி-கோடிகுதிரைகள்—உழைபோத-பக்கங்களிலேவரவும்—மையல்-மயக்கம்பொருந்திய—மதவாரணம்- மதயா

னைகள்—மருக்கும்-பக்கத்திலே—நெருங்க- நெருங்கிவரவும்—வெய்ய வெவ்விய—திறல-வலிமைபொருந்திய—வாள்வாட் - படையையுடைய, உழுவர்வேலே-காலாள்களாகிய—கடலான துபுடை சூழ் - பக்கங்களிலே சூழ்ந்துவரவும்—மொய்-மொய்க்கப்பெற்ற—திசை- அலைகளுள்ள—அளக்கரின்-கடல்போலே—இயம்பல-பலவாத்தியங்கள—முழங்க- ஒலிக்கவும்—எ-று. (கருத்து) கோடிகுதிரைகள்சூழ யானைகள்நெருங்கசுத்த வீரர்கள்சூழக் கடல்போல வாத்தியமுழங்க என்பதாம் இதுமுதலிரண்டுங்குளகம். (ரு)

விரிகதிரெறிக்குமதி*வெண்குடைநிழற்ற
தாளநகைமாதர்பலர்சாமரையிரட்ட
வெரிமணியிமைக்குமுடிமன்னவரிறைஞ்சத்
திருவளருமார்பனுயர்தேரின்மிசைபோனன்

(இ-ள்) விரி-விரியப்பெற்ற—கதிர்-கிரணங்களை—எறிக்கும்-வீசுகின்ற—மதி-சந்திரனையொத்த—வெண்குடை- வெள்ளியகுடைகள்—நிழற்ற-நிழலைச்செய்யவும்—தாளம்-முத்தினையொத்த—நகை-பற்களையுடைய—மாதவர்பலர்- அநேகமகளிர்கள்—சாமரையிரட்ட-கவரிகளவீசவும், எரிமணி-காந்திபொருந்தியமணிகள்—இமைக்கும் - பிரகாசிக்கின்ற—முடிமகுடத்தையுடையமன்னவர்- அரசர்கள—இறைஞ்ச-வணங்கவும், திரு-திருமாதானவள், வளரும்-வளர்கின்ற—மார்பன்- மார்பையுடைய வனுகியநளமகாராஜனது—உயர்-உயர்ந்த—தேரின்மிசை - தேரின்மேல்—போனன்போயினன்—எ-று * தொல்காப்பியமரபியல்-௬௯-௬- படையுங்கொடையுங்கொடியுமுரசு- நடைநவில்புரவியுங்களிறுந்தேரு- தாருமுடியுநேர்வனபிறவுந் தெரிவுகொண்செங்கோலரசர்க்குரிய இவ்விதியால கொடைமுதலக்ககளரசர்க்குரித்தே (கருத்து) வெண்குடைபிடிக்க பெண்கள்சாமரைவீசமன்னவர்வணங்க நளன்தேர்மேற்சென்றான் என்பதாம். (௬)

தேர்நடவுகம்பலைசெவிப்புகுதலோடும்
வார்கடன்முழக்கொலிகொலோமழைமுழக்கோ
சார்வதெனவையமுறும் வானவர்கடம்மு
னேர்செழுமாடநிடதத்திறைஎதிர்ந்தான்,

(இ-ள்) தேர்-தேரை—நடவு- செலுத்துகின்ற—கம்பலை-ஒலியானது செவி-காதினிடத்து—புகுதலோடும்-நுழைந்தமாத்திரத்தில்—வார்-நெடிய—கடன்முழக்கொலிகொலோ - கடலொலியோ—மழைமுழக்கோ-மேகத்தினொலியோ—சார்வதென-அடைவதென்று—ஐயமுறும்-ஐயமடைகின்ற—வானவர்கண்முன்-தேவர்களுக்குமுன்னே—ஏர்- அழகானது—செழுமு-பொருந்திய—மாடம் - மாளிகைகளையுடைய—நிடதத்திறை-நிடததேசத்தரசன்—எதிர்ந்தான்-எதிர்ப்பட்டான்—எ-று, கொல் ஐயப்பொருள் (கருத்து) நளன் தேவர்களுக்கு முன்சென்றான்-எ-ம், ()

இதுவுங்கலிவிருத்தம்.

பொற்றடந்தேர்மிசைப்பொலிந்துதோன்றிய
மற்றடந்தோளினன்வனப்புநோக்கின

றுற்றதோர்வியப்பினுள்ளமீந்துதாம்
வெற்றுடம்பாயினர்விண்ணுளோரெலாம்.

(இ-ள்) பொன்-அழகிய—தடம்-பெரிய—தேர்மிசை-தேரின்மீது—பொலிந்து-பிரகாசித்து—தோன்றிய-வாத—மல்-மற்போர் செய்கின்ற தடம்-பெரிய—தோளினன்-தோள்களையுடையநளமகாராஜனது, வனப்பு-அழகை—நோக்கினர்-பார்த்தார்—உற்றது-அதனாலடைந்ததாகிய ஓர்-ஒப்பற்ற—வியப்பினுக்கு-ஆச்சரியத்துக்கு, உள்ளமீந்து-மனத்தைக் கொடுத்து—விண்ணுளோரெலாம்-இந்திரன்முதலிய நாலவரும்—வெற்றுடம்பாயினர்-உயிர் நீங்கியவுடம்போலானர்—எ-று (கருத்து) இந்திரன்முதலானவர்கள் தேரின்மேலேறிய நளனழகைக்கண்டு மனதைநளனிடத்திற்செலுத்தி வெறியவுடம்பினராளுர்களென்பதாம். (௮)

மா * யிருஞாலத்துவந்துமன்னர்கோ
னேயபேரழகுகண்டிமைப்பிலாட்டமோ
ராயிரம்பெற்றபேறடைந்துளேனெனச்
சேயுயர்விசும்பினுக்கிறைவன்செப்பினன்

(இ-ள்) மாமகத்தாகிய-இரு—பெரிய ஞாலத்துவந்து—பூமியில் வந்து-மன்னர்கோன்—நளனுடைய-ஏய—பொருந்திய-பேரழகு—பெரிய அழகினை-கண்டு-பார்த்து—இமைப்பில்-இமைத்தலில்லாத—நாட்டமோராயிரம்-ஆயிரங்கண்களை—பெற்ற பேறு-பெற்ற பேற்றினை—அடைந்துளேனென்-இன்று அடையப்பெற்றேனென்று, சேய-தூரமாக உயர்-உயர்ந்த—விசும்பினுக்கிறைவன்-சுவர்க்கத்துக்கரசனாகிய இந்திரன்—செப்பினன்-சொல்லினன்—எ-று. (* அகத்தியம்-மா முன்னியர் வரின்யகரமெய்தோன்றும்) (கருத்து) இந்திரன் பூமியில் வந்து நளனழகைக் கண்டுதான் ஆயிரங்கண் பெற்றதற்கு இன்றுபயன்பெற்றேனென்றான் என்பதாம். (௯)

மண்டமர்கடந்தவேல் மன்னர்மன்னனைக்
கண்டுமற்றொருவர்தோள் காமுற்றீர்ங்கொடைத்
தொண்டைவாய்மடமயில்சூட்டுமோவெனத்
தெண்டிரைக்கனைகடற்செல்வன்கூறினன்

(இ-ள்) மாண்டு-நெருங்கிய—அமர்-போரை—கடந்த-செயித்த—வேல்-வேற்படை பொருந்திய—மன்னர்-மன்னனை—நளனை-கண்டு-பார்த்து—மற்றொருவர்தோள்-வேறொருவர்புயங்களை—காமுற்று-ஆசைப்பட்டு—தொண்டை-கோவைக்கனிபோன்ற—வாய்-வாயையுடைய—மடமயில்-தமயந்தியானவள்—ஈர்ங்கொடை-குளிர்ச்சிபொருந்தியமாலையை சூட்டுமோவென-தரிப்பாளோவென்று—தெள்-தெள்ளிய—திரை-அலைகளையுடைய—கனை-ஒலிக்கின்ற—கடற்செல்வன்-கடலுக்கரசனாகியவருணன்—கூறினன்சொல்லினன்—எ-று. (கருத்து) நளனைக்கண்ட தமயந்தியானவள் வேறொருவனுக்கு மாலையிடுவாளோவென்று சமுத்திரராசன்சொன்னான்—எ-ம். (௰)

பாங்கண் ... ற்றடங்கப ... ர்பரிக்குந்திண்டிற ...
வேந்தனுக் ... கந்தடைவேய் ... தில ... னோரி

வேந்தினிழையெழினலமென்கோலமெனக்
காந்துவெங்கதமெரிக்கடவுள்சாற்றினான்

(இ-ள்) பாந்தண்மேல்-ஆதிசேடன்மீது—கிடந்த-இருந்த—பார்-பூமி
யை—பரிக்கும்-சுமக்கின்ற—திண்-திண்ணிய—திறல்-சௌரியத்
தையுடைய—வேந்தனுக்கே-நளமகாராஜனுக்கே—தொடை-மாலையை
வேய்ந்திலாளெனில்-சூட்டுவாளேயானால்—ஏந்திழை-தமயந்தியினது
எழில்-அழகினது—நலம்-நன்மை—என்கோலமெனஎன்னபிரயோச
னமாகுமென்று—காந்து-காந்துகின்ற—வெம்-வெவ்விய—கதம்-வேகத்
தையுடைய—எரிக்கடவுள்-அக்கினிதேவன்—சாற்றினான்-சொல்லினா
ன்—எ-று கொல்-அசைநிலை-(கருத்து நளனுக்குச்சமயந்தி மாலையிடு
வாளேயானால் இத்தமயந்தி அழகு என்னபயன்படுமென்றக்கினிதேவ
ன்சொன்னானென்பதாம்,) (௯௧)

சழைகுளிர்புகர்முகக்களிநல்யானையா
னிழைசுடரெறிப்பவந்திருந்ததேந்திழை
விழைவினுக்கரியின்யாமீண்டுபோதலே
யழகிதென்றந்தகனறைந்திட்டானரோ

(இ-ள்) கழைகரும்புகளை-களி—மறிக்கின்ற-புகர்முகம்—புள்ளியுடை
த்தமுகத்தையுடைய-களி-களிப்புப்பொருந்திய—நல்-நல்ல—யானையா
ன்-யானையையொத்தநளமகாராசன்—இழை-ஆபரணங்கள்—சுடர்-காந்
தியை—எறிப்ப-வீச—வந்திருந்தது-வந்துதங்கியது—ஏந்திழை-தமய
ந்தியினது—விழைவினுக்கரியின்-விவாகத்துக்கானால்—யாம்-நாம்—மீ
ண்டுபோதலே-திரும்பிசசெல்லுதலே—அழகிதென்று-அழகையுடை
யதென்று—அந்தகன்-யமனானவன்—அறைந்திட்டான்-சொல்லினான்
எ-று, (கருத்து) நளன் தமயந்திக்குநாயகனானால் நாம்மீண்டுபோவதுதக்க
தென்று யமன்சொன்னானென்பதாம் (௯௨)

போர்த்தொழில்வைரவாட்பொருவிலண்ணல்செந்
தார்ப்பசுங்கிளியனாடார்பெறாதுபோய்க்
கார்க்குழலரம்பையர்கமலவாண்முகம்
பார்ப்பதெவ்வாறெனப்பரிவிற்கூறினான்

(இ-ள்) போர்-போர்செய்கின்ற—தொழில்-தொழிலையுடைய—வைர
வாள்-வச்சிராயுதமேந்தி—பொருவில்-ஒப்பில்லாத—அண்ணல்-இந்தி
ரனானவன்—செம்-சிவந்த—தார்-இரகையையுடைய—பசும்-பசுமை
பொருந்திய—கிளியனாள்-கிளியைநிகர்த்தவளாகிய தமயந்தியினது—
தார்-மாலையை—பெறாது-பெறாதவனாகவே—போய்-சென்று—கா
ர்-கரிய—குழல்-கூந்தலையுடைய அரம்பையர் அரம்பைமாதருடைய—
கமலம்-தாமரைமலர்போன்ற—வாள் ஒளிபொருந்திய—முகம்-முகத்
தை—பார்ப்பது-நோக்குவது—எவ்வாறெனா-எவ்வாறென்று—பரிவில
துன்பத்தினால், கூறினான்-சொல்லினான்—எ-று. [illegible]
வ்வாறுகூறினான் கருத்து) இந்திரன் தமயந்திமாலையைப்பெறாது போய்
அரம்பைமுதலியோர்முகத்தைஎப்படிபார்ப்பதென்றுசொன்னான் என்-

ஆர்த்தரமென்றொளிரும் வாளவுணர்செற்றநம்
திருத்தகுஞ்செல்வமுஞ்சிறப்புங்கலவிய
விரைத்தாரணங்கலான்வீரசேனன்பொன்
திருத்தனயிதனைநின்னைவேண்டுமால்

(இ-ள்) ஆரத்தம்-உதிரத்தை — உண்டு-பானம்பண்ணி — ஒளிரும்-பிரகாசிக்கின்ற — வாள-வாளென்படையையுடைய — அவுணர்-அசுரர்களை — செற்று-கொன்று — நம்-நம்முடைய — திருத்தகு-திருச்சிறத்தக்க — செல்வமும்-செல்வத்தையும் — சிறப்பும்-சிறப்பையும் — கலவிய-கொடுத்த — விரை-வாசனை — பொருந்திய-தாரை — பூங்கொத்துக்களையுற்ற — அணங்கலன்-மாலையையுடையவனாகிய — வீரசேனனென்பான்ற-வீரசேனராஜனைப் பொக்கவனாகி — இருத்தனாய்-திருக்கிடரைல் — இவன்-இவனை நின்னை வேண்டும்-உனக்கு நாயகனென்று சொல்லவேண்டும் — எ-று | கருத்து அசுரர்களைக்கொன்று தனது செல்வத்தைக் கொடுத்த வீரசேனனை ஒக்கிருக்கையாலே இவன் அவன்மகனாகிய நளனென்று சொல்லவேண்டும் பெண்ணே என்கிறானென்பதாம். (௰௪)

சேற்றிதழ்த்தாமரைமலரத்தெண்கட
றோற்றுசெங்கதிரோனைத்தோன்றினோன்மாய
மேற்றகல்லோரையின்மொழுக்காலன்றோ
வாற்றெதிர்ப்பட்டனமலங்கல்வேலினாய்

(இ-ள்) அலங்கல்-பொர் திமாலையணிந்த — வேலினாய்-வேற்படையேந்திய கோமகாரசனே — சேறு-சேற்றிலிருக்கின்ற — இதழ்-இதழ்களையுடைய — தாமரை-தாமரைகள் — மலர-விகசிக்க — தெள-தெளிவுடைய — கடலினிடத்து — தோற்று-தோன்றுகின்ற — செங்கதிரோனை-சூரியனைப்போல — தோன்றினோனை-வந்துவந்தியையாம்-யாம்-யாங்கள் — ஏற்ற-தக்க — கல்-நல்ல — ஓரையின்-இராசியின்கண்ணேயல்லாதன்றோ-புறப்பட்டபடியாலல்லவா — ஆறு-வழியில் — எதிர்ப்பட்டனம் எதிர்ப்பட்டோம் — எ-று. அரக்கியம்-இறைப்பெயர் அதிகழ்மேனைகாயிருள்பகல்வாரம்-உதியோதயமாதங்காலமே-இவ்விதிப்படி-ஓரைகாலத்தின் புறப்பட்டது (கருத்து) சூரியன்போலத்தோன்றுமுன்னை நல்லவிலக்ஷணத்திற் புறப்பட்ட படியால் வழியிற்கண்டனமென்றானென்பதாம். (௰௫)

இவைபுறங்கடவுண்மற்றிவன்வெங்கூற்றனை
நுவலினைநீட்டிநின்கையொழிக்குதிரபான
கவலைவாம்பரியுமுரணுருக்காலை
வலிதொளிமுடியுடைமரசேயெங்கனே

(இ-ள்) கவனம்-வேகத்தையுடைய — வாம்-தாவுகின்ற — பரியாய்-குதிரையையுடைய — உரணுருக்காலை-அறிவுடைகோமகாரசனே — இவை புறங்கடவுள்-இவ்வகைக்கிளிபேசுவை — இவ்விஷயை கூற்றவை — இவை வெம்பெருந்திறலுடையவன் — உவன்-அவன் — எதிர்கட்டினை — அவைவகைக்கின்ற — நவையெதுவிடையது — வினைதாம்செய்துகின்ற — பாவம்-பாபம் — அழியும்-பிரகாசிக்கின்ற — ஒளி-காந்தி பொருந்திய — மணி-மணிகளிழைத்த — முடி-திரிமுடியையுடைய — அரசே-தேவர்தலைவராகிய இந்திரன் — எ-று இவ்வகையாமைதம், உறுப்பு

யல்-நன்மைதுன்மைவேட்கைசினமனமுறவுவெறுப்புபுத்தியறிகுணம் இவ்விதிமால-உணர்தல்புத்திக்குறித்து(கருத்து)குதிரைக்கருத்தையறியும்நளராஜனே இவன் அக்கினிதேவன்-இவன்யமன்-இவன்வருணராஜன்-யான்இந்திரன்என்றான் என்பதாம், (௰௬)

உன்னுழைவேண்டுவதொன்றுண்டாங்கது
பின்னர்யாங்கூறுதுமென்றுவெட்புறும
பொன்னகர்க்கிறையவனிருந்தபோதினின்
மன்னவனவரடிவணங்கினனரோ

இ-ள் உன்னுழை-உன்னிடத்தில்—வேண்டுவது-யாம்விரும்புவதொன்றுண்டு-ஒருகாரியமுண்டு—அது-அதனை—பின்னர்-பின்பு—யாங்கூறுதுமென்று-யாம்சொல்லுவோமென்று—வெட்புறும-விருப்பமடைந்த—பொன்னகர்க்கிறையவன்-இந்திரனானவன்—இருந்தபோதினில்-இருந்தபொழுதில்—மன்னவன்-நளமகாராஜன்—அவரடி-இந்திரன் முதலிய அந்நால்வர்பாதங்களையும்வணங்கினான் வணங்குதல் செய்தான்—எ-று கருத்துஉன்னிடத்தில் வேண்டுவதொன்றுண்டு-அதைப் பின்னேசொல்வேனென்றிந்திரன்சொல்ல நளன் இந்திரனைவணங்கினான்-எ-

உண்ணெகிழ்ந்திறைஞ்சியவுலங்கொடோளினன்
விண்ணுலகாள்பவர்கரியமேன்பொருண
மண்ணுலகாளபவர்மாட்குவைகுமோ
வெண்ணரின்மற்றிவருளமயாவதாங்கொலோ

இ-ள் உள-உள்ளம்—நெகிழ்ந்து-குழைந்து—இறைஞ்சிய-வணங்கிய உலங்கொள் திரண்டகடலினுடையவலிமையைக்கொண்ட—தோளினன்-தோளகளையுடையநளமகாராசன்—விண்ணுலகாள்பவர்க்கு-தெய்வலோகத்தையாள்கிறவர்க்கு—அரிய-அருமையாகிய—மேன் பொருள-மேன்மைபட்டபொருள்மண்ணுலகாள்பவர்மாட்டு-மண்ணுலகாளபவரிடத்து—வைகுமோ-இருக்குமோ—எண்ணில்-எண்ணுமிடத்தில்—இவருளம்-இவருடையமனம்—யாவதாங்கொலோ-யாதாகுமோ—எ-று, கொல்-ஐயம்-மற்று-அசைநிலைகருத்துஅவ்வாறுவணங்கிய நளன் விண்ணாட்டரசர்க்கரிய பொருள்மண்ணாட்டரசர்க்குக்கிடைக்குமோ இவர்க்கருத்தென்னமோஎன்றான் என்பதாம் ௰௭

குறிப்பறிந்தீதலேகொடைமற்றிந்றெனை
மறுத்தலேகெட்டபின்வழங்கலாதலிற்
பெற்றகருமாவியும்பெட்பினீகுவன்
றிடப்படவிவருளந்தெரிந்திலலையால்

இ-ள் குறிப்பறிந்து - ஒருவர்க் குறிப்பினைத் தெரிந்து—ஈதலே-கொடுத்தலே—கொடை - கொடுத்தலாகும்— கேட்ட பின் - கேட்டபின்பு—வழங்கல் - கொடுத்தல்— இன் றெனை இல்லையென்று— மறுத்தலே - தடுத்தலேயாகும்—ஆதலின் - ஆகையினாலே— பெற்ற கருமம - பெறுதற்கரிய—ஆவியும்-உயிரையும்—பெட் பின - ஆசையிலே—ஈகுவன் - கொடுப்பேன்—திடப் பட்ட - நிச்சயமாக—இவருள

ம்-இவருடையமனம்—தெரிந்ததில்லை-தெரியவில்லை—எ-று. உம்மை உயர்வுசிறப்பு. அகத்தியம குவலயாநந்தம் வினையேதொழிலெனவிளம்பப்படுமே வினைப்பெயரனைத்தும்தொழிலெனவிளம்பப்படுமே இவ்விதியால் ஈதல்தொழிற்பெயர் (கருத்து) குறிப்பறிந்துகொடுத்தலே கொடையாகும் கேட்டபின்கொடுத்தல் மறுத்தலாகும் ஆகலால் என்னுயிரையுங்கொடுப்பேன் உண்மையாக இருவருள்ளத்தை யறிந்திலேனென்றாள்—எ-று, (௰௯)

ஒளிமிகமிழப்பவந்துற்றநாணமீக்
கிளர்தரவிலலெனக்கிளர்க்குமூர்ச்சனை
தெளிதராமுகத்தினிற்றெளிததற்கன்றுகொல்
களிபுனல்பொருளொடுநல்குகின்றதே,

(இ-ள்) முகமும்-முகமானது—ஒளியிழப்ப ஒளிநீங்க—வந்து-வந்து உற்ற-மிருந்த—நாணம்-நாணமானது — மீக்கிளர்தர- அதிகரிக்க—இலலெனக்கிளர்க்கும்-இல்லையென்றுசொல்லும் —மூர்ச்சனை - மூர்ச்சையானது—தெளிதர-தெளியும்படி—முகத்தினில்- முகத்தினிடத்தில—தெளித்தற்கென்றுகொல் - தெளித்தற்கல்லவா—களி - குளிர்ந்த—புனல்-நீரை—பொருளொடு-திரவியத்துடனே — நல்குகின்றது-கொடுக்கின்றது —எ-று, (கருத்து) அகமலர்ந்துகொடுத்தல் முகமலரும்பொருட்டென்பதாம். (௨௰)

ஐந்தருநீழலினாசுவைகிய
விந்திரன்முதலினோரீகென்றென்னுழை
வந்துயர்பெரும்புகழ்வழங்கினாரிவர்
சிந்தனைமகிழ்வுறவென்கொல்செய்வதே,

(இ-ள்) ஐங்களிநீழலின் - பஞ்சதருவினிழலினிடத்து — அரசுவைகிய-அரசிருக்கின்ற—இந்திரன்முதலினோர்-இந்திரனாதியோராகியநால்வரும்—ஈகென்று-தருவாயென்று—என்னுழைவந்து- என்னிடத்தில்வந்து—உயர்-உயர்ந்த—பெரும்புகழ்- பெரியகீர்த்தியை— வழங்கினார்-கொடுத்தார்கள்—இவர் இவர்களுடைய—சிந்தனை- மனங்கள—மகிழ்வுற-மகிழ்ச்சிபொருந்த—என்செய்வது-யாதுசெய்வது—எ-று. (கருத்து இந்திரன்முதலானவர்களென்னிடத்தில்வந்து ஈந்தருள்செய்யென்றார்கள் இவர்கள்மனமகிழும்படி என்செயலாமென்றான் என்பதாம், (௨௧)

உரவுநீர்க்கருங்கடலுடுத்தமாநிலத்
தருளுடனிம்மையிலளித்தவான்பொருண்
மருவியமறுமையில்வழங்குபான்மையா
லிரவலர்தமரினுமினியராவரோ;

(இ-ள்) உரவு-வொலிக்கின்ற—நீர்-நீரையுடைய—கருங்கடல்-கரியகடலை —உடுத்த-ஆடையாகத்தரித்த—மாநிலத்து-மகத்தாகியபூமியில்—அருளுடன்-கருணையுடனே—இம்மையில்-இப்பிறப்பில, அளிக்க-கொடுத்த—வான்பொருள்-மேலாகியபொருளை—மருவிய-பொருந்திய—மறுமையில்-மறுபிறப்பில்—வழங்குபான்மையால்-கொடுக்கின்றதன்மையால—இரவலர்-யாசகர்கள—தமரினும்- சம்மவரினும்—இனியராவர். இனிமையுடையவராவர்—எ-று, தடமவ உறவோர் (கருத்து) இப்பிற

றபிற்கொடுத்தபொருள் மறுபிறப்பில்வருமாதலால் யாசகர்கள் உதவினைப்பார்க்கிலும இனிமையுடையவர்களாவார்கள் என்பதாம், (௨௨)

உடைப்பெரும்பொருளினையுலகினூதியங்
கிடைப்பதற்களித்தலினிளைத்திறப்பினு
லடுத்துவந்திரக்குநர்க்கார்வமீதூரக்
கொடுக்கிலொன்றேபலகோடியாகுமால்,

[இ-ள்] உணற் - தமதாகவுடைய — பெரும்பொருளை - பெரியதிரவியத்தை — உலகில்-உலகத்தில் — ஊதியம்-இலாபம், கிடைப்பதற்கு கிடைக்கும்பொருட்டு, அளித்தலின்-கொடுப்பதிலும், இளைத்திறப்பினால்-வறுமையினால்— அடுத்துவந்து-அடுத்துவந்து, இரக்குநர்க்கு-யாசிப்பவர்க்கு, ஆர்வம்-ஆசை, மீதூர-அதிகரிக்க, கொடுக்கில்-கொடுத்தால், ஒன்றே-ஒருபொருளே, பலகோடியாகும்- பலகோடிப்பொருளாகும் —எ-று. கருத்து தமக்குள்ளபொருளை இலாபங்கிடைக்கும்பொருட்டுக்கொடுப்பதிலும் யாசகருக்குக் கொடுக்குமொன்றே பலகோடியாகும் என்பதாம், [௨௩]

என்றுரைத்தினையனவெண்ணிவண்ணலான்
குன்றனைப்பணைத்துயர்குலவுத்தோளினன்
வன்றிறல்வாசவன்வதனநோக்கியோர்
ஒன்றுநீகேட்டியென்றுரைத்தன்மேயினன்,

இ-ள் என்று-இப்படியென்று, இனையன-இத்தன்மையவாக, எண்ணி-நினைத்து, வண்ணல்-அழகியவான்-மேலாகியகுன்றனை-மலையைப்போல, பணைத்து-பருத்து, உயர்-உயர்ந்த, குலவு இராட்சிபொருந்திய, தோளினை தோளையுடையனமக ராஜா, வன்றிறல்மிகுந்தவலுமையடைந்த வாசவன-இந்திரனுடைய, வதனநோக்கி-முகத்தைப்பார்த்து, ஒன்று- ஒருசெய்தி நீகேட்டியென்று-நீகேட்பாயாகவென்று, உரைத்தன் மேயினன்-சொல்லத்தொடங்கினன் —எ-று. மதிரண்டு அநேகநிலைகள்கருத்துகளிவ்வாறுநினைத்துத் தேவேந்திரனமுகத்தைப்பார்த்துச் சொல்லத் தொடங்கினனென்பதாம் ௨௪

என்னருந்தவத்தினன்றெனதுதொல்குல
முன்னையோரருந்தவமுயன்றபான்மையாற்
பொன்னகர்துறந்துநீர்போதப்பெற்றனன்
சொன்னவைமறுக்கிலன்சொல்கவென்றனன்.

(இ-ன்) என்- என்னாற்செய்யப்பட்ட — அருந்தவத்தின் - அரியதவத்தினாலே—அன்று - அன்றாகும்—எனது - என்னுடைய—தொல்குலம் - பழையகுலத்திற்றோன்றிய—முன்னையோர் - பெரியோர்கள் அருந்தவம் - அரியதவத்தை—முயன்றபான்மையால் - முயன்றுசெய்தபடியினாலே—பொன்னகர் - தெய்வலோகத்தை—துறந்து - நீங்கி—நீர்போதப்பெற்றனன் - நீவிர் இங்கேவரப்பெற்றேன்—சொன்னவைமறுக்கிலன்-சொல்லியசெய்திகளைமறுக்கமாட்டேன்—சொல்கவென்றனன் - சொல்லக்கடவீரென்றான்—எ-று, (கருத்து) என்றவத்தாலல்ல என்குலத்தோர் செய்தால் நீங்களிங்கேவரப் பாக்கி

யம்பெற்றேன் தாங்கள் சொல்பவத்தைத் தடுக்கேன் சொல்லுங்களென்றான் என்பதாம், (௨௫)

ஆங்கது கேட்ட வானரசன் *பொற்பினல்
வீங்குதோண் மாரனை வென்ற நீயலால்
யாங்குளரவன்றொடுத் தெய்யுமின்னறாப்
பூங்கணையால் வருந்துயரம் போக்குவார்,

(இ-ள்) ஆங்கு-அவ்விடத்தில், அது-அம்மொழியைக் கேட்ட, கேழ்விப்பட்ட, வானரசன்-இந்திரனானவன், பொற்பினல், அழகினல், வீங்கு-மிகுந்த, தோள்-தோளையுடைய, மாரனை-மன்மதனை, வென்ற-வெற்றிக்கொண்ட, நீயலால்-நீயொருவனல்லாமல், அவன்-அம்மன்மதனானவன், தொடுத்து-நாரியிற்றொடுத்து, எய்யும்-பிரயோகஞ்செய்கின்ற, இன், இனிய, நறா-தேனொழுகுகின்ற, பூங்கணையால்-மலரம்பால், வருந்-வருகின்ற, துயரம்-துக்கத்தை, போக்குவார்-நீக்குவார், யாங்குளர்-எவ்விடத்திலுளர், எ-று. குவலயாநந்தம் வசவுகிறங்குணம் வயவமீத- ஸ்திகல்விலவியுவஞ்கருமம-கருணைவாய்மையெனும் பதின்றும் மாண்பாற்கெல்லாமணியும்புனை பொருளை இவ்விதியால் பொற்பு ஆனபாற்புனைபொருள்) (கருத்து) அவ்வார்த்தையைக்கேட்ட இந்திரனானவனை உன்னையல்லாது மன்மதபாணத்தை நீக்குபவர் யாரென்றானென்பதாம், (௨௬)

வெயில்விரிமணிமுடி விமனல்கிய
மயிலியன்மகர்விழிவளைக்கைமங்கையர்
செயிரறு தூதுநீ செல்லவேண்டுமென்
றுயிரிரப்போரினு முளையக்கூறினன்

(இ-ள்) வெயில்-பிரகாசம், விரி-விரிகின்ற-மணி-மணிகள்பதித்த, முடி-முடியையுடைய, விமனல்கிய-விமானங்கொண்ட, மயில்-மயிலையொக்க, இயல்-சாயலும், மகர்-களிப்புமிக்க, விழிகண்களும், வளைக்கை-வளையலையணிந்த கைகளையும்பெற்ற, மங்கைபால்-தமயந்தியிடத்தில், செயிரறு-குற்றமற்ற, தூதுநீ செல்லவேண்டுமென்று-நீதூதுபோகவேண்டுமென்று, உயிரிரப்போரினும்-உயிரைக்கொடுவெண்டிரப்பவரைப்பார்க்கிலும்-உளைய-வருந்த, கூறினன்-சொல்லினன்-எ-று, கருத்து இந்திரன் நளனைப்பார்த்துத் தமயந்தியிடத்து தூதுசெல்லவேண்டுமென்றானென்பதாம், (௨௭)

திருத்தகு செவியிடைச் சிலையினூடுற
வுருக்கிய செம்பினையூற்றினெலன
மருத்துவன் றீமொழி கேட்டுமன்னர்கோன்
கருத்தழிந்தாருயிர்கலங்கினனரோ.

(இ-ள் திருத்தகு-அழகுபொருந்திய, செவியிடை-காதினிடத்திலே, சிலையினூடு-உலைமூக்கில், உற-பொருந்த உருக்கிய உருக்கப்பெற்ற, செம்பினை-செம்பை, ஊற்றினலென-ஊற்றியதுபோல, மருத்துவன்-இந்திரனது, தீமொழி-தீமையையொத்த சொல்லை, கேட்டு, கேள்விபட்டு, மன்னர்கோனானவன், கருத்தழிந்து, நினைவுமறந்து, ஆர்-நிறைந்த, உயிர்-ஆவி-கல

ங்கினான்கலக்கமுற்றான்-எ-று, (கருத்து) நளன் உருக்கியசெம்பினைக்கா
தினூற்றினாற் போலும் இந்திரன்கொடுமொழிக்கேட்டுக்கருத்தழிந்துஉ
யிர்க்கலக்கமடைந்தானஎ-ம்.

குருமணிமேகலைக்குவளைக்கண்கொலோ
பொருமதன்பகழியோபொய்மைதீதெனுங்
கருமமோவுயிர்நிலைதளர்ந்துவாடுமென்
மருமமீதூன்றியவாளிற்போழ்வதே.

(இ-ள்) குரு- நிறம்பொருந்தியமணி, இரத்தினங்கள்பதிக்கப்பெற்ற
மேகலை- மேகலாபரணமணிந்ததமயந்தியினது, குவளைநீலோற்பலம்போ
ன்ற,கண்கொலோ-கண்ணோ, பொரு-போர்செய்கின்ற, மதன்-மன்மத
னுடையபகழியோ-பாணமோ, பொய்ம்மை-பொய்யுரை, தீதெனும்,கூற்
றமென்றுசொல்லுமகருமமோ-அறமோ,உயிர்நிலை-சீவநிலையானது,தள
ர்ந்து-தளர்ச்சியடைந்து,வாடுமென-மெலிவேனாகியவென்னுடையமரும
மீது-மார்பினிடத்தில,ஊன்றிய-தைக்கச்செய்த,வாளில்வாளாயுதத்தைப்
போல்,போழ்வது- பிளக்கின்றது-எ-றுமேகலை-எழுசரமுள்ளது,(கருத்
து)தமயந்தியின்கண்ணோமன்மதன்பாணமோபொய்யுரைதீதெனுந்தரும
மோ-என்னுடையமார்பிலவாளாயுதபோலும்பிளக்கப்பட்டதுஎன்றான்
நளனஎ-ம், (௨௧)

என்னும்விள்ளாதயர்ந்திருக்குமேமுறுந்
தன்னையுமறக்குமெய்த்தருமமென்றெனாப்
புன்னகைகோட்டுமெய்புழுங்குமவெய்துயிர்க்
மன்னமுன்னுரைத்தவை யனைத்துமெண்ணுமால்,

(இ-ள்) என்னும்- இப்படியென்றுசொல்லுவான் விள்ளாதுபேசாமல்
அயர்ந்திருக்கும்- துன்பப்படுவான்,ஏமுறும்- மயங்குவான்,தன்னையுமற
க்கும்-தன்னையுமறப்பான்,மெய்உண்மைபொருந்திய தருமம்-அறம்,நன்
றெனா-நல்லதென்று-புன்னகைகோட்டும்புன்சிரிப்புக்கொள்ளுவான்,மெ
ய்புழுங்கும்உடல்வெதும்புவான், வெய்துயிர்த்து-அச்சமடைந்து,அன்
னம்-அன்னப்புள்ளானது,முன்னுரைத்தவையனைத்தும்-தூதுபோய்வ
ந்துமுன்சொல்லியசெய்தியாவையும், எண்ணும்- நினைப்பான்-எ-று.(க
ருத்து)இவ்வாறுசொல்லுவான்- பேசாதுதுன்பப்படுவான்-மயங்குவா
ன்-தன்னையுமறப்பான்- சிரிப்பான்வெதும்புவான், அன்னஞ்சொன்னவ
ற்றைநினைப்பான்எ-ம். ௨௨

முற்றிழைவனமுலைமுயங்குநன்னலம்
பெற்றிலனெனினும்வேள்பெய்யும்வாளியான்
மற்றுயிரிறப்பினும்வானவேந்தொடு
சொற்றதுமறுக்கிலனென்றுசொல்லுவான்,

(இ-ள்)முற்றுமுற்றிய,இழை-ஆபரணங்களையணிந்ததமயந்தியினது
வனம்- அழகிய,முலை-ஸ்தனங்களை,முயங்கும்,தழுவுகின்ற,நன்னலம்-நல்
லசுகத்தை, பெற்றிலனெனினும்-பெறுமற்போனேனாயினும,வேள்-மன்
மதனானவன்,பெய்யும்-சொரிகின்ற,வாளியால்-பாணங்களினாலே,உயிரி
றப்பினும் ; ஆவிமாயினும், வானவேந்தொடு - இந்திரனுடன்

சொற்றது-சொல்லியதை, மறுக்கிலனென்று - தடுக்கமாட்டேனென்று நிச்சயித்துக்கொண்டே, சொல்லுவான்-சொல்லுவான்-எ-று. முற்றுதல்-வளைத்தல்-மற்றுத்திசைநிலை*குவலயாநந்தமுற்றுப்பியல்பொருளிடங்காலஞ் சிலகுணங்தொழிலினை, வருமிவையற்றுங் காரணப்பொதுவாய்த் திரிசொல்லெழுமெனச்செப்பினர்புலவர் இவ்விதியால்நன்னலமென்றது பணைபிற்றிசெலல் கருத்துதமயந்தியென்பதனைப்பெறேனாயினுமன்மதன் கணையாலுயிர்போயினும் இந்திரனே இச்சொன்னதைமறுக்கிலேன் என்றான்-எ-ம். ௯௧

எப்பொருளாயினும்யாவருள்ளமுங்
கைப்படுநெல்லியங்கனியிற்காணுநீர்
துப்பிதழ்மடந்தைபாற்றூதுபோகெனச்
செப்பியதென்னகொலெனசிந்தையோர்ந்துமே,

[இ-ள்] எப்பொருளாயினும்-எந்தப்பொருளானாலும், யாவருள்ளமும்-எவர்களுடையமனமும், கைப்படு-உள்ளங்கையிற்பட்ட, நெல்லியங்கனியில்-நெல்லிப்பழத்தைப்போல, காணும்-அறிகின்ற, நீர்-நீவிர், துப்பு-பவளம்போன்ற, இதழ்-அதரத்தையுடைய, மடந்தைபால்-தமயந்தியினிடத்து, தூதுபோகென-தூதுபோவென்று, என-என்னுடைய, சிந்தை-மனதை, ஓர்ந்தும-தெரிந்தும, கருத்து எல்லாமறிந்தநீர்-தமயந்தியினிடத்துத் தூதுபோவென்று சொல்லியதென்னவோவென்றான்-எ-ம, நெல்லிக்கனியுள்ளும்புறமுந்தோற்றும, ௯௨

வழங்கியநும்முரைமறாதுசென்றியான
மொழிந்தனனாயினுமுன்னரேயெனை
விழைந்தவத்தளிரியல்வெள்குறாதுளங்
குழைந்துநும்பான்மணம்பொருந்தல்கூடுமோ,

[இ-ள்] வழங்கிய-சொல்லிய, நும்முரை-உம்முடையசொல்லை, மாறாது-மறுக்காமல், யான்சென்று-யான்போய், மொழிந்தனனாயினும்-சொன்னேனானாலும், முன்னரோ-முன்னமே, எனைவிழைந்த-என்னைவிரும்பிய, அத்தளிரியல்-அந்தமயந்திவெள்குறாது, காணாமல்உளங்குழைந்து-மனங்கரைந்து, நும்பால்-உம்மிடத்தில், மணம்-விவாகத்திற்கு, பொருந்தல்கூடுமோ-சம்மதிப்பாளோ-எ-று. கருத்து உமதுசொல்லைநான்சொன்னேனானாலும் என்னைவிரும்பியதமயந்தி உம்மைவிரும்புவாளோவென்றான்-எ-ம, ௯௩

என்னவேந்துரைத்தலுமிசைத்தசொன்மறா
நின்னைமெய்ப்பரதனைநிகரில்பார்த்தனை
முன்னினுநினைத்தவையனைத்துமுற்றுமா
லன்னநீயேயிலெதரியதாகுமே,

[இ-ள்] இன்ன-எப்படியென்று, வேந்து-நளமகாராசனானவன், உரைத்தலும்-சொல்லும, இசைத்த-சொல்லிய, சொல்-சொல்லினை, மறா-மறுக்காத, நின்னை-உன்னையும், மெய்-உண்மையையுடைய, பரதனை-பரதனையும், நிகரில்-ஒப்பில்லாத, பார்த்தனை-அருச்சுனனையும், உன்னினு

ம், நினைத்தாலும், நினைத்தவையனைத்தும்-நினைத்தகாரியங்களியாவும், மூற்றும்-முடியும், அன்ன-அத்தன்மையையுடைய, நீ-நீயே, ஏகில்-போனால், எது-எந்தக்காரியம், அரியதாகும்-அருமையையுடையதாகுமெ-று. ஆல் அசைநிலை, கருத்து உன்னையும்-பாதனையும்-அருச்சுனனையும் நினைத்தால்-நினைத்தகாரியம் முடியும் நீயேபோனால் காரியமரிதோவென்றானிந்திரன்-எ-ம், ௩௪

இனையனவாசவனியம்புமெல்லையின்
வினைமலர்க்கோதைதன்வயனாகியுந்
தனியறனிழுக்குறாத்தகையனாதலி
னனையதற்கியைந்தனனலங்கல்வேலினான்

[இ-ள்] வாசவன்-இந்திரனானவன்-இனையன-இத்தன்மையாகியசொற்களை, இயம்புமெல்லையின்-சொல்லுகிறபொழுதில், வினை-கட்டுகின்ற, மலர்க்கோதைதன்-மலரையணிந்தகூந்தலையுடையதமயந்தியினது, வயனாகியும்-வசப்பட்டவனாயிருந்தும், தனி-ஒப்பற்ற, அறன்-தருமத்தினின்றும், இழுக்குறா-கெடுதலடையாத, தகையனாதலின்-குணத்தையுடையவனாதலால், அனையதற்கு-அவ்விந்திரன்சொன்னதற்கு, அலங்கல்-வெற்றிமாலையைத்தரித்த, வேலினான்-வேற்படையேந்தியநளமகாராஜன், இயைந்தனன்-உடன்பட்டான்-எ-று, கருத்து நளன் தூதுபோகச்சம்மதித்தான்-எ-ம், ௩௫

பொருந்தியமன்னர்கோன்பொம்மல்வெம்முலைத்
திருந்திழைக்கடிநகர்ச்சேமமாகிய
வருந்திறல்வாயிலோரறிவுறாதுபோய்
வருந்திறமியாதெனமறித்துங்கூறினான்,

[இ-ள்] பொருந்திய-சம்மதிப்பட்ட, மன்னர்கோன்-நளன், பொம்மல்-பொலிவுபொருந்திய, வெம்-விருப்பத்தைத்தருகின்ற, முலை-தனங்களையும், திருந்திழை-திருத்தமாகிய, ஆபரணங்களையுமணிந்த-தமயந்தியினுடைய, கடிநகர்-புதுமைபெற்றநகரம். சேமமாகிய-காவலாகிய, அருந்திறல்-அரியவல்லமைபொருந்திய, வாயிலோர்-வாயில்காப்பவர், அறிவுறாதுபோய்-அறியாமற்படிபுகுந்து, வருந்திறம்-வருகின்றவிதம், யாதென-எப்படியென்று, மறித்தும்-மறுபடியும், கூறினான்-சொல்லினான் எ-று. கருத்து நளன் தமயந்தியரண்மனைக்காவளாளர் அறியாதுபோய் வரும்விதமெப்படியென்றான-எ-ம், ௩௬

விட்புலந்தனிபுரந்தருளும்வேந்தர்கோ
னட்பொடுமினியசொன்னயாவர்க்குங்
கட்புலனாலுருக்காண்கிலாததோர்
நுட்பநூல்விஞ்சையைநுவன்றிட்டானரோ,

[இ-ள்] விட்புலம்-விண்ணுலகத்தை, தனி-ஒப்பற்ற, புரந்தருளும்-காக்கின்ற, வேந்தர்கோன்-இந்திரனானவன், நட்பொடும்-சிநேகத்துடனே இனியசொல்-இனியசொற்களை, நவின்று-சொல்லி, யாவர்க்கும்- எவர்க

ருக்கும், கட்புலனால்-கண்ணறிவினால், உரு-வடிவத்தை, காண்கிலாத்து அறியப்படாததாகிய, ஓர்-ஒரு, நுட்பநூல்- நுண்ணியநூலிற்சொல்லும, விஞ்சையை-மந்திரத்தை, நுவன்றிட்டான்-சொல்லினான்-எ-று. விஞ்சைமந்திரத்துக்காதலால் ஆகுபெயர் (கருத்து) இந்திரன்நளனுக்குருபமாறும் வித்தையைக்கற்பித்தான்-எ-ம. ௩௭

பெறலரும்விஞ்சையும்பெற்றுவானவர்க்
கிறையவனிணையடியிறைஞ்சிவண்டமிர்
நறைமலர்கூந்தலாள்நகரிநண்ணுவா
னறைகழலிலங்குதாளரசனேகினான்.

[இ-ள்] பெறலரும்-பெறுதற்கரிய, விஞ்சையும்-மந்திரத்தையும்-பெற்று-பெற்றுக்கொண்டு, வானவர்க்கிறையவன்-இந்திரனது, இணையடி-இரண்டுபாதங்களையும், இறைஞ்சி-வணங்கி, வண்டு-வண்டுகள், இமிர்-ஒலிக்கின்ற, நறை-தேனொழுகுகின்ற, மலர்-மலரையணிந்த, கூந்தலாள்-அளகபாரத்தையுற்றதமயந்தியினது, நகரி-குண்டினபுரத்திலே, நண்ணுவான்-சேரும்பொருட்டு, அறை-ஒலிக்கின்ற, கழல்-வீரக்கழலானது இலங்கு-பிரகாசிக்கின்ற, தாள்-பாதத்தையுடைய, அரசன்-நளன்- ஏகினான்-போனான்-எ-று, ௩௮

பண்ணமைகூந்தன்மான் *றேறிப்பார்புக
ழண்ணலுமிமையவரார்வம்பின்செல
மண்ணிடைவானவர்மகளிர்தம்மொடும்
விண்ணிழிந்திருந்தனநகரமேயினான்,

[இ-ள்] பண்ணமை-கல்லணையமைந்த, கூந்தல்-புறமயிரையுற்ற, மான்-குதிரைகட்டிய, தேரில்-இரதத்தில், பார்-பூமியிலுள்ளார், புகழ்-புகழ்கின்ற, அண்ணலும்-நளமகாராசனும், இமையவர்-தேவர்களுடைய, ஆர்வம்-ஆசையானது, பின்செல-பின்றொடர, மண்ணிடை-மண்ணுலகத்தில். வானவர்மகளிரொடும்-அரம்பையருடன், விண்-அவர்க்குமானது, இழிந்திருந்தன-இழிந்திருந்ததையொத்த, நகரம்-குண்டினபுரத்தை, மேயினான்-பொருந்தினான்-எ-று. 0 குவலையாநந்தம் உறுப்பியல்-ஈ-கு-அருந்துதலணிதல வாகனம்விருதோ மாயுதமாடை காதலிதோற்றம் தந்தைதாய்கிளையாதிபஞ்செல்வ மிசையெனவருமீ ரேழிவையாண்பாற்றோட்பொருளெனவே கூறப்படுமேஇவ்விதியாலதோ ஆண்பாற்குடிகொள்பொருள (கருத்து) நளன்குண்டினபுரத்திற்போயினான்-எ-ம

வாம்பரித்தேரினின்றிழிந்துவண்கிளர்
தேம்பொதிநறுமலர்த்தெரியன்மார்பினன்
காம்புறழ்தோளினாள்செவ்விகாண்குறு
மேம்பலிற்கோநகரெய்தினானரோ,

[இ-ள்] வாம்-தாவுகின்ற, பரி-குதிரையையுடைய, தேரினின்றிழிந்து-தேரினின்றுமிறங்கி, வண்டு-வண்டுகளானவை, கிளர்-ஒலிக்கின்ற, தேம

வாசனை, பொதி-நெருங்கிய, நறும-பரிமளம்பொருந்திய, மலர்- மலராற்
றொடுக்க, தெரியல்-மாலையணிந்த, மார்பினன்-மார்பையுடையவனாகிய
நளமகாராசன், கூம்பு-மூங்கிலை, உறழ்-ஒத்த, தோளினன் - தோளினையு
டையவளாகியதமயந்தினது, செவ்வி- அழகை, காணலுறும் - காணவே
ண்டுமென்கிற, நசையின்-ஆசையினாலே, கோநகர்-குண்டினபுரத்தை,எ
ய்தினன்-அடைந்தான்-எ-று, கருத்து நளன்தமயந்தியைக்காணவாசை
யால்குண்டினபுரத்தையடைந்தான்-எ-ம. ௬௰

உரியதங்கொழுநர்பாலூடனீத்தநல
விரைகமழ்தெரியலுமின்செயாரமுங்
குருமணிக்கலன்களுங்குலவுவீதிவா
யெரிமணிப்பூணினனிடறியேகினன்,

இ-ள், உரிய-உரிமையையுடைய, தம-தம்முடைய, கொழுநர்பால்-கு
ணவரிடத்து, ஊடி-பிணங்கி, நீத்த-நீக்கிய, நல்-நல்ல, விரை-வாசனை,க
மழ்-வீசுகின்ற, தெரியலும்-மாலையும், மின்செய்- பிரகாசத்தைச்செய்கி
ன்ற, ஆரமும்-பதக்கமும், குரு-நிறம்பொருந்திய, மணிக்கலன்களும்-ரத்
தினாபரணங்களும், குலவு-பிரகாசிக்கின்ற, வீதிவாய்-வீதியினிடத்தில்,எ
ரி-ஒளிபொருந்திய, மணி-மணிகளபதித்த, பூணினன் - ஆபரணத்தையு
டையநளமகாராசன், இடறி-காலினாலிடறிக்கொண்டு,ஏகினன்-போனான்
எ-று, நளன்பூமாலைஇரத்தினாபரணமிவற்றைஇடறிநடந்தான்-எ-ம் ௬௧

மனங்கவர்வனப்பமைவடிவினன்றியுங்
கனம்பயில்வாயிலோர்காணுறுவனை
சினங்கொள்கூரிலைவேற்செம்மல்போதலா
லநங்கனென்றுரைப்பதற்கையமில்லையே.

இ-ள், மனம்-மனதை, கவர்-கவர்ந்துகொள்ளுகின்ற, வனப்பு-அழகு,
அமை-அமைந்த, வடிவின்-வடிவினாலும், அன்றியும்-அல்லாமலும், கன
ம்-மேகங்கள், பயில்-சஞ்சரிக்கின்ற வாயிலோர்- வழியிலிருக்குங்காவல
ர்கள், காணுறுவனை-காணுந்தகைமை, சினங்கொள - கோபங்கொண்ட,
கூர்-கூர்மைபொருந்திய, இலைய-இலையையுடைய,வேல்-வெற்படையே
ந்தி, செம்மல்-நளமகாராசன், போதலால்- செல்கின்றபடியால், அநங்க
னென்று, அருவத்தையுடையவனாகியமன்மதனென்று, உரைப்பதற்கு
சொல்வதற்கு, ஐயம்-சந்தேகம், இல்லை-இல்லை-எ-று. இதுதற்குறிப்ப
ணி கருத்து நளன் அருபமாயச்சொல்லுதலால மன்மதனென்றுசொல்
லுவதற்குச் சந்தேகமில்லை-எ-ம, ௬௨

கண்ணகன்மணிக்கடைக்காவலாளர்தா
நண்ணினரெவரெனவெவரைநாடினுந்
தண்ணறுந்தெரியலான்றன்னையாமென
வெண்ணிவெம்மடங்கலினெருக்கங்கோட்டுமால்,

இ-ள், கண்ணகல் - இடமகன்ற— மணி - அழகிய— கடை-வாயிலி
லிருக்கின்ற— காவலாளர்தாம் - காவல்செய்வோர் — நண்ணினர்- வந்த
வர்கள் — எவரென - யாவரென்று — எவரைநாடினும்-யாரைநாடிப்

பார்க்கினும், தண்-தண்ணிய நறும்பரிமளம்பொருந்திய, தெரியலான், மாலையுடையவனுகிய நளமகாராஜன், தன்னையாமென-தன்னையாகுமென்று எண்ணிநின்றது, வெம், வெவ்விய, மடங்கலின்-சிங்கத்தைப்போல, எருத்தங்கோட்டும்- திரும்பிப்பார்ப்பான்-எ-று, (கருத்து) வாயில்காப்பார் யாரென நளன்தனையென்று திரும்பிப்பார்ப்பான்எ-ம், ௪௩

மலர்பயில்வாவிதோய்மாதர் நுண்டுகி
லலைபுன்னனைதலுமல் குன்றோன்றலாற்
கலைவலான் கண்முகிழக்கக்காண குற்றாள்
முலைமுகட்டூதறவொருத்திமுட்டினாள்

இ-ள் மலர்பயில்-மலர்மகள் நெருங்கிய, வாவி-தடாகத்தில், தோய்-முழுகிய, மாதர்-மடவாருடைய, நுண்-நுண்ணிய, துகில் ஆடையானது, அலை-அலைவீசுகின்ற, புனல்-நீரிலே நனைதலும் நனைந்தவளவில். அல்குல்-நிதம்பமானது, தோன்றலால் தெரிதலால், கலைவலான்-அறநூலில்வல்லவனாகிய நளமகாராசன், கண்முகிழ்த்தக-கண்களைமூடிக்கொண்டுபோக, காணகுற்றாள்-காணுளாகி, முலை, தனங்களினுடைய, முகடு-உச்சி, அழுந்துற-அழுந்தும்படி, ஒருத்தி-எதிர்ப்பட்ட ஒருமங்கை, முட்டினாள், முட்டினாள், எ-று, (கருத்து) நளனவாயிலாகிமாதரல் குலைக்கண்டு கண்மூடிச் செல்லுதலாலெதிரில் வருமொருத்திமுலைமுகட்டூன்றமுட்டினாள் எ-ம்,

காமுறுமொருத்திதன்வதனக்கண்டகண்
கோமகன்முகிழ்த்தலாற்கோதைமார்முக
மாமதியென்பதுமன்னன்செய்யகண்
டாமரையென்பதுந்தக்கவாயவே,

(இ-ள்) காமுறும், விரும்புதற்குறிய, ஒருத்தி-ஒருமங்கையினுடைய வதனம்முகத்தை, கண்டகண், பார்த்தகண்களை, கோமகன்-நளமகாராஜன் முகிழ்த்தலால்-மூடிக்கொள்ளுதலால், கோதைமார்முகம்-மாதருடையமுகம், மா-பெரிய, மதியென்பது-சந்திரனென்று சொல்வதும், மன்னன் இந்தநளமகாராஜனின், செய்ய-சிவந்த, கண்-கண்கள் தாமரையென்பதும் தாமரைமலரென்று சொல்வதும், தக்கவாய்-தகுதியாயின எ-று, (குவலயானந்தம்-தருமொழிதொடர்மொழிபொதுமொழியென வரும்-மிருதிணைப் பொருட்பெயர்க்கிடுகுறியாமே, இவ்விதியால தாமரையென்றதுபொதுமொழி இடுகுறி (கருத்து) நளன் ஒருபெண்முகத்தைக்கண்டகண்களைமூடலால்பெண்களமுகஞ்சந்திரனென்பதும் நளன்கண்களதாமரையென்பதுஞ்சரியேஎ-ம். ௪௫

செய்யகண்முகிழ்த்திடல்விழித்தறிதென
வையனுக்கடையகனுனேக்கவன்பிதென்
றெய்யும்வேள்கணைமலரிதயமோர்க்குமால்
பொய்யெனவருச்சனைபுரிதல்போன்றதே

இ-ள் செய்ய-சிவந்த, கண்-கண்களை. முகிழ்த்திடல்-மூடிக்கொள்வதும் விழித்தல்-விழிப்பதும், தீதென-குற்றமென்றுநினைந்து, ஐயனும்-நளம

ாராஜனும்,கடைக்கணுநோக்க- கடைக்கண்ணிறைலைபார்க்க,அன்பிதெ
ன்று-இதஆசையினுலேபார்ப்பகென்று, எயயுய- பிரயோசனஞ்செய்வெ
ன்றவேள்- மன்மதனுடைய, கணைமலர்- பாணமலர்கள,இதயம்-கருத்
தை,ஓர்ந்து-அறிந்து, மாலமயக்கமானது, பொய்யென-பொய்யென்று,
அருச்சனை-பூசைபுரிதல்தோன்றது- செய்வதபோலுமாயிற்று -எ-று,[க
ருத்து]நளனகடைக்கணுற்பார்க்க அன்பானபார்வைஎன்றுமன்மத
னறிந்துபாணர்தொடுக்கஅப்பாணம் அருச்சனைசெய்தமலருக்கொப்பா
யிற்றுஎ-ம். ௬௬

தெரிவையென்றுருவெளியோடுசெப்பிய
வரசனதுரையசரீரியாமென
வெருவியமாதர்சொற்கேட்டுவேள்குறு
வுருவெளியிதுவெனவுள்ளகதேறினன்,

இ-ள்தெரிவையென்று-தமயந்தியென்று,உருவெளியோடு-உருவெளித்
தோற்றததடனே.செப்பிய-சொல்லியஅரசனதுளையஅரசனது,உரை
சொல்லை அசரீயாமென- அசரீரவாக்கென்று,வெருவிய-பயந்த,மாதர்-மா
தருடையசொற்கேட்குசொல்லைக்கேட்டு,(அந்தநளனுனவன) வேள்கு
றுகாணி, உருவெளியிதுவென- உருவெளித்தோற்றமிதுவென்று,உள்
ளம்-மனம,தேறினன்-தெளிவையடைந்தான்-எ-று [கருத்து]உருவெளி
யோடு செல்லியநளன்சொல்லைமாதர் அசரீரவாக்கென்றுசொல்லநளன்
தெளிவடைந்தானஎ-ம, ௬௭

விழைவெனும்பாகெறிந்தமரர்விஞ்சையாத்
தழைமுகபடாததமைதருகணவாரணங்
கழைமகனியற்றியுகருங்கண்மங்கைய
ரழுகெனும்பகுழியாழ்ந்ததில்லையால்,

இ-ள் விழைவெனும்-ஆசையென்கிற,பாகு-பாகனை, எறிந்து - தள்ளி
அமர்-தேவர்களுடைய,விஞ்சையாம- மந்திரமாகிய,தழை-தழைந்த,முக
படாதது-முகபடாதது-முகப்போர்வையினுலே,அமைபொருந்திய,தறு
கண்- அஞ்சாமையையுற்றவாரணம்யானையானது,கழைமகன்கருப்புவில
லேந்தியமன்மதன் இயற்றிய-செய்த.கருங்கண,கரியகண்களையுடையமங்
கையர்-மாதரது,அழகெனும் அழகென்றுசொல்லும்,பகுகுழி-பள்ளத்தி
ல்,ஆழ்ந்ததில்லை-அழுந்தியதில்லை-எ-று.ஆல்அசை[கருத்து]நளனென
னுமயானைமாதரழகெனும்பகுகுழியில்வீழ்ந்ததில்லை-எ,ம ௬௮

அங்கலுழ்மேனிய வணங்கைநாடொறு
மெங்கணுங்காண்குறுமயக்கமேனைய
பங்கையவாண்முகப்பாவைமாரையும்
மங்கையென்றுணனுறுமயக்கந்தீர்ந்ததே,

இ-ள் அம்-அழகானது,கலுழ்ஒழுகின்றமேனிய-மேனியையுடைய,அ
ணங்கை-தமயந்தியை,நாடொறும்-எந்நாளும்,எங்கணும்,எவ்விடத்திலு
ம்.காணகுறும-உருவளித் தோற்றமாகக்காணகின்ற,மயக்கம்-மயக்கமா
னது.எனைய-மற்றைய,பங்கயம்-தாமரைமலர்போன்ற, வாள்ஒளிபொரு

நிதிய—முகம்-முகமுள்ள—பாவைமாரை - மகளிரை— அம்மங்கையெ ன்று-அத்தமயந்தியென்று—எண்ணுறும்-நினைக்கின்ற—மயக்கம்-மயக் கத்தை—தீர்ந்தது நீங்கியது—எ-று. அழகு மிகுதிபெற்றிக்கலுழெனப் பட்டது* அகத்தயம எவ்வெற்றிகாரமுமகாரமைகாரம் பெண்பால்விகுதி பிறக்குமென்க இவ்விதியால் உணங்குஉகரவீற்றுப் பெண்பாற்சொல் (கருத்து) களிக்குத்தமயந்தியென்கிறமயக்கமற்றதுஎன்பதாம்,(௬௧)

உணர்க்குழைமுகக்கியர்கதிர்த்துவிம்மிய
சுணங்கவிரிளமுலைச்சுவடுதாக்கிய
மணிந்தகுங்குமமொழிலகலமூழ்கிய
மணந்தனர்போறனன்மன்னரேறனான்

(இ-ள்) மன்னர்-அரசருக்கு, ஏறனான்-ஆண்சிங்கத்தைப்போன்றநளன் அணைம்-கூட்டமாகியமணிபதித்த—குழை - குண்டலந்தரித்த, முகத்தியர்-முகத்தையுடையவராகியமாதர், கதிர்த்து-காந்திபொருந்தி, விம்மிய-பருத்தசுணங்கு, தேமலானது - அவிர்-பிரகாசியாநின்ற, இளமுலை-இளமைபொருந்தியசனங்களுடைய, சுவடு-தழும்புகளை, தாக்கியும்-மோதப்பெற்றும், அணிந்த-தரித்த, குங்குமம் குங்குமக்குழம்புகள், எழில்-அழகிய, அகலம் மார்பினிடத்து, மூழ்கியும்-மூழ்கப்பெற்றும், மணந்தனர்-கூடினவர்களை, போன்றனன்-ஒத்தனன்—எ-று. (கருத்து) நளன் மார்பில் மாதர்தனங்களழுந்தப்பெற்றும்குங்கும மூழ்கப்பெற்றும்புணர்ந்தவரையொப்பாயினான் என்பதாம், (௬௨)

விளங்குழையொருத்திபேரணியில்வேந்தெழில்
துளங்கலுமதிசயந்தோன்றநோக்கினள்
வளங்கெழுபுகழினன்மறையக்காணலா
ளுளம்புகுந்தொளித்தவ்வுருவென்றெண்ணினாள்

(இ-ள்) விளக்கு-பிரகாசியாநின்ற, இழை-ஆபரணத்தையணிந்த, ஒருத்தி-ஒருமாதானவள், பேர் பெரிய, அணியில்-தன்னாபரணத்தில், வேந்து-அரசனுடைய, எழில்-அழகானது, துலங்கலும்-பிரகாசிக்கலும், அதிசயம்-ஆச்சரியம், தோன்ற-உண்டாக, நோக்கினள்-பார்த்தாளவள் வளங்கெழு-வளம்பொருந்திய, புகழினன் - கீர்த்தியையுடையவன், மறைய-மறைந்துபோக, காணலாள - காணதவளாகி, உளம்-மனத்தினிடத்து, புகுந்து-நுழைந்து, ஒளித்துக்கொண்டது, அவ்வுருவென்று - அவ்வடிவமென்று, எண்ணினாள்-நினைத்தாள—எ-று. (கருத்து) ஒருத்தி தன்னாபரணத்தில் நளன்வடிவுதோன்றப்பார்த்தாள் நளன்மறைய அவ்வடிவுதன்னுள்ளத்துட்புகுந்ததென்றெண்ணினாள் என்பதாம். (௬௩)

வாட்டிறன்மன்னவன்வனிதைக்கட்பொழி
நீட்டியொண்கிருமிழ்செய்யவார்வடஞ்
சூட்டினன்கலைவிவ்வுருவுதோன்றயார்
கொட்டினரெனச்சிலர்குறிப்பினுடுவார்.

(இ-ள்) வான்-வானாயகத்திலே, திறல்-வல்லமைபெற்ற, மன்னவன் நளமகாராசனுடையவன், வனிதை-சமானதிதினது, பேர-பெரிய, எழில்-

அழுகை-தீட்டி-எழுதி, ஒள்-ஒள்ளிய, கதிர்-கிரணங்களை, உமிழ்-உமிழ்கின்ற, செய்ய-சிவந்த, வார்-நெடிய, வடம்-ரத்நமாலைகளை, சூட்டினன்-தரித்தனுகி, அகல்நீங்கஇவ்வுருவுதோன்ற-இந்தவடிவந்தெரிய, யார்-எவர்கள், கோட்டினனென-செய்தானென்று, சிலர்-சிலர்கள், குறிப்பின்-குறிப்பினுலே, நாடுவார்-தேடுவார்கள்—எ-று. (கருத்து) நளன்தமயந்திவடிவத்தையெழுதி இரத்னுபரணஞ்சூட்டிப்போகவடிவத்தையாரெழுதினுரென்று சிலர்தேடுவார் என்பதாம், (௫௨)

பூந்துகள்செறிந்தகோமறுகிற்போகிய
வேந்தருளழுந்துமவ்விடங்களைநோக்குறா
மாந்தளிர்மேனியாவையங்காவல்செய்
வேந்தர்தாளிலக்கணமேயதென்னென்பார்,

(இ-ள்) பூந்துகள்-மகரந்தப்பொடிகள், செறிந்த-நெருங்கிய, கோமறுகில்-அரசுவீதியில், போகிய-சென்ற, ஏந்தல்-நளமகாராசனின், தாள்-பாதங்கள், அழுந்தும்-அழுந்துகின்ற, அவ்விடங்கள்-அந்தவிடங்களை, நோக்குறா-பார்த்து, மாந்தளிர்-மாந்தளிர்போன்ற, மேனியர் - வடிவத்தையுடையமங்கையர், வையம்-உலகத்தை, காவல்செய்-காத்தல்செய்கின்ற, வேந்தர்-அரசரின், தாள்-பாதங்களிலிருக்கும், இலக்கணம்-இலக்கணங்கள், மேயது-இவ்வடிச்சுவட்டிற்பொருந்தியது, என்னென்பார்-என்ன ஆச்சரியமென்பார்கள்—எ-று. (கருத்து) மகரந்தநிறைந்தஇராஜவீதியில் நளன் அடிவைத்தவிடத்தைமாதர்கள கண்டு அரசர்களடிச்சுவடுபொருந்திய தென்னவென்பார்கள் என்பதாம், (௫௩)

கள்ளவிழ்கோதையரெறிந்தகந்துகம்
வள்ளன்மார்புற்றெதிர்மறிந்துவீழ்தலும்
தள்ளருமதிசயமெய்தித்தத்தமில்
வெள்ளிடைப்பட்டிவண் * மீண்டதென்னென்பார்,

(இ-ள்) கள்ளவிழ்-தேனொழுகின்ற, கோதையர்-மாலையையணிந்தமாதர், எறிந்த-வீசிய, கந்துகம்-பந்துகள், வள்ளல் - நளமகாராஜனுடைய, மார்பு-மார்பினிடத்திலே, உற்று-பொருந்தி, எதிர்-எதிராக, மறிந்து-மறிபட்டு, வீழ்தலும்-வீழ்ந்தவளவில், தள்ளரும்-தள்ளுதற்கரிய, அதிசயம்-ஆச்சரியத்தை, எய்தி-அடைந்து, தத்தமில்-தங்கள்-தங்களுக்குள்ளே, வெள்ளிடைப்பட்டு-வெளியிடத்திற்பட்டு, இவண்-இவ்விடத்தில், மீண்டது-திரும்பியது, என்னென்பார்-என்னவென்றுசொல்லுவார்கள்—எ-று * குவலயாநந்தம், வினைச்சொல்லனைந்துங் காரியச்சொல்லே இவ்விதியால்மீண்டதுகாரியம் (கருத்து) மாதர்களெறிந்தபந்துகள் நளன்மார்பில்பட்டெதிராக விழுந்தமாத்திரத்தில்பெண்களிதென்னவாச்சரியமென்பார்கள் என்பதாம். (௫௪)

எதிர்முகமாயிருந்திருவர்வயந்துணைப்
புதுமலர்தொடுத்தனுநவேட்புக்கவன்
கதுமெனவேகலுமறைப்பக்கன்னியர்
மதிமயக்குறமுகமறைத்ததென்னென்பார்

(இ-ள்) எதிர்முகமாயிருந்து-அபிமுகமாகவிருந்து, இருவர்-இரண்டுபேர், பைந்துணர்-பசியபூங்கொத்துகளிலிருக்கின்ற, புதுமலர்-அன்றலர்ந்தமலரைதொடுத்தலும், கட்டலும்-நடுவண், அவருக்கிடையில்-புக்கவன்-புகுந்தநளன், கதுமென-விரைந்து-ஏகலும், போனவளவில்- மறைப்ப மறைக்க, கன்னியர்-அம்மாலைதொடுத்தமாதர்கள், மதி-புத்தி, மயக்குகிற மயக்கத்தைப்பொருந்த, முகமறைத்தது-முகத்தைமறைத்துவிட்டது, என்னென்பார் என்னஆச்சரியமென்று-சொல்லுவார்கள்—எ-று. (கருத்து)மாலைகட்டுமாதரிருவர் நடுவேநளன்போனவளவில் அம்மாதர்கள்முகத்தைமறைத்துவிட்டதென்னவென்பார்களென்பதாம். (௫௫)

அண்ணரன்மார்பகத்தணிந்தபேரணி
மண்ணியமணிவயின்வடிவுதோன்றலும்
கண்ணுறநோக்குவாள்கன்னிமாரொடும்
விண்ணிடைப்பனதுருவிளங்கலென்னென்பாள்

(இ-ள்) அண்ணரன்-நளமகாராசனுடைய, மார்பகத்து-மார்பினிடத்து, அணிந்த-தரித்த, பேர்-பெரிய, அணி-ஆபரணங்களிலுள்ள, மண்ணிய-தெளிந்த, மணிவயின்-மணியினிடத்தில், வடிவு-உருவமானது, தோன்றலும்-தெரிதலும், கண்ணுற-கண்ணினாற்பொருந்த, நோக்குவாள்-பார்ப்பாளாகியவொருத்தி, கன்னிமாரொடும்-மாதர்களுடன், விண்ணிடை-ஆகாயத்தினிடத்துஎனதுரு-எனதுவடிவம், விளங்கல்-பிரகாசித்தல், என்னென்பாள் என்ன ஆச்சரியமென்றுசொல்லுவாள்—எ-று. (கருத்து) நளனுபரணத்தில்ஒருத்திதன்வடிவுதோன்றியவளவில் என்வடிவு வெளியிற்றோன்றியதென்னென்பாளென்பதாம் (௫௬)

வெற்பினதெழில்கெடவிளங்குதோளினன்
பொற்பொளிர்பித்திகைப்புரத்திற்றோன்றலு
மற்புதமிதுவெனநோக்கியன்பினாற்
கற்புடைமகளிருநிலைகலங்கினார்

(இ-ள்) வெற்பினது-மலையினதுஎழில்-அழகு, கெட-கெ[illegible]படி, விளங்கு-பிரகாசியாநின்ற, தோளினன், தோளினுடையநளமகாராசனதுபொற்பு-அழகானது, ஒளிர்-பிரகாசிக்கின்ற, பித்திகைப்புரத்தில - சுவர்த்தலத்தினிடத்து, தோன்றலும்-தோன்றுதலும், அற்புதமிதுவென- ஆச்சரியமிதுவென்று, நோக்கி-பார்த்து, அன்பினால்-ஆசையினால், கற்புடையமகளிரும்-கற்புடையமாதர்களும், நிலைகலங்கினார்-மயங்கினார்கள்—எ-று. (கருத்து) நளனவடிவுசுவரிற்றோன்ற கற்புள்ளமாதரும்நிலைகலங்கினார்களென்பதாம், (௫௭)

இழைவளர்முலையினாரொருவனேர்பெறு
நிழலிவனோக்கினனெனவிநீளிடை
மொழிவனகேட்டனனெனவுமெய்யம்புறத்
தழுவினனென்னவுந்தம்பிறகூறுவார்-

(இ-ள் இழை-ஆபரணத்தோடுகூடி, வளர்-வளர்கின்ற, முலையினார்-முலையையுள்ளமாதர்கள் ஒருவன்-ஒருஆண்மகனுடையனேர்பெறு, அழ

கைப்பெற்ற நிழல்-நிழலே, இவண்-இவ்விடத்தில், நோக்கினனெனவும் பார்த்தேனென்றும், நீளிடை-இந்நீணடவிடத்தில், மொழிவன: பேசுவனவற்றை, கேட்டனனெனவும்- கேட்டேனென்றும், மெய் ம்புற-தோள்களை பொருந்த, தழுவினனெனவும்- தழுவினேனென்றும், தம்மில- தங்களுக்குள்ளே, கூறுவார்- பேசிக்கொள்ளுவார்கள் — எ-று, கருத்து) மாதர்கள் ஒருவன் நிழலைக்கண்டேனென்றும் ஒருவன் சொல்லைக்கேட்டேனென்றும் ஒருவனைத் தழுவினேனென்றும் சொல்லிக்கொள்ளுவார்களென்பதாம்

இன்னிசையளிபயில் பொழிலினோர் தன்முன்
பொன்னவிர்முலைத்தமயந்தி போதலு
முன்னமுன் கூறியவற்றை நாண்முதல்
முன்னுருவெனமுன்னினனரோ

(இ-ள்) இன்-இனிய, இசையைப்பாடும், அளி-வண்டுகள், பயில- சஞ்சரிக்கின்ற, பொழிலின்-சோலையிடத்தில், ஏந்தல்-நளமகாராஜன், தன்-கண்ணெதிரே, பொன்-பொன்னையொத்த, அவிர் பிரகாசியாநின்ற, முலை-முலையையுடைய, தமயந்தி-தமயந்தியானவள், போதலும்-வருதலும், அன்னம் அன்னப்புள்ளானது, முன் கூறிய-முன் சொல்லிய, அற்றைநாண்முதல-அன்றையநாள்முதலாக முன்னுறும - எதிரே தோன்றுகிற, உருவென-உருவெளித்தோற்றமென்று, முன்னினன்-நினைத்தான் — எ-று, அரோ அசை (கருத்து) சோலையில் நளன்முன்னே தமயந்திவருதலும் அவனுருவெளியென்றெண்ணினனென்பதாம் (௫௬)

மடவாளுருவெளி மன்னன்றோண்மிசை
யிடையறாவிழைவுடனெனறுஞ்சூட்டலபோன்
மிடைமலர்ப்பூந்தொடைசூட்டமேவிய
சுடரிலைவேலினன்றோளின்வீழ்ந்ததே

(இ-ள்) மடவாள்-தமயந்தியானவள், உருவெளி உருவெளியாய்த்தோன்றி, மன்னன்-நளமகாராஜனுடைய-தோள்மிசை, தோளின் மேல இடையறா இடைவிடாத விழைவுடன் ஆசையுடனே என்றும்-என்றைக்கும், சூட்டலபோல-சூடுவதுபோல, மிடை-நெருங்கிய மயிர் மலராற் றொடுத்த, பூந்தொடை-பூமாலையை, சூட்ட-தரிக்க, மேவிய-அகஇருக்கின்ற, சுடர்-காந்தி பொருந்திய இலைவேலினான்-இலைபோன்றவேற்படையுள்ள நளமகாராஜன், தோளில-புயங்களில், வீழ்ந்தது-விழுந்தது — எ-று, (கருத்து தமயந்தியானவள் உருவெளித்தோற்றமெனமாலைசூட அம்மாலைநளனுடையதோளில் வீழ்ந்ததுஎன்பதாம். (௫௭)

உருவெளிபாகயான்கண்டலெனவுண்ணுதன்
மருமலர்மாலையைவீணர் தலிததெனவ
மரசனுமெண்ணினனவெருந் ஈட்டிய
தெரிபலகாண்கிலெனத்தருமர்தானரோ

(இ-ள்) உருவெளியாக - உருவெளித்தோற்றமாகயான் கண்டது என,
[illegible]